ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1-0

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ. 3—0
6-மாத சந்தா ,,	—	,, 1-12
வெளி நாட்டிற்கு ,,	—	,, 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, பிரமோதூத வருஷ சித்திரை மீ 8உ (20—4—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 47

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது.

உலகப் பிரசித்தி பெற்ற

மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, நீரெச்சரிக்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலைசெய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

நீரழிவுக்கு கைகண்ட மருந்து.

பழனி ஆர். எம். கே. அப்ரேக் செந்தூரம்

இதோ! ஒரு மருந்துக்கும் வசப்படாத வியாதி இந்த மருந்தில் தீருவது வெகுஆச்சரியமாயிருக்கிறது. இப்படி சிரேஷ்டமானமருந்து இதுவரை வெளிவரவில்லை. எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். நீரழிவினால் ஜாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நாட்பட்ட அஸ்திவெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல், ஈ எறும்பு மொய்த்தல் நாவரட்சி, மலபந்தம், உடம் பெரிவு, வெள்ளை, கடுப்பு, எரிச்சல் முதலிய சகலவித கர்ம வியாதிகளையுங்கண்டிப்பாய் நிவர்த்தியாக்கும். நீரிலுள்ள சர்க்கரையைக் குறைத்து சரீர வெளுப்பை மாற்றி தேஜஸ் பலம் கொடுக்கும். நீரிழிவால் வரும் பிளவை ரணங்களை ஆற்றும். பசி தீபனத்தை உண்டாக்கும் ஜீவாதார நாம்புகளை முறுக்கேற்றி, தாதுபுஷ்டியைக்கொடுக்கும். 40 நாள் மருந்து ரூபா 40. அனுபானம் ரூ. 10. ஆக ரூ. 50. 20 நாளைக்கு ரூபா 25. ஏழைகளுக்கு பாதி விலை.

நற்சாக்ஷி

நான் நீரழிவினால் அதிக உபத்திரவப் பட்டுக்கொண்டிருந்தேன். ஒருவேளைக்கு அரைக்கால்படி வீதம் நாள் ஒன்றுக்கு 30 அல்லது 35 தரம் நீர் போய்க் கொண்டிருந்தது. அதிகப் பசியும் தாகமும் ஏராளமாயிருந்தது. தங்களுடைய அப்ரேக் செந்தூரத்தை வெண்ணெயில் 15 நாள் சாப்பிட்டேன். என் வியாதி பூராவும் சொஸ்தமாகிவிட்டது. நீர் சாதாரணமாய் போகிறது, பசி, தாகம் இயற்கை நிலைக்கு வந்துவிட்டது. சரீரத்திலுள்ள இயக்கமெல்லாம் நீங்கி நல்ல ரத்தம் உண்டாகி சரீரம் நல்ல தேஜஸ் அடைந்துவிட்டது. சித்த ஆயுர்வேத வைத்திய விஷயமாய் தாங்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தையானது மென்மேலும் விருத்தியாகி பொது ஜனங்களுக்கு பேருதவி ஆகிர்களென்று சதா ஈஸ்வரனை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

ராமசாமி அய்யர், முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ் பண்டிட் பழனி.

நீரழிவில் கிருமி யுண்டான நிலைமையிலும் கூட நமது அப்ரேக் செந்தூரம் சொஸ்தம் செய்திருப்பதை கவனியுங்கள்

தங்களுடைய அப்ரேக்செந்தூரம் சாப்பிட்டதில் தடவை 1க்கு சின்ன படியால் ஒருபடி வீதம் பகலில் 10 தடவையும் இரவில் 6 தடவையும் நீர்போனது இப்பொழுது நின்றுவிட்டது. ஒரேயிடத்தில் 4 தடவை ஒண்ணுக்குஇருந்தால் அந்த இடத்தில் மஞ்சள் நிறமாகவும், தோசைமாவு மாதிரி உப்பிப் பொத பொதவென்று இருந்தது இப்பொழுது கிடையாது. அதை குச்சியால் கிளரினால் அதில் மஞ்சள் நிறமான புழுக்கள் இருந்தது. அதுவும் இப்பொழுது கிடையாது. எனக்கிருந்த தாகமோசொல்லமுடியாது, நாள் ஒன்றுக்கு 30 சேருக்குக் குறையாமல் தாகத்துக்கு சாப்பிட்டேன், இப்பொழுது தாகம்: பூராவும் நின்று விட்டது. ஆகையால் தாங்கள் எனக்கு அனுப்பிய அப்ரேக் செந்தூரத்தை 60 நாள் சாப்பிட்டு எனக்கிருந்த நீரழிவு ரோகம் பூராவும் சொஸ்தமாகி விட்டது. ஆகையால் ஆயுசுள்ள அளவும் தங்களை மறக்கமாட்டேன். என்றும் நீடித்த நாள் ஆயுளோடு பூமியிலிருந்து என்னைப் போலுள்ள ஏழைகளுக்கு உபகாரம் செய்து கொண்டிருக்கும் படியாக கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

(Sd) வை. ரேத்தினம் பிள்ளை, நெல் வியாபாரம், வெட்டுக்காரத் தெரு, தஞ்சாவூர். 5-12-27

வெள்ளி பஸ்பம் பிரமேக லேகியம்

பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல் குத்தலை உடனே நிறுத்தும். அநேக மருந்துகள் சாப்பிட்டும் தீராத எவ்வளவு நாட்பட்ட வெள்ளை, வெட்டையானாலும் சரி லட்சியமில்லை. பிரமேகம், ரத்தம் விழுதல் தந்திமேகம், மஞ்ச வெள்ளை, எலும்புருகி, அஸ்திமேகம், அஸ்தி சுரம், சதா காய்ச்சல், ரத்த மின்மை, தூக்க மின்மை, கபாலக்கொதிப்பு, மூளை வரட்சி, சோம்பல், கை கால் அசதி, தாது பலகீனம், இந்திரியப்பை ரணம், சொற்பன ஸ்கலிதம், தாது அற்றுப்போதல், இந்திரிய ஒழுக்கு முதலிய வியாதிகளை கண்டிப்பாய் தீர்க்கும், தவாறது. தாதுவைக்கட்டி, சரீரதிடத்தைக் கொடுக்கும். ஆண்மை, வீரியம், அடங்காது. மகா அருமையான மருந்து.

குறிப்பு:—சதை பிடிக்காமல் கணச்சூடு, அஸ்தி சூட்டினால் எலும்புருக்கி ரோகமுள்ள குழந்தைகளும் ஆரம்ப வெள்ளை, வெட்டை ரோகமுள்ளவர்களும் ரூ 5க்கு 20 நாள் தனி பிரமேக லேகியம் சாப்பிட்டாலே போதும்.

20 நாள் வெள்ளி பஸ்பம் ரூ 20. 20 நாள் பிரமேக லேகியம் ரூ. 10 ஏழைகளுக்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்:

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

விலாசம் வேலுசாமி பழனி. சித்தவைத்தியசாலை, பழனி S I Ry

நியாயம் பொது
எல்லோரும் ஆலோசித்துப்பாருங்கள்

கைவல்யம்.

உலகம் அனித்தியமென்றும், உலக சுகபோகங்கள் மித்தையென்றும், உலக ஆசையின் எண்ணங்கள் மாயா சம்பந்தமானதோற்றமென்றும், உலக விவகாரங்கள் துக்கத்திற்கே ஏதுவென்றும் பிரசங்கித்து அதற்கு அநேகசாஸ்திரங்களிலிருந்து ஆதாரமாகப் பல சுலோகங்கள் சொல்லி சங்கராச்சாரிக்கு இடும்பிச்சையால் பலபார்ப்பார்கள் திருப்தியடைவதினால் சுவாமிகளுக்குப் பாத காணிக்கை செய்வதினால் கடாக்ஷமுண்டாகுமென்றும் பார்ப்பார்களுக்கு தான தருமங்கள் வழங்குதலே புண்ணியமென்றும் பல நாளாகச் சொல்லிப்பணமும் தான தருமங்களும் வாங்கிவருகிறார்கள்.

ஆனால் தங்களுக்கு வேண்டிய உலகபோகங்களைத் தேடிக் கொள்ளுவதிலும் தற்கால நாகரீகங்களின் அவசியத்திற்கும் சுகங்களின் ஆசைக்கும் வேண்டிய சாமக்கிரிகைகளைச் சேகரித்துக்கொள்ளுவதிலும், பின்னால் தங்கள் குடும்பம் கஷ்டமில்லாமல் வாழுவதற்கு வேண்டிய சாதனங்களை சம்பாதித்து வைப்பதிலும், பார்ப்பார்களுக்கும். உபதேசம் செய்யும் சாஸ்திரிகளுக்கும் உலகமானது மித்தை, அவித்தை, மாயை, துக்கம், என்று தோன்றுவதில்லை. அவர்கள் மற்றவர்களுக்குக் காட்டும் பிரமாண நூல்களை தங்களுக்குப் பிரமாணமாகக் கொள்ளுவதுமில்லை. இது என்ன அதிசயம பார்த்தீர்களா! புத்தியிருப்பவன் புத்தியில்லாதவனை ஏமாற்றுகிறான் ! என்று சொல்லுவதற்கு ஏதுவாகவிருக்கும் இந்த இடத்தைக் நன்றாய்கவனித்துப்பாருங்கள்.

பிர்மஸ்ரீ சங்கராச்சாரி தவசிருப்பதாகச் சொல்லி ஊர் ஊராகப்போகும் தவசாலும், அவரின் கூட்டத்தாருக்குச் செய்த தானதருமங்களினாலும், நமது உலகத்திற்காவது ஜனங்களுக்காவது எவ்வித நன்மையும் வந்ததில்லை என்றும் வரப்போகிறதில்லையென்றும் பிரத்தியக்ஷ நியாயங்கள் அநேகம் எடுத்துக் காட்டியாயிவிட்டது. ஆச்சாரி சுவாமிகள் செய்துவரும் தபசும் அவர் கூட்டத்தாருக்குக் கொடுக்கும் தானதருமங்களும் இவ்வுலகத்திற்குப் பிரத்தியக்ஷ பலனாகாவிட்டாலும் பரலோகத்தில் பயன் படக்கூடியதென்று சொல்லுவார்கள். இந்த நியாயம் ஒரு கொக்கு ஒரு ஏரியிலிருந்த மீன்களை அவைகளின் முன்னோர்கள் சுகமாக வாழும் இடத்திற்குக் கொண்டு போய்ச்சேர்ப்பதாகச் சொல்லி ஏமாற்றி அந்த மீன்களையெல்லாம் கொண்டு போய் ஒருபாறையில் தனக்குப் பலநாள் ஆகாரத்திற்குச் சேகரம் செய்து கொண்ட கொக்கின் கதையை ஒக்குமே யல்லாமல் நியாயமான யுக்தியோ புத்தியோ ஒத்துக்கொள்ளுமா? அல்லாமலும் அது சாஸ்திர விரோதமுமாகும். எந்த கர்மங்களும் அதன் பலன்களும் இகலோக பரலோக சுகங்களை ஒட்டியே பலன் கொடுக்கவேண்டுமென்பதை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. தபசால் கடவுளைப்பிரத்தியட்சமாகவடைந்தாலும் பூலோகத்தில் இனியும சிறிது காலம் சுகமாகவிருந்து பின் என்னிடம் வந்துசேருவாயாகவென்றே கடவுள் சொல்லிப்போனதாககடவுளுக்கும் தபசுக்கும் சம்பந்தப்பட்டகதைகள் சொல்லுகின்றன.

ஆசையான மனவிகாரங்களை அடக்கவும் அதனால் ஞானப்பயிற்சியடையவும் தபசு செய்கிறவர்கள் தனித்திருந்தோ காட்டிற்குப்போயோ தபசு செய்துகொள்ளவேண்டும். பட்டத்திற்கு வரும் சங்கராச்சாரிகள் ஞானத்திற்காகத் தபசு செய்யவேண்டுமானால் மடத்தில் தனி அறைகளும் அதற்கு வேண்டிய சாமக்கிரிகைகளும் அங்கேயிருக்கின்றன. அப்படியல்லாமல் ஊர் ஊராய்போய் உலக க்ஷேமதிற்காக தபசிருப்பதாகச்சொல்லுவதும் சாஸ்திரம், அதிகாரம், தாட்சியண்யம்பாவம்புண்ணியம்தாரித்திரம், சம்பத்து முதலியவைகளைக் காட்டும் நயவார்த்தை, புத்தியில்லாத பணக்காரனின் பயம், ஆசை, விபரமில்லாமல் நினைத்துக் கொள்ளும் செல்வவானின பெருமை, இத்தனையாலும் இடத்திற்கும் அவரவர்கள் மன நிலைக்கும் தகுந்தவாறு ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கும் ஏற்பாடு தபசாகுமோ? இந்தத் தபசு எந்த சனாதன தருமத்தை ஆதாரமாகப்பெற்றது? மனிதர்பரமாத்திகத்தின்பொருட்டுகாட்டில்கூடிய அந்தக்காலத்தில் இந்தத் தபசைக் கண்டுபிடிக்க வில்லையே? உடன் வாழும் மனிதருக்கு நாம் எண்ணற்ற கடமைகள் சேலுத்தவேண்டுமென்ற பிறவியைப் படித்தவர்கள் கூட்டத்திலிருந்து ஓட்டி மனிதரை யெல்லாம் பந்துக்களாக நினைக்கவேண்டுமென்ற தன்மையை விட்டு நிற்கும் இந்தத் தபசு முற்காலத்தில் காடுகளிலே சுற்றிய சில கூட்டத்தார்கள் திடீர் திடீரென்று ஊருக்குள் புகுந்து கலகம் விளைவித்து பணக்காரனை உபத்திரவப்படுத்தி ஊரைக் கொள்ளையடித்த இயல்பைக் காட்டிலும் மிகக் கொடியதாகவல்லவோ இருக்கிறது.

முற்காலத்திய இந்தியாவானது ஜனங்களில் பிராமண க்ஷத்திரியனென்கின்ற இருவகுப்பினருடைய அதிகார சுயேச்சையுள்ள ஏற்பாடுகளுக்கு யுத்தரங்கமாய் க்ஷத்திரியர் தங்களுக்கு சட்டப்படி அதிகாரமென்று எண்ணியிருந்த மகாஜனங்களை கொடுமைப்படுத்தியும் மற்றொருபுறம் பிராமணர்கள் ஜனங்களை கட்டியாள வேண்டுமென்ற கருத்துடன் அபரிமிதமான மதச் சட்டங்களைக் கற்பித்துச் செய்துவந்த கொடுமைகளினாலும் ஏழைகளின்மீதும் அஞ்ஞானிகள் மீதும் அதிகாரம் செலுத்தவேண்டுமென்கின்ற எண்ணம் இவ்விருதிறத்தவருக்கும் இருந்தபடியால் ஜனங்கள் சுதந்திரமிழந்து கொடுமைக்குள்ளாய் மனவேறுபட்டு ஒற்றுமையிழந்து அன்னியர் படையெடுப்பில் வெகுவாய் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பது இந்துதேசசரித்திரம். அந்த க்ஷத்திரியரில் பெரும்பாலர் அஞ்ஞானத்தில் மூழ்கி புரோகிதரால் ஏற்படுத்தப்பட்ட மூடக்கொள்கைகளுக்கு வசப்பட்டு ஜனங்களை வேறுபடுத்தி வந்தமையால் இந்தியாவானது முழுகிப்போயிற்று. ஜனங்களுடைய காலில்போட்ட புரோகிதக் கொடுமை என்னும் விலங்கைத் தறிக்க வகையில்லாமல் போய்விட்டது. புரோகிதர்களே இந்நாட்டிற்குச் சாபமாய் விட்டார்கள். பிராமணரும் க்ஷத்திரியரும் செய்த கொடுமையானது தொடர் வட்டியுடன் அவர்களையும் ஈனஸ்திதிக்குக் கொண்டுவந்து அன்னியர்களுக்கு அடிமைகளாக்கி விட்டது.

மத்திய காலத்தில் பிரபலத்தை அடைந்திருந்த பல ராஜாக்களை க்ஷத்திரியர்களல்லவென்றும் ஜாதியில் தாழ்ந்தவர்களென்றும் பிராயசித்தம் செய்து கொண்டாலே க்ஷத்திரியனாகலாமென்றும் அப்பொழுதுதான் சிம்மாசனம் நிலைக்குமென்றும் புரோகிதர்கள் சொல்லி யாகமென்றும், மந்திர கருமமென்றும், பிறவிக்குப் பிராயச்சித்தமென்றும், பல கிரிகைகள் செய்துகொண்டேயிருப்பார்கள். புரோகிதர் சொல்லும் மந்திர கிரிகைகளுக்கு வசப்படாத அரசன் நல்ல வம்சத்திலிருந்து உற்பத்தியாகாதவன் என்று முன்னமே ஸ்ரீ கிருஷ்ணரும், வீஷ்மரும், பிருகுமகாரிஷியும் சொன்னதாக இதிகாசங்களில் எழுதியும் வைத்திருக்கிறார்கள். விஷ்ணுவில் விசேடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணரும் க்ஷத்திரியரில் விசேடப்பட்ட வீஷ்மரும் ரிஷிகளில் பெரியவரான பிருகுவும். சொல்லியிருக்கிறார்கள் என்று இதிகாசங்களைக் காட்டினால் விபரமற்ற ராஜாக்கள் இந்த கிரிகைகளை யெல்லாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமது தாயார் தாழ்ந்த ஜாதியானிடமிருந்து நம்மை உண்டுபண்ணி விட்டாள் என்று உலகம் நினைத்துக் கொள்ளுமோ என்று பயந்து புரோகிதன் சொல்லுவதைப் பூர்த்தி பண்ணவே அவன் கருத்துச் சென்று அதைப் பின்னும் ஊர்ஜிதப்படுத்த வைதீகக் கோஷ்டிகளெல்லாம் சாஸ்திரத்திற்கு விரோதம்கூடாது என்று அதை நிலைநிறுத்தி விடுவார்கள். பின் வேள்விகளும் பிராயச்சித்த கருமங்களும் செய்யும் விவகாரங்களிலே போக்கிடம், ஆர்கள், காரியஸ்தர்கள் எல்லாம் வேலைசெய்யவும் இந்நாட்டிற்கு ஒரு பிராயச்சித்தம் ஒரு கர்மம் ஒரு நாளோடு முடிவதுமில்லை. புரோகிதனும் அவனைச் சேர்ந்த பார்ப்பார்களும் முன் சொன்ன ராஜாக்கள் இருக்கும்வரையிலும் நடந்து கொண்டேயிருக்கும். அப்படி நடந்து வந்த ராஜ்ஜியத்தில் மைசூர் ஒன்று. ஆதி சங்கராச்சாரியால் ஏற்படுத்தினசிரிங்கேரி மடம் மைசூரிலிருக்கிறது. சங்கராச்சாரி மடத்திற்கு மைசூர் ராஜா சிஷியர். மைசூர் மகாராஜர்வும் உயர்ந்த க்ஷத்திரியராவதற்கு யாகம் வேள்வி இன்னும் பலகர்மம் செய்வதும் புண்ணியத்தில் சிம்மாசனம் நிலைத்து நிற்க பார்ப்பானுக்கு தான தருமம் மந்திர ஜெபம் ஆச்சாரி சுவாமிகளின் தீர்த்தப்பிரசாத ஆசீர்வாதம் முதலியவைகளைத் தினமும் தவறாமல் நடத்தி வருவார். ராஜா உயர்ந்த க்ஷத்திரியனாவதற்கும் புண்ணியம் சம்பாதிக்கவும் பிரயத்தினம் செய்துகொண்டிருந்ததை அனுசரித்து அவரைச்சேர்ந்த குட்டி ராஜாக்கள், சேனாதிபதிகள், பணக்காரர்கள் இவர்களும் தங்களையும் உயர்த்திக்கொள்ள பிரயத்தினப் பட்டுக்கொண்டிருந்ததினால் பணமும், காலமும், அறிவும் வீணாக்கப்பட்டு நாட்டில் ஒழுங்கான காவல்இல்லாமல் ஜனங்களின் ஒற்றுமையிலும் க்ஷேமத்திலும் கவலையே இல்லாமல் குருவான சங்கராச்சாரியிடமும் தெய்வமான சாமுண்டியிடமும் தேசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த சமயத்தில்தான் அந்த ஊரில் வளர்ந்துவந்த ஐதர் அலி என்பவர் மைசூரைப் பிடித்துக் கொண்டார்.

அந்த சமயம் மைசூர் என்ன பாடுபட்டிருக்கும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பார்ப்பானுக்கு பூணூலும் தந்திரமுமிருந்தது. குருவின் தவசும், பார்ப்பானுக்கு கொடுத்த தான தருமங்களும், சாமுண்டேஸ்வரியின் பூசையும் ராஜாவைக் கைவிட்டு விட்டது. சங்கராச்சாரியார் உலக க்ஷேமத்திற்கு செய்யும் தவசு சத்தியமானால், பார்ப்பார்களுக்கு கொடுத்த தானதருமம் உண்மையில் பலன் கொடுப்பதாயிருந்தால், பார்ப்பான் சொல்லும் மந்திரத்தில் தேவகடாட்சமிருப்பதாகவிருந்தால் இவையனைத்தும் மைசூர் மகாராஜாவிற்கல்லவா முதன்முதல் உதவவேண்டும். அப்படி உதவிற்றா? உதவவில்லையே மைசூர் ஐதர் அலியால் பிடிக்கப்பட்டவுடன் ராஜகுடும்பமும் பார்ப்பானுக்கே கொடுத்து மந்திர கிரிகைகள் செய்து பாழடைந்த குடும்பங்களும் சங்கராச்சாரியுடைய தவசும் தீர்த்தப்பிரசாதமும் பட்டபாட்டை நாமெல்லாம் பக்கமிருந்து பார்க்காவிட்டாலும் ஊகித்துப் பார்த்தால் ஒருவாறு உணரலாமே. மைசூர் ராஜாவிற்கு

[தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க]

காந்திப்போரைப்பற்றி

மௌலானா மகமதலியின் அபிப்பிராயம்

—————0—————

முஸ்லிம்கள் ஏன் சேரவில்லை

—————0—————

"இந்தியன் டெய்லி மெயில்" பத்திரிகை நிருபர் மௌலானா முகமது அலியைப் பேட்டி கண்டு பேசிய பொழுது அவர் திரு. காந்தியாரின் சட்ட மறுப்பியக்கத்தைக் குறித்து பின் வருமாறு தெரிவித்தார்:-

1922-வது வருஷத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துவதற்கு மிகப் பொருத்தமான சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. அப்பொழுது காந்தியார் திடீரென்று லார்டுரீடிங்கிற்கு தனது இறுதி எச்சரிக்கையை அனுப்பிவிட்டு பார்தோலி போரால் ஜனங்களது உற்சாகத்தை கெடுத்து விட்டார்.

முஸ்லிம்கள் மனப்பான்மை

காந்தியார் சட்ட மறுப்பு இயக்கத்தைக் குறித்து முஸ்லிம்களது மனப்பான்மை இன்னதென்பதை கிலாபத் கமிட்டியார் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாக விளக்கியிருக்கிறது. முஸ்லிம்கள் சட்ட மறுப்பியக்கத்தினின்றும் விலகி நிற்கும்படியாகச் செய்த காரணத்தைத் தவிர, அவ்வகுப்பினர் ஏன் அவ்வியக்கத்தினின்றும் விலகி நிற்கிறார்கள் என்பது வெளிப்படையான விஷயமாகும்.

என்னை ஏராளமான ஜனங்கள் பின்பற்றக்கூடிய ஒரு முஸ்லிம் தலைவராவது, முஸ்லிம்களை காந்தியாரின் சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளாதிருப்பதைக் குறித்து சந்தோஷமடைகிறேன். செல்வாக்கைப் பெற்ற சில முஸ்லிம்கள் அதில் சேர்ந்திருக்கின்றனர்.

அவர்கள் தாங்கள் பிரபலமாக வேண்டுமென்ற கருத்துடையவர்களேயன்றி வேறன்று. சில வேளைகளில் அவர்கள் மிக மோசமான வகுப்பு வாதிகளாக நடந்திருக்கிறார்கள்.

சந்தர்ப்பத்திற்கேற்ற தாளம்

சட்ட மறுப்பு இயக்கமானது ஜனங்களிடையே இப்பொழுது மிகவும் மும்முரமாகப் பரவிவருமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். அதனால்தான் அவர்கள் சட்ட மறுப்பு செய்கிறார்கள். சந்தர்ப்பத்திற்கேற்றதாளம் போடும் அவர்களது தேசியக் கொள்கையானது ஏற்கனவே அதன் பலனைக் காட்டியுள்ளது.

ஆனால் பாமர ஜனங்களது மனமானது ஸ்திரமானதல்ல. ஆத்திரத்தால் அவர்கள் உண்மையான விஷயங்களை மறந்து விடுகிறார்கள். அவர்கள் ஆத்திரமானது சீக்கிரம் அடங்கி விடும் தன்மையதே. அப்படி ஆத்திரம் அடங்கி சுயபுத்தி வந்தபோது அவர்கள் எவ்வித லட்சியத்தை சிருஷ்டித்து அதையடைய ஆத்திரங் கொண்டார்களோ அதே லட்சியத்தை நாசஞ் செய்து விடுவார்கள். இந்த முஸ்லிம் தலைவர்களுக்கும் இவ்வித கதியே நேரிடப்போகிறது.

சட்ட மறுப்பு

சட்ட மறுப்பு இயக்கம் எப்படி முடிவுறும் என்பதைக் குறித்து என்னால் ஜோதிடம் சொல்ல முடியாது. இவ்வித அரசியல் ஜோதிடம் மிகசாதாரணமானதென்பதையும் நானறிவேன். ஆதலால் நான் சொல்வதை ஜோதிடமாகக் கருதிவிடக் கூடாது. இவ்வித இயக்கங்களில் அனுபவ முதிர்ச்சியால் சொல்லக்கூடிய, காரணகாரியங்களை அடிப்படையாகக்கொண்ட வார்த்தைகள் என்று கருதவேண்டும்.

இவ்வியக்கத்தை ஆரம்பிப்பதற்கு இது தக்க தருணமல்ல. முன்னால் காந்தியார் கைதியான பொழுது சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துதற்குத் தக்க சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. ஆனால் சுயராஜ்யக் கட்சியினருக்காவது அல்லது வைதீக ஒத்துழையாமைக் கட்சியினருக்கோ சட்ட மறுப்பை ஆரம்பித்து நடத்த தைரியமும் ஞானமும் இல்லாது போய் விட்டது. அவர்கள் அப்பொழுது பிரிட்டிஷ் சர்க்காரைப் பின்பற்றி நடக்க முயன்றனர்.

பண்டித மோதிலால் நேருக்கு

பண்டித மாளவியா இந்திய சட்டசபையிலிருந்து ராஜிநாமா செய்ததற்காக பண்டித மோதிலால் நேரு அவரைப் பாராட்டியது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஏனெனில் இப்பொழுதுதான் இரண்டு பண்டிதர்களும் சட்டசபையில் வெறும் வார்த்தைகளால் போராடுவதின் பயன் இன்னதென்பதை உணர்ந்தனர் போலும். பண்டித நேரு சட்டசபையில் பிரவேசிக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒத்துழையாமை இயக்கத்தை நாசப்படுத்தினர். அப்படி அவர் சட்டசபையில் பிரவேசித்து பிரமாதமாக சாதித்தது ஒன்றுமில்லை. சட்டசபையிலிருந்து அவர் வெளியேறும்படி நாங்கள் எவ்வளவோ முயற்சித்தும் அவர் அப்பொழுது எங்கள் வார்த்தைக்கு செவி சாய்த்தாரில்லை.

இராஜிநாமாவின் குட்டு

பண்டித மதன மோகன மாளவியா நெடுநாள் சட்டசபையை விட்டு வெளியே யிருக்கப்போவதில்லை. அவரைப் பின்பற்றக் கூடியவர்களாக வுள்ள மகாராஷ்டிர-பிராமணர்களும் அடுத்த தேர்தலுக்குப்பின் மீண்டும் சட்டசபைக்குள் வந்து இருக்கப்போகிறார்கள். மகாராஷ்டிரப் பிராமணர்களுக்கு ராஜிநாமா சாதாரணமானதாகும்.

காந்தியார்கருத்து

உப்புச்சட்டத்தை சீர்திருத்தியமைக்க வேண்டுமென்பது மட்டும் காந்தியார் கருத்தல்லவென்பதை நானறிவேன். நியாயமற்ற இவ்வுப்பு வரி இருந்துகொண்டிருப்பதையும் அதனாலுள்ள தீமையும் நாமறிவோம். காந்தியார் குறைந்தவிலைக்கு உப்பு விற்க வேண்டுமென்ற கருத்துடன் உப்புச்செய்ய ஆரம்பிக்கவில்லை. அவர் தன்னை கைது செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடனேயே அவ்விதம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். அவர் கைதியாக வேண்டுமென்பதே அவரது ஏக கருத்து. அப்படிக் கைதியானால் 1922வது வருஷத்திலிருந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது ஜனங்களைத் தட்டி எழுப்பலாமென்று அவர் கருதுகிறார். சர்க்கார் அடக்கு முறையால் ஜனங்கள் எழுச்சியுறுவார்களென்பதும், இதுவரைதான் சொல்லிவந்தபடி அரசியல் உலகிற்குப் பிரயோஜனமற்றவராக இருக்கலாகாதென்பதும் அவரது எண்ணமாகும்.

சர்க்கார் செய்யவேண்டியது.

சர்க்கார் காந்தியாரின் இயக்கத்தை அஹிம்சா முயற்சிகளாலேயே பயனற்றதாகச் செய்ய முடியும். லார்டு இர்வின் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்களை அழைத்து அவர்களை அஹிம்சா வழியில் நடக்கச்சொல்லுவதே அதற்கு சிறந்த வழியாகும்.

ஹிந்து முஸ்லிம் பிரச்சினை.

முதலாவதாக இந்து முஸ்லிம் பிரச்சினையைத் தீர்த்துவைப்பது எவ்வளவு அவசியமானதென்பதை கிலாபத் கமிட்டி அறிக்கையில் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறோம். காங்கிரஸ் செய்வதுபோல் வகுப்பு பிரச்சினையை கவனியாமல் இருப்பதாலேயே இப்பிரச்சினை முடிவுறாதிருக்கிறது.

இப்பிரச்சினை முடிவுறாதிருக்கும் வரை முஸ்லிம்கள் இப்போரில் சேரமாட்டார்கள். இதனால் காந்தியார் வெற்றியடைவதும் கஷ்டமானதாகும். ஆனால் சர்க்கார் அடக்கு முறையை விடாது கையாண்டார்களேயானால் காந்தியார் ஒரு வேளை இன்னும் அதிகமாக வெற்றியடையக் கூடும். காந்தியாரும் சர்க்காரும் இருவருமே வீண் போராட்டம் செய்கிறார்கள். காந்தியார் முஸ்லிம்கள் விஷயத்தில் உண்மையாக நடக்கவில்லை. சர்க்கார் பயமுறுத்தலாலும் அடக்கு முறையாலும் வீணாகப் போராடுகிறார்கள். அந்தோ! இவ்வுலகம் அதிக ஞானமுடையதாகத் தெரியவில்லை!

சர்க்காருக்கு புத்திமதி.

இந்த சந்தர்ப்பத்தில் சர்க்கார் சத்தியாக்கிரகிகளை ஒன்றுஞ் செய்யாது அவர்கள் உப்புச் செய்து கொண்டிருக்கும் படி விட்டுவிடுவதே மேலானது. இன்னும் இரண்டு மாதகாலம் வேண்டுமானாலும் இவர்கள் உப்புச் செய்து கொண்டே போனால் அதனால் மோசம் போய்விடாது. சர்க்கார், உப்பால் வரும் வருமானமாகிய 7 கோடி ரூபாயை இழக்க நேரிட்டாலும் அதனால் சர்க்கார் பாப்பராகி விடாது. இவ்விதம் சும்மா இருந்தால் மட்டும் போதாது.

சத்தியாக்கிரகிகள் உப்புச் செய்வதைக் குறித்து ஒன்றும் பேசாமலே, சர்க்கார் உண்மையான வகுப்புப் பிரதிநிதிகளையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் திரு. காந்தியார் திருவல்லபாய் பட்டேல் திரு. நாரிமென் உட்பட எல்லாத்தலைவர்களையும் சமரச மகாநாட்டிற்கு வரும்படி அழைக்கவேண்டும்.

லண்டன் மகாநாடு.

உடனே மகாநாட்டைக்கூட்டி, பிரிட்டிஷார் உண்மையில் இந்தியாவிற்கு குடியேற்ற ஆட்சி வழங்கவேண்டுமென்ற விருப்பமுடையவர்களாக இருப்பார்களேயானால், இந்தியாவின் எண்ணமெல்லாம் இப்பொழுது தண்டியை நோக்கிக்கொண்டிருப்பது போல் இராது லண்டனை நோக்கும்.

பூரண சுயராஜ்யத்தைவிட நிச்சயமாக குடியேற்ற நாட்டு ஆட்சியை அளிப்பார்களேயானால் ஜனங்கள் பூரண சுயராஜ்யத்தைப் பற்றிப் பொருட்படுத்தமாட்டார்களென்பதை நான் நன்கு அறிவேன்.

இப்படி சர்க்கார் குடியேற்ற ஆட்சி அளிப்பதைக் குறித்து துரிதமான வேலை செய்யாதிருந்து கொண்டிருக்கும் பொழுது, காந்தியார் அக்குடியேற்ற ஆட்சி வருவதைக் கூட தனது செய்கையால் காலதாமதப்படுத்துகிறார்.

இப்போராட்டம் எவ்விதமிருந்த போதிலுமிருக்கட்டும். நமது ஜனங்களை நோக்குமிடத்து அவர்கள் இன்னும் யந்திரங்கள் போலிருக்கிறார்களேயன்றி, தாங்களாக நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து யோசித்துப்பின் பற்றும் அறிவு வரப்பெறாதிருக்கிறார்கள்.

யந்திர மனிதர்கள்.

நமது இளைஞர்கள் தேசீய இயக்கத்திலீடுபடுகிறோமென்று தவறான வழிகளில் பிரவேசித்து வருகிறார்கள். பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் எவ்வளவு பொய்மையுடையதோ, அவ்வளவு பொய்மையுடையது இவர்களுடைய சத்தியாக்கிரகம். இவர்கள் உண்மையை பின்பற்றுகிறவர்களானால், இவர்களைப் பெண்மக்கள் தங்களது மணவாழ்க்கையின் உரிமைகளைக் கொடுக்கும்படி போராடிவரும் குறைகளைத் தீர்க்கவேண்டும். நம்மில் அநேகர் யந்திரங்கள் போலவே நடந்து வருகிறோம். நம்மில் அநேகர் காலையில் பத்திரிகை வாசிக்கும் வரை தங்களது அபிப்பிராயத்தை சொல்ல வன்மையற்றவர்களாக விருக்கிறார்கள். அந்த பத்திரிகைகளும் முழுதும் பொய்யான செய்திகளுடன் வெளிவருகின்றன. அச்செய்திகளைத்தான் நமது யந்திர மனிதர்கள் படித்துவிட்டு அதையே திரும்பத் திரும்பச்சொல்லி வருகிறார்கள்.

இதிகாசங்கள்

இராமாயணம்—யுத்த காண்டம்

கட்டுரை—7

(திரு. சந்திரசேகரப்பாவலா)

சருக்கங்கள் 30 முதல் 33 முடிய

இராவணன் தன் அரண்மனைக்குள் சென்று வித்யுச்சிஹ்வனை யழைத்து பல பரிசுகளும் தந்து இராமனுடைய தலையையும் வில்லையும்போல பொய்யாகச் செய்துவைக்கச் சொல்லி சீதையை அழைத்தான். அவன் அவளை நோக்கி "சீதே! இனி என் செய்வாய்? நீ என்னைச் சேருமல் முடியாது. இராமனை என்னுடைய வீரர் கொன்றுவிட்டு அவனுடைய தலையையும் வில்லையும் இங்கே கொண்டுவந்திருக்கின்றனர். இராமன் [illegible] [illegible] என்னுடைய [illegible] இராமனுடைய [illegible] சென்றான். [illegible] திசை [illegible] ஓடி [illegible]. இலக்குவனும் [illegible] ஓடிவிட்டான். விடணன் சிறை பிடிக்கப்பட்டான். அனுமான் சுக்கிரீவன் முதலியோர் தலையிழந்து [illegible] கிடக்கின்றனர். [illegible] இராமனுடைய தலையை [illegible]" என்றுசொல்லி வித்யுச்சிஹ்வனை அழைத்தான். அவன் இராவணனை, "இராமன் [illegible] அதை அவள் பக்கத்தில் வை" என்றான். அவன் அவ்வாறே சீதையருகே வைத்துச் சென்றான். "இதோ பார், சீதே! இனியாவது என் [illegible] கேள்" என்றான் இராவணன்.

அதைக்கண்டவுடனே சீதை கோவென்றலறி "அடி பாதகி, கைகேசி! உன் எண்ணம் ஈடேறிற்ரு?" என்று சொல்லிக் கீழே விழுந்து மூர்ச்சையடைந்து பின் தெளிந்தெழுந்து இராமனுடைய தலையை மடியிலே எடுத்து வைத்து உச்சிமோந்து, "ஐயோ! என்னைத் தனியே தவிக்க விட்டுச் சென்றீரோ! நான் என்ன பாவம் செய்தேன்? மிக வல்லவராகிய தங்களை எப்படிக் கொன்றார்கள்? காளராத்திரி என்ற தீயபெண் தங்களைத் தழுவி அபகரித்து விட்டாளோ தங்களுடைய வில்லும் இப்படிக் கிடக்கின்றதே! என்னை திக்கற்றவளாக விட்டுப் போனீரே. அயோத்திக்குப் போய் [illegible] செய்து அக்கியால் எரிக்கப்பட வேண்டிய உடல் இப்படித் தர் மயானத்தால் நரியும் பேயும் தின்னக்கிடக்கின்றதே. இராவணா! என்னையும் கொன்று இராமனுடனுடன் சேர்த்துவை.

என்று புலம்பி அழுதாள். அப்போது ஓர் காவலன் தோன்றி பிரகஸ்தன் அவசரமாக அழைக்கானெனக் கூற இராவணன் சீதையை விட்டுச் சென்றான். பொய்த்தலையும் வில்லும் மறைந்தன. இராவணன் சேனைகளை உடனே தயார் செய்தான்.

(இராவணனால் நியமிக்கப்பட்டு சீதையைக் காத்துவரும் வீடணனுடைய மனைவியாகிய சரமை சீதையைத் தேற்றி அக்கிரத்தில் பொய்யெனக் கூறியதோடு இராமனுதியர் அங்கு வந்திருப்பதையும் இராவணன் சேனையை [illegible] பதையும் உயிர்போனலும் சீதையை விடாத இராவணனுடைய [illegible] நேரில் சென்று [illegible] அவளிடம் புகன்றாள். அதனால் சீதை தெளிந்து அழுகை ஒழிந்தாள். இவ்வரலாற்றை ஆராயவோம்.

இராமன் இறந்த செய்தியை உணர்ந்தவுடன் சீதை கைகேயியை நிந்தித்தாள். கைகேயி குற்றமற்றவள் என்பதை முன் பல இடங்களில் விளக்கினோம். [illegible] வெளியீடாகிய [illegible] 31ன் [illegible] பக்கம் 131ல் "சீதை கைகேயியை நிந்தித்தது பொருந்தாது. முன்பு அப்படியொன்று [illegible] இராமன் [illegible] கிருர். அது சீதைக்குத் தெரியும். மேலும் கைகேயிக்கு வரங்கொடுத்த உண்மையான காரணத்தை ராமன் பரதனுக்குச் சொன்னது சீதைக்குத் தெரியாதா? கைகேயின் ஸ்தானத்தில் வேறு எந்த ஸ்திரீயும் அப்படியே நடந்திருப்பாள். பிறகு சுராக [illegible] இருக்க, நிரபராதியான கைகேயியை நிந்திப்பது அநியாயம். கேவலம் லோகத்து ஸ்திரீகள் நடப்பதுபோல் சீதையும் நடத்திக் காட்டினுளென்றே சொல்லவேண்டும். ராமனைப்போல் தானும் மனுஷ்யபாவனையையே காட்டுகிருள். மகாலக்ஷ்மிக்குத் தெரியாததுண்டோ?" என எழுதியிருக்கிறார். இது இவர் முன் பல இடங்களில் எழுதிய உண்மையே. ஆனால் இங்கே இவர் சீதை மகாலட்சுமியென்றும் அவள் உலக மக்களைப்போல சாதாரணமாக நடத்திக் காட்டுகிருள் என்றும் புதிதாகக் குறித்திருக்கிருர். அறிஞராகிய ஐயங்கார் இவ்வாறு எழுதியதுதான் வியப்பாக இருக்கிறது. மனிதரைப் போல் நடந்து காட்டவேண்டுமென்றால் அரக்கரிடை அகப்பட்ட அச்சமயத்திலுமா அவ்வாறு நடந்து காட்டவேண்டும்? மக்களை நல்வழிப் படுத்துவதற்கென்றால் மக்களிடையன்றோ செந்நெறி நடந்து காட்டவேண்டும்? அதைவிட்டு அரக்கரிடை மயங்கி அழுது விழித்தல் என்? மனிதரைப்போல காட்டினதால் சீதைக்கோ மக்களுக்கோ யாது பயன்? அழுது விழுவதற்கு ஒரு வழி காட்டியாவேண்டும்? அதற்கு உலகமாதாவாகிய தெய்வமா வழிகாட்ட வேண்டும்? உலகம் எவ்வளவு அறியாமையில் அழுந்திக் கிடக்கின்றது? ஈதெல்லாம் அறியா மக்களை ஏமாற்றும் போலி உரைகளேயன்றி வேறு என்னும்?

மகா வீரனும் இராவணீச்வரன் என "ஈச்வர பட்டம் பெற்றவனுமாகிய உத்தமத் தமிழ் மன்னன் இராவணன் இவ்வளவு இழிவாக ஒருபெண்பாலிடை நடந்திருப்பானு என்ற செய்தி அறிஞரால ஆராய்ந்தர்பாலது தனது தங்கையை அவமானம்செய்ததற்காக இராவணன் சீதையைத் தூக்கிவந்து அவமானம் செய்தான் என்று சொன்னுலும்பேரறிஞனுகிய இராவணனுடையபெருமைக்கு அதுஇழுக்காகுமன்ருே? என்ருல் உண்மை [illegible] இங்கே இராவணன் இராமனைப் போல தலைசெய்து சீதைமுன் போட்டுப்போய் புணர்ந்தானென்று கூறுங்கதை பொய்க்கதை இது வால்மீகியாலே எழுதப்பெற்றதன்று. மூப்பதாம் சருக்கக் கடைசியில் பக்கம் 25ல் திரு சீனிவாச ஐயங்காரும், "[illegible] 30, 31, 32 வது சர்க்கங்களும் இவ்வாமலேயே பூர்வோத்ர சுந்த பொருந்த வென்றும், இவை வால்மீகியால் செய்யப்பட்டதல்ல வென்றும் சிலர் எண்ணுகிறார்கள்." என்று குறிப்பு எழுதியிருக்கிருர். இதனுல் இறந்து முன்னர் நம் பல இடங்களிலும் எடுத்துக் காட்டியிருக்கும் உண்மைகளாலும் பல பெரிய பொய்க்கதைகள் பின்னேருவே இடைச் செருகலாக மாற்றியும் புகுத்தியும் சிதைத்தும் வைக்கப்பெற்றுள்ளன என்ற உண்மை வெளியாகின்றது. இதனுல் பக்கிமோத்தமனுகிய இராவணனுக்கும் குற்றம் காட்டவேண்டுமென்று பிற்கால ஆரியர் இத்தகைய பொய்க்கதைகளைப் புனைந்து வைத்திருக்கல் வேண்டும். அவைகளில் சேர்ந்தனவாகவே இருக்கவேண்டும் இராவணன் சீதையைக் கொண்டுவந்து பல வாறு அவமானப் படுத்தியதாகக் கூறும் செய்திகளும் ஆனல் அவர்கள் இங்ஙனம் தமக்கே கேவலம் வாய்க்கக்கூடிய செய்திகளை எழுதி வைப்பார்களா என்ருல், கூறுதும். தமக்கு எத்தகைய கேவலங்கள் வருவதாக இருந்தாலும் உயர்ந்தோரை அவமானப் படுததுவதில் இக்காலத்திலும் பலர் முன் வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்ருேம். சில இழிந்த மனப்பான்மையுடைய மக்கள் பொய்யாக, "இன்னுர் என்னை வைப்பாட்டியாக வைத்திருந்தார். அவருக்கு நான்குப் பிள்ளைகளைப்பெற்றேன்" என்றும், "அவருடைய பெண்டாட்டியை நான் வைப்பாட்டியாக வைத்திருக்கிறேன்" என்றும் நீதி மன்றங்களில் கூடக் கூறுகின்ருகள் பிறரை அவமானப்படுத்துவதற்காக சில பெண்கள் தங்களுடைய காதைத் தாமகவே அறுத்துக்கொண்டுகூட அவர் அறுத்தார் இவர் அறுததார் என நீதி மன்றங்களில் கூற முன் வருகின்றனர். இத்தகைய உலக இயல்பு இழிந்த மனப்பான்மையுடைய மக்களிடைக் காணப்பெறுவதால் ஆரியர் 'ஒரு குற்றமும் அறியாத சூர்ப்பனகையை தன தம்பியால் ராமன் மானபங்கம் செய்தான் அது அவனுக்கு மிக இழிவு" என்ற உண்மையை அறிந்த இராவணனும் சீதையை எடுத்துச்சென்ருன் என்று பல பொய்கதைகளைக்கட்டி அவனுக்குச்சற்று மாசுண்டாமாறு செய்திருத்தல் வேண்டும் என்பதை அறிஞர் சிந்தித்துத் தெளிவார்களாக. உத்தமனுகிய இராவணன் இழிந்தோராகிய இராமனுதியரைப்போல இழுக்கான செயல் செய்திருப்பானு? அது தங்கையைக் கெடுத்த இராமனுதியருடன் அவன் போர் தொடுத்திருப்பான் என்பது உண்மையே அதைப் பற்றி உத்தரகாண்ட ஆராய்ச்சியில் விரித்தாராய்வோம்.

தன்னை விட்டு ஓடிப்போன பகைவனுகிய வீடணனது மனைவியான சரமையை இராவணன் இன்னும் நம்பிக்கையுடன் சீதைக்குத் தோழியாக வைத்திருந்தானென்பது புதுமையே! கம்பர் இக்கட்டுரையில் நாம் கூறிய நிகழ்ச்சிகளொன்றையும் கூறவில்லை. இனிமேற் செல்லுதும்.

இதோ! முற்றிலும் இனுமா!!

காசியில் மூன்று நாள் என்ற

ஓர் இனிமையான புத்தகம்

வெளிவந்துவிட்டது

உடனே ஒரு அணு தபால் ஸ்டாம்புடன் தங்கள் முழு விலாசத்தை தெளிவாய் எழுதி அனுப்புங்கள். அடுத்த தபாலில் மேற்படி புத்தகம் தங்களுக்கு இனமாக வந்து சேரும்.

கே. எஸ். முத்தையா அண்டு சன்ஸ்,

சில்க் ஹவுஸ், மதுரை.

ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் தாலூகா

சுயமரியாதை மகாநாடு.

திரு. S. ராமச்சந்திரன் B.A.B.L., தலைமைப் பேருரை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இச்சுயமரியாதை இயக்கம் மாகாணமெங்கும் காட்டுத்தீ போல் பரவி வருகின்றது. மாகாணத்தில் உள்ள தலைவர்கள் பலரும் பல மேடையில் கூடிப் பேசப் புகுந்து விட்டார், ஒரே தந்தைக்கு உற்பத்தியான சகோதரர்கள் போன்று மக்கள் எல்லோரும் பேதமற்று வாழ்வதற்கு சகலரும் முயற்சி செய்ய வேண்டியது எல்லாருடைய கடமையாகும் எனவும் கூறுகின்றேன். சுயராஜ்யமின்றி சமத்துவமின்றி சுயாட்சியை விரும்புவது வீண் கனவாகும். சுயமரியாதை இயக்கமானது உலக இயக்கத்தைச் சேர்ந்தது. ஒவ்வொரு தேசமும் எல்லாத்துறைகளிலும் சுயமரியாதை இயக்கத்தின் பலனாக விரைவாக முன்னேறிக் கொண்டேயிருக்கும் பொழுது நாம் மாத்திரம் எவ்வளவு காலம் நொண்டிக் கழுதையைப் போல் சென்று கொண்டிருப்பது! நாமும் உலக பந்தய ஓட்டத்தில் விரைவாகச் செல்ல சுயமரியாதை இயக்கம் தோன்றியிருக்கிறது. கீழ்நாட்டில் ஜப்பான், சீனா, துருக்கி, ஆப்கனிஸ்தான் முதலிய தேசங்கள் சுயமரியாதை இயக்கத்தின் சுழலில் சிக்கிக் கொண்டு அதனால் கிடைக்கும் பயன்களை அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றன. மேல் நாடான ஐரோப்பா கண்டத்தில் முக்கியமான இங்கிலாந்து பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி முதலிய தேசங்களும், ஆப்ரிக்காவில் எகிப்து, தென் ஆப்ரிக்கா முதலிய தேசங்களும் அமெரிக்காவில் கனடா, யுனைடெட் ஸ்டேட்ஸ் என்ற தேசங்களும் சுயமரியாதை என்னும் சுழலில் வெகு நாளாக அகப்பட்டு அதன் பலன்களை சமுதாய துறையிலும் அரசியல் துறையிலும் பொருளியல் துறையிலும் அனுபவித்துக் கொண்டு வருவதை கண்கூடாகப் பார்க்கிறோம் இந்த இயக்கம் உலகத்தில் உள்ள தேசங்களையும் அதிலுள்ள மக்களையும், பல துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்துவிடுமென்பது எல்லோருக்கும் நம்பிக்கையிருக்கிறது ஆனால் உலகத்திலுள்ள தேசங்களெல்லாம் தனித்தனியாக முன்னேற்றமடைந்தபின் உலகம் எந்த நிலைமையில் இருக்கும் என்பதை ஆராய்வது சோம்பேறியின் வேலையாகமாட்டாது. சென்ற ஒரு நூற்றாண்டில் உலகத்து தேசங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றமானது அதற்கு முந்தின எல்லா நூற்றாண்டுகளிலும் உலகத்து தேசங்கள் அடைந்த முன்னேற்றத்தைப் பார்க்கிலும் ஜாஸ்தி என்றும் 1900 ௵ முதல் 2000 ௵ முடிய உலகத்து தேசங்கள் அடைந்திருக்கிறதும் அடையப்போவதுமான முன்னேற்றமானது நாகரீகம் தோன்றிய காலம் முதல் 1900-௵ வரையில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாம் அடைந்திருக்கிற முன்னேற்றத்தைப்பார்க்கிலும் 1000 மடங்கு ஜாஸ்தியாயிருக்குமென்றும் உலக சரித்திர ஆராய்ச்சியுள்ள ஒவ்வொருவரும் சொல்லுகிறார்கள். இப்பொழுது முக்கியமான பத்து மதங்களான கிறிஸ்துமதம் மகமதிய மதம், இந்து மதம், கன்பூஷியஸ மதம் டாய் மதம், ஜைன மதம், ஷிண்டோ மதம், சிக்கு மதம், பார்ஸி மதம் இவைகளின் ஆரம்பக் கொள்கைகள் சிலதும் ஆரம்பக் கொள்கைகளை மறைத்து வைத்திருந்த மூடப்பழக்க வழக்கங்களில் பெரிதும் சுயமரியாதைக் கொள்கைகளின் பலனாய்த் தவிடு பொடியாகிக் கொண்டு வருகின்றன. மனிதவர்க்கம் ஒன்று சேர்வதை இந்த மதங்கள் தடை செய்ய முடியாது. இப்பொழுது மனித வர்க்கமானது 500 தேசத்தினர்களாக வாழ்ந்து வருகிறார்கள். மேல் காட்டிய மதங்களிலும் முக்கியமான கொள்கைகள் அநேகமாய் ஒரே விதமாகத்தான இருக்கின்றன. உலகத்திலுள்ள தேசங்கள் ஐக்கியமாய் ஒன்றுபடுவதற்கு மேற்காட்டிய பத்து மதங்களும் தடையாகமாட்டா. சென்ற 50 வருஷத்திற்குள் உலகத்தில் பதிப்பிக்கப்பட்டு எல்லா புத்தகங்களையும் பத்திரிகைகளையும் விட ஜாஸ்தியென்றால் உலக முற்போக்கின் வேகத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம் உலக சரித்திரத்தில இதற்கு முந்தின எல்லா நூற்றாண்டுகளிலும் மனித வர்க்கம் ஒவ்வொரு அறிவு துறைகளிலும் கண்டு பிடித்திருக்கும் விஷயங்களைப் பார்க்கிலும் அதிகமாக சென்ற நூற்றாண்டில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றால் உலக முற்போக்கின் வேகம் இன்னும் தெளிவாகத்தெரியும். உலகத்தில் வழங்கும் சுயமரியாதை இயக்கத்தின் பலனாக கி. பி. 2000 ௵ வாக்கில் உலகத்திலுள்ள தேசங்களுக்கெல்லாம் சேர்ந்து ஒரே மதமும், ஒரே பாஷையும், ஒரே அரசியலும வழங்குமென்று உலக சரித்திர நிபுணர்களால் எதிர்பார்க்கப்படுகிறது மேலும் அடியில விவரித்திருக்கிறபடி கி. பி. 2000 வருஷவாக்கில் உலகம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1. உலகத்தில் ஒவ்வோரிடத்திலும் ஆகாயவிமானங்கள் பறந்த வண்ணமாயிருக்கும். பொதுவாக எல்லோராலும் உபயோகப்படுத்தப்படும் இவைகளில் ஏறிச் சென்று உலகத்தை ஒரு வாரத்தில் சுற்றி வரலாம்.

2. வலைபோல் பரப்பப்பட்ட இருப்புப் பாதைகளும், தந்திகளும் கம்பியில்லாத தந்திகளும் இப்பொழுது கண்டுபிடிக்கப்படுகிற யந்திர வகைகளும் உலகம் பூராவிலும் நிறைந்திருந்து மக்களைச் சமீபத்தில் கொண்டு வந்து ஒன்றுபடுத்தி சகோதரர்களாக ஆக்கிவிடும்.

3. அநாகரிகமான மனித வர்க்கங்களுக்கு ஆதரவளித்து அவர்களை நாகரீக வழிகளில் முன்னேறும்படி செய்து சமத்துவம் பெற ஏற்பாடுகள் செய்யப்படும்

4. உலகத்திலுள்ள ஆண் பெண்கள் எல்லோரும் படித்தவர்களாயிருப்பார்கள்.

5. உலகத்தில் எல்லா பாஷைகளிலுள்ள வார்த்தைகளும் தத்துவங்களும் சேர்ந்த ஒரு பொது பாஷை உலகத்தில் பேசப்படும்.

6. எல்லாருக்கும் பொருத்தமான மதம் என்ற தத்துவம் உலகத்தில வழங்கும்.

7. உலகத்திலுள்ள ஆண் பெண் எல்லோருக்கும் தேர்தல் உரிமை ஏற்பட்டிருக்கும்.

8. பெண்ணின் உரிமைகள் பூராவும் அங்கீகரிக்கப்பட்டு பெண்களுக்கு சமத்துவம் ஏற்பட்டிருக்கும்.

9. உலகத்திலுள்ள நிலங்களெல்லாம் உலகத்திலுள்ள எல்லாருடைய சொத்தாகும்

10. கடமைகளும் அவைகளின் அத்துக்களும் சொந்தச் சொத்து என்ற பாத்தியமும் உலகமுழுவதிலும் அங்கீகரிக்கப்படும்.

11. கூட்டுறவு உலகத்தில் ஜாஸ்தியாக பரவியிருக்கும் இப்பொழுது இருப்பதைப்பார்க்கிலும் உலகத்தில் சொத்தானது சமமாக மக்களால் அனுபவிக்கப்பட்டு வரும்.

12. சாஸ்திரப்படியுள்ள வேளாண்மை உலகத்தில் ஜாஸ்தியாக இருப்பதைப்பார்க்கிலும் 4 மடங்கு தானியங்கள் ஜாஸ்தியாக உண்டாக்கப்படும்,

13. மதசம்பந்தமாக விடப்படும் விடுமுறை நாள்களெல்லாம் இல்லாமல் ஒழித்து எல்லோருக்கும் பொருத்தமான சில நாட்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.

14 ஆண் பெண் இவர்களில் சோம்பேறிகள் ஒருவரும் உலகத்தில் இருக்கமாட்டார்கள். அப்படியிருந்தால் அவர்களை அவர்கள் சிநேகிதர்களும் ஐக்கிய அரசாங்கத்தாரும் வேலை செய்யும்படி செய்வார்கள். ஒவ்வொருவருக்கும் சரியான ஆகாரமும் உடுக்க உடையும் லேசாகக் கிடைக்கும்.

15. உண்பது, குடிப்பது, உறங்குவது, உடை தரிப்பது, விளையாடுவது பொருள்சம்பாதிப்பது இவைகள் தான் ஜீவகாலத்து முடிவு நோக்கமென்று மனிதர்கள் நினைக்கமாட்டார்கள் இந்த முக்கியமான மேலான உண்மையைத் தெரிந்து கொள்ளப்பாடுபடுதல் மக்களின் முக்கியமான வேலையென்றும் அதை ஆராய்ந்து விசாரணை செய்து அதைப் பற்றிப் படித்து நினைத்து வருவது தான் மனிதனுடைய முதற்கடமை யென்றும் ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து அதை மற்றவர்களுக்கும் போதிப்பான்.

16. கிரிமினல் குற்றங்கள் ஒன்றுக்குப் பாதிக்குக்கீழாக குறைந்து போய்விடும் குடியானது உலகத்தை விட்டுப் பறந்து போகும். மனித வர்க்கத்தின் சீக்கும் அதனால் ஏற்படும் வருத்தங்களும் பாதிக்கு மேல் குறைந்து போய்விடும். மனிதவர்க்கத்தின் ஜீவகாலம் இரட்டித்துவிடும். சீக்காளிகளும் முடவர்களும், வயதாளிகளும், அன்புடன் போற்றப்படுவதோடு மக்களுக்கும் ஜாஸ்தியான அன்பும், நட்பும், சந்தோஷமும் நிறைந்திருக்கும்.

17. அரசியலிலும், மதத்திலும், பாஷையிலும் உலகத்திலுள்ள தேசங்களெல்லாம் ஒரு ஐக்கிய நாடாக ஏற்பட்டுவிடும்.

18. இவ்வளவு காலம் என முட்டாளாயிருந்தோம். என்று ஒவ்வொருவரும் ஆச்சரியப் படுவார்கள்.

சகோதரர்களே! நான் சுருக்கச் சொல்லலாம என்று ஆரம்பித்த விஷயமானது சிறிது பெருகிவிட்டதென்று நினைக்கிறேன். ஆனால் தீண்டாமையைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லாமலிருக்க முடியவில்லை. மதக்கோட்பாடுகளால் வியாதிகள் பீடிக்கப்பட்டு அதன்மூலம் தீண்டாமை என்பது நம் நாட்டுக்கு ஆரியர்களால் கொண்டுவரப்பட்டது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இப்பொழுது ஆரியர்களிடத்தில் எவ்வளவு பலமாய் தீண்டாமை என்பது வேரூன்றியிருக்கிறதோ அவ்வளவு பலமாய் பிராமணர்களல்லாதவர்களிடத்திலும் வேரூன்றியிருக்கிறதென்று தெரிவிக்க நான் வருந்துகிறேன். மதக் கொள்கையின் பேரால் ஆரம்பிக்கப்பட்ட தீண்டாமையானது பிராமணரல்லாதாராகிய நம்மிடத்தில் மதக் கொள்கையை விட்டு பொருளியல் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு தீண்டாமை உலாவி வருகிறது தீண்டாத ஜாதிக்காரர்களென்று சொல்லப்படுகிறவர்களை முன்னேற்றம் அடையும்படி செய்துவிட்டால் வேலைக்கு ஆள்கள் இல்லாமல் போய்விடுமென்று கருதி பிராமணரல்லாதாரில் அநேக வகுப்பார் தீண்டாமை கைக்கொண்டு இருக்கிறார்களென்று அனுபோகத்தில் தெரிகிறது.

ஆகையால் தீண்டாமையை நம்தேசத்தை விட்டு விரட்டுவதற்கு மதத்தைச் சீர்திருத்தினால் மட்டும் போதாது. கோயிலை சீர்திருத்தினால் மட்டும் போதாது. பொருள், தொழில், எஜமான், வேலைக்காரன் என்ற பொருளியல் சம்பந்தமான கொள்கைகளையும் சீர்திருத்த வேண்டியதாயிருக்கிறது

எனது தலைமைப் பிரசங்கத்தை முடிப்பதற்கு முன் நமது பெண்களின் நிலைமையைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்லாமலிருக்கக் கூடவில்லை. நமதறிவியக்கத்தில் பெண்களை புறக்கணித்தது போலாகும்.

[இதன்தொடர்ச்சி16-பக்கம் பார்க்க]

பார்ப்பனர்களும் மாம்ச ஆகாரமும்.

ரிஷிகள், இராஜாக்கள் விருந்துக்கு மாட்டு மாம்சம்.

மனுதர்ம சாஸ்திரத்தின் தத்துவங்கள்.

இந்து மதத்தில் பசு மிகவும் மேன்மையாக பாவிக்கப்படுகிறதென்றும், முக்கியமான தெய்வமென்றும், அதை வதை செய்வதால் இந்து மதத்திற்கு பெரும் பங்கமேற்படுகிறதென்றும், இந்துக்கள் பெரும் தடை செய்கின்றார்கள். பூர்வீக காலத்திலிருந்த இந்து மதத்திலேயே பசு வதை செய்வதை ஹலாலாக்கி வைத்திருந்தது மட்டுமல்லாமல் முஸ்லிம்கள் அவ்விறைச்சியை எவ்வாறு புசிப்பது அவர்கள் மார்க்கத்தில் கூடுமானதாயிருக்கின்றதோ அதேபோல் இந்துக்களும் அம்மாமிசத்தை புசித்து வந்தனர் என்ற விஷயம் இந்துமத ஆராய்ச்சி நிபுணர்களின் ஆராய்ச்சியில் மறைந்திருப்பதன்று. இவ்வாறு இந்து மதத்தில் பசு வதை செய்வது சரியென்றும், பலி செய்யப்பட்ட பசுவின் மாமிசத்தை புசிக்கலாம் என்றும், இந்து வல்லாத மத ஆராய்ச்சி நிபுணர்கள் எத்தனையோ வியாசங்களை பிரசுரித்திருக்கின்றார்களே யாயினும் இன்றைக்கு வங்காள பிரபல பூர்வீக மத ஆராய்ச்சியில் இந்து நிபுணரான ராஜா, ராஜேந்திரலால் மத்ரா எல். எல். டி., சி. ஐ. இ., அவர்களால் எழுதப்பட்ட ஓர் புத்தகத்தில் "இந்து ஆரியன்" என்ற மகுடம் சூட்டப்பட்ட 6-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயத்தை நாம் கீழே குறிப்பிடுகின்றோம்:—

அப்புத்தகத்தில் இந்துமதக் கோட்பாடுகள் எவ்வாறு போதிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதை இதைப் படிக்கும் நண்பர்களுக்கு நன்கு புலனாகி விடும். ஆனால் அப்புத்தகத்தைச்சார்ந்தவரோவென நீங்கள் நினைக்கக்கூடும். ராஜா சாகிப் அவர்கள் வங்காள வைஷ்ணவர். அவர் தம்முடைய மேலே கூறப்பட்ட புத்தகத்தில் பூர்வீக இந்துக்களின் மதக் கோட்பாடுகளை மிக்வும் ஆராய்ச்சியுடன் வரைந்துள்ளார். அவர் கூறுவதாவது:—

இப்பிரச்சினையின் மகுடமே என் தேச நண்பர்களில் பெரும்பான்மையோர்களின் மனதில் பெரும் வெறுப்பையுண்டுபண்ணும். இமாலய பர்வதத்தைக் கடந்துவரும் ஆரியர்களின் மதக்கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்வதில் நமக்குக்கிடைக்கும் அத்தாட்சிகளே இவ்விஷயத்தில் விவாதிப்பதற்கு போதிய அத்தாட்சியாகும். பசு மாமிசத்தை உணவாக புசிக்கலாம் என்று நினைத்த வுடனேயே இந்துக்களின் மனம் புண் பட்டு விடுகிறது. ஆயிரக்கணக்கான இந்துக்கள் தானென்ன? லட்சக்கணக்கான இந்து மதப் பற்றுடைய இந்து மத நிபுணர்களும்கூட பசு மாமிசம் என்ற பெயரையுங் கூட வாயால் சொல்ல அருவருக்கின்றார்கள். நம் நாட்டில் பசுவை வதை செய்யும் விஷயத்தில் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு காலத்தில் உயிர்ப் பிராணிகளை அறுப்பதால் சில ஆத்மாக்கள் அமைதியாக இருந்தது மட்டுமல்லாமல், அவ்வாறு அறுக்கபபடுவது விருந்தினர்களுக்கெனக் கருதப் பட்டும் வந்தது. மேலும் ஓர் இந்து இறந்து அவனை மயானக் கரைக்குக் கொண்டுபோகும்போது அவனுடன் பசு மாமிசக் கட்டுசாதமொன்றனுப்புவதை இந்து மத நிபுணர்களான பக்தர்கள் முக்கியமெனப் பாவித்து வந்திருக்கிறார்கள். மேலும் இறந்து போன இந்துவுடன் ஓர் பசுவையும் சேர்த்து மயானக்கரையில் வைத்து எரிக்கப்பட்டு வந்தது. இவ்வந்தரங்கமான விஷயத்தை வெளியிடுவதன் நிமித்தம் இந்துக்களின் தற்போதைய கிளர்ச்சிகளை யுணர்ந்த இந்தியர்களுள் பெரும் ஆசசரியத்தையும் கிளர்ச்சியையும் உண்டு பண்ணும். இவ்விஷயங்களை நான் எந்த கிதாப் (புத்தகம்) பிலிருந்து எடுத்திருக்கின்றேனோ அக்கிரந்தங்களில் எத்தகைய சந்தேகமும் அதிருப்தியும் கொள்ள முடியாது.

புரொபசர் வில்சனின் ஆராய்ச்சி.

என் தேச நண்பர்களில் யார் தக்க கல்வி கற்றிருக்கிறார்களோ அவர்கள் வேதங்களில் 'கோ மேதம்' அஸ்வமேதம் என்று பசுவையும் குதிரையையும் பலிகொடுக்கும் யாகங்கள் இருப்பதை நன்கு அறிவார்கள். அவ்யாகத்தின் தாதபரியம் கால்நடை மிருகங்களை பலி செய்வதே. அவ்வாறு தக்க கல்வி கற்றவர்கள், பலிசெய்ய வேண்டுமென்றிருப்பதை உதாரணமாக வரையப்பட்டிருக்கிறதெனக் கருதுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு மேற்பார்வையாகப் பார்த்து உதாரணமாக கூறப்பட்டிருக்கிறதெனக் கருதி விடுவதால் அதன் அந்தரங்கங்கள் மறைவாக இருந்து விடுகிறது. ஆதலின் அத்தகைய பலி அமுலில் கொணடுவரப்பட்டதன்று என ஜனங்கள் கருதிக்கொள்ளுகிறார்கள். அதேபோல் புரொபசர் வில்சன் அவர்கள் இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்வதற்காக நாடி மூதன் முதலாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பஞ் செய்தபோது அவருக்கும் இதன் அந்தரங்கங்கள் சரிவர விளங்காமல் அவரின் யோசனைக்கும் எட்டவில்லையாயினும் அத்தகைய கல்வி நிபுணர்கள் போன்றவர்களின் பார்வைக்கும் அந்தரங்கங்கள் மறைந்திருப்பது முடியாத காரியமாகையால் அவர் மேகாவத் மொழிபெயர்பின் ஓரிடத்தில் குறிப்பிடுவதாவது:—

கோமேதம், அஸ்வமேதம் எனப்படும் யாகங்களில் பசு, குதிரை இவைகளை பூர்வீக காலத்தில் இந்துக்கள் பொதுவாக பலி செய்துவந்தனர். இந்த பலியானது உண்மையான பலியல்லவென்றும், பலியின் பாவனையாக செய்யப்பட்டதென்றும் கூறப்படுகிறது. அதாவது:—

பலியாக குறிப்பிடப்பட்ட ஒரு பசுவின் மீது ஏதாவது ஓர் அடையாளத்தை போட்டு அதை உயிரோடு விடப்பட்டு வந்தது. ஆனால் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் வாசகங்களும் இந்துக்கள் செய்யும் வேலைக்கு உதவியாகத் தெரியவில்லை. ஏனெனில், பசுவின் இரத்தம் கடலைப்போல ஆக வேண்டுமென்று கூறப்பட்டிருப்பதன் உண்மையான வியாக்கியானம் பசுவின் இரத்தத்தையே வெள்ளமாக ஓட்டவேண்டுமென்பதேயன்றிபசுபலியென்று வாயில் சொல்லி ஒரு குறியைப்போட்டு அப்பிராணிகளை வெளியில் ஓட்டிவிடுவது பலியாகமாட்டாது. பசு பலி செய்யவேண்டுமென எந்த புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறதோ அப்புத்தகத்திலிருக்கும் வாக்கியத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு:—

"பசு சந்ததிகளின் இரத்தம் ஆறு கக்கிளம்பி ஓடிற்று."

புரொபசர் அவர்கள் எவ்விஷயத்தில் அத்தாட்சிகள் காட்டுகின்றாரோ அவ்விஷயத்தில் ஜனங்கள் முன்னமே விவாதம் செய்திருக்கின்றார்களாயினும் பலி செய்ய வேண்டுமென வேதத்தில் கண்ட வாக்கியத்திற்கு இரத்தத்தை ஓட்ட வேண்டுமென்றே பதில் கூறி இருக்கின்றார்கள். சிலர் அவ்வாக்கியத்திற்கு நேரான வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ரிஷிகள் விருந்தில் பசுமாமிசம்.

வசிஷ்ட ரிஷியானவர் விஸ்வாமித்திரர், ஜனகர், சத்தியாநந்தர், ஜமதக்கினி முதலிய ரிஷிகள், சிநேகிதர்கள் ஆகியவர்களுக்குவிருந்தளித்தார். அவ்விருந்திற்காக ஓர் கொழுத்த பெண் பசுக்கன்றை அறுத்தார். ஜமதக்கினிக்கு விருந்துக்குச் சொல்ல போயிருந்த போது வசிஷ்ட ரிஷி சாப்பாட்டின் இன்பத்தையும் அதன் திவ்ய வாசனைகளையும் கூறுகையில் அவர் கூறியதாவது:—

பசுக்கன்று அறுப்பேன், நெய் சாதம் சமைக்கப்படுகிறது. நீங்கள் ஓர் படித்த கல்விமான் நானும் ஓர் படித்தவன்; ஆதலின் நீங்கள் என் விருந்துக்குவந்து நாங்கள் சமைத்து வைத்திருக்கும் பசு மாமிசம், நெய் சாதம் இவைகளைச் சாப்பிட்டு எங்களுக்கு ஆசி கூறும்படியாக வேண்டுகிறேன்.

இவ்விஷயங்கள் பூராவும் ஓர் சரிதையிலிருந்து எடுக்கப்பட்டதில் எத்தகைய சந்தேகமும் கிடையாதாயினும், இத்தகைய விஷயங்களை ஓர் நிமிஷத்திற்காவது இட்டுக்கட்ட முடியாது என்பதும் திண்ணம். ஏனெனில் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டுள்ள சரிதையின் ஆசிரியருக்கு இதைப்படிக்கும்பொது ஜனங்களின் மனம் கொதிப்படையு மென்பது தெரிந்திருப்பதுடன்; இல்லாத்தை இட்டுக்கட்டி இத்தகைய விஷயங்களை எழுதத்துணிய மாட்டார்.

விருந்தாளிக்கு மரியாதை

கோல்புருக் என்ற ஒருவர் ஹிந்து மதக் கோட்பாடுகளை மட்டும் ஓர் புத்தகமாக எழுதி யிருக்கிறார். அவர் அப்புத்தகத்தில் கூறுவதாவது:—

பூர்வீக காலத்திருந்த ஹிந்துக்கள் தங்கள் வீட்டிற்கு யாராவதொரு விருந்தாளி வந்தால் அவருக்காக ஓர் பசுவை அறுப்பது பொதுவான வழக்கமாக இருந்தது. ஆதலின் அவருக்குப் பசுவை அறுப்பவர் என்று கூறப்படுகிறது.

இந்துக்களின் விவாக காலத்தில் பசுவை அறுப்பதற்காக சொல்லப்படும் மந்திரசம்பந்தமான விஷயங்களை கூறுகையில் அவர் கூறுவதாவது:—

நான் இவ்விஷயங்களை எந்தப்புத்தகத்திலிருந்து ஆராய்ச்சி செய்தேனோ அப் புத்தகத்தில் கூறுவதாவது வரவேற்கத் தக்க விருந்தினர்களான கூர்த், புரோஹித், சன்யாசி, ராஜா, மாப்பிள்ளை. சிநேகிதர், மற்றும் கௌரவிக்கத் தக்க விருந்தினர்கள் இவர்களுக்காக வேண்டி ஒரு பசுவைக் குறி பாக்கப் பட்டு அறுப்பதற்காகவேண்டி கட்டிவிடுகின்றார்கள். ஆதலின் இவர்களுக்கு பசுவைக் கொல்லுகிறவர்களென்று கூறுகின்றார்கள்.

மனு ஸ்மிருதியில் பசு மாமிசம்,

எக்காலத்திலுமே பசு மாமிசம் சாப்பிடலாமென மனு ஸ்மிருதி அனுமதிக்கிறது. ஆனால் அதைச் சாப்பிடுவதற்கு முன் ஒரு துண்டைத் தேவதைகளுக் கென்றாவது பெரியோர்களின் ஆத்மாக்களுக்கென்றாவது, விருந்தாளிக் கென்றாவது மனதில் ஞாபகம் செய்து கூப்பிட வேண்டும். மேலும் மனு ஸ்மிருதியில் வரையப் பட்டிருப்பதாவது:— யாதொரு மனிதன் கிரயத்திற்காகவாவது, இலவசமாகவாவது பசு மாமிசத்தை வாங்கி தேவர்களுக்காகவாவது அல்லது ஆத்மாக்களுக்கு ஸ்தோத்திரம் செய்த பிறகாவது அம் மாமிசத்தைச் சாப்பிடுவதில் எத்தகைய பிணியும் கிடையாது. [மனு 23-5]

ஆனால் மனு ஸ்மிருதி பசு மாமி

[தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க]

மேல்நாட்டாரின் முற்போக்கு

(மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்)

மேல்நாட்டார் நாளுக்கு நாள் முற்போக்கடைந்து வருகிறார்கள். புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்து நூதன நூதனமான விஷயங்களைக் கண்டுபிடித்த வண்ணமாயிருக்கிறார்கள். தங்கள் சுய முயற்சியினாலும் சுய அறிவாலும் தளராத ஊக்கத்தாலும் அவர்கள் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து விட்டார்கள். முன்னேற்றமடைந்து வருகிறார்கள் அவர்கள் கண்டறிந்து நூதனமாகச் செய்துள்ள இயந்திரங்கள் நம்மை ஆச்சரியப்படும்படி செய்து விடுகின்றன. நமது இந்தியர் மூளை மிகநுட்பமுடையதென்று சொல்லிக்கொள்கிறோம், நம்மவர் மிகநுட்பமாக ஆராய்ந்து ஒரு பாட்டுக்குப் பல வியாக்கியானங்கள் எழுதி வைத்திருப்பது நமக்குள் உயர்வு தாழ்வையும் ஜாதி வித்தியாசத்தையும் அழிவுக்குக் காரணமான பழக்க வழக்கங்களையும் உண்டாக்கி நாட்டைப் பாழ்படுத்திக்கொண்டு வருகின்றது. ஆனால் மேல்நாட்டாரின் நுட்பமான மூளையோ நூதன விஷயங்களையும் பொருள்களையும் கண்டுபிடித்து அத்தேசத்து மக்களை முன்னேற்றமடையச் செய்வதற்கு அனுகூலமாயிருக்கிறது. இங்கு மேல்நாட்டார்கள் கண்டுபிடித்துள்ள அனேக விஷயங்களுள் மூன்றே மூன்று அதிசயங்களைமட்டும் எழுதுகிறோம். வாசகர்கள் இதைப் படித்தறிந்து, நம்மவரது வியாக்கியானம் எழுதும் நுட்பமான மூளை சிறந்ததா அல்லது மேல்நாட்டாரின் ஆராய்ச்சி மூளை சிறந்ததா என்பதைத் தாங்களாகவே யோசித்து உணர்வார்களாக

1873 ஹூஜுலஸ் வெர்னி என்னும் பிரெஞ்சுக்காரர் "சமுத்திரத்திற்குள் 20,000 யோசனை ஆழம்" என்னும் கதையை கற்பனையாக எழுதிவைத்தார் இக்கதையை அவர் எழுதிய காலத்தில் டார்ப்பிடோ என்னும் நீர் மூழ்கிக் கப்பல்கள் இல்லை. ஆனால் ஆகாயக் கோட்டைகட்டுவது போல மனதில் தோன்றினபடி ஒரு கதை எழுதினார் உண்மையான நீர் மூழ்கிக் கப்பல்கள் கண்டுபிடிக்கப்படும் என்று அவர் நினைத்தவர் அல்லர் ஆனால் இப்பொழுதோ உண்மையான நீர் மூழ்கிக்கப்பல்களை நாம் பார்க்கிறோம். உலகத்தில் வல்லரசுகளாயுள்ள எல்லா தேசத்தாரும் இப்போது நீர் மூழ்கிக் கப்பல்களை வைத்திருக்கிறார்கள்; நமது புராணங்களில் பல்லாயிர வருஷங்களுக்கு முன் ஆகாயத்தில் பறக்கும் புஷ்பவிமானம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது ஆனால் நிஜமான ஆகாய விமானத்தை அதிக மூளையுடையவர் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டத்தார் இன்னும் கண்டுபிடிக்கவில்லை ஆனால் மேல் நாட்டார் ஆகாயவிமானங்களையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் நூதனமாகக்கண்டுபிடித்து அவைகளைக்கொண்டு நமது தேவதைகளாகிய வாயுபகவானையும் வருணபகவானையும் (காற்றையும் கடலையும்) ஆண்டு வருகிறார்கள்.

என்ன ஆச்சரியம் பாருங்கள்! டார்ப்பிடோ கப்பல்கள் கடல்மேல் மிதந்து செல்கின்றன. தூரத்தில் பகைவருடைய கப்பல் வருவதைக் கண்டவுடன் டார்ப்பிடோ தண்ணீருக்குள் மூழ்கி மறைந்து விடுகிறது பதுமாசுரன் கடலில் புகுந்து ஒளிந்துக் கொண்டான் என்று கட்டுக் கதைகளாகிய புராணங்களில் வாசிக்கிறோம். ஆனால் வெள்ளைக்காரன் கடலுக்குள் ஒளிந்துகொள்வதை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்பித்தோம்! நாம் வாய்பேச்சு பேசுகிறோம்; வெள்ளைக்காரனே செய்கையில்செய்து காட்டுகிறான். குலைக்கிறநாய் வேட்டை பிடிக்காது என்பதுபோல் வாய்ப்பேச்சு காரியத்துக்கு உதவுமா?

டார்ப்பிடோ கப்பல தண்ணீருக்குள் மூழ்கிவிட்டால் கப்பலில் இருப்பவர்கள் சுவாசிப்பதற்குப் பிராணவாயு வேண்டுமே அதற்காக பிராணவாயுவைப் பெரிய பீப்பாய்களில் பத்திரப்படுத்தி கப்பலில் வைத்திருக்கிறார்கள் கப்பல் நீருக்குள் முழுகின உடனே அந்தப் பீப்பாய்களிலுள்ள காற்றைக் கொஞ்சம் வெளியில் விடுகிறார்கள் அக்காற்று அங்கிருப்பவர்களுக்குச்சுவாசிக்க உதவுகிறது. ஆனால் காற்று சுவாசிக்கப்பட்டு சீக்கிரத்தில் கெட்டுவிடுமல்லவா? கெட்ட காற்றை சுவாசித்துக்கொண்டிருந்தால் கப்பலில் உள்ளவர்கள் சாகவேண்டியதாகிவிடும். ஆகையால் காற்று அசுத்தப்பட்டவுடன் அதை கப்பலிலிருந்து வெளிப்படுத்திவிட்டு புதிதாக நல்ல காற்றை பீப்பாய்களிலிருந்து எடுத்துக் கொள்கிறார்கள். இவ்விதம் அவர்கள் நமது வாயு பகவானை தங்களுக்கு அடிமையாகச்செய்து வைத்திருக்கிறார்கள்! ஆனால் நான் சொல்லவந்தது அசுத்தமாய்விட்டால் அதைத்தெரிவிப்பதற்கு ஒரு நுட்பமான யந்திரத்தை வெள்ளைக்காரனுடைய மூளை கண்டுபிடித்திருக்கிறது. இந்த யந்திரத்திற்கு மாநோமீட்டர் என்றுபெயர் இந்த யந்திரம் டார்ப்பிடோவிலுள்ள காற்று அசுத்தப்பட்டுவிட்டதைத் தெரிவிக்கிறது. உடனே அக்காற்றை வெளிப்படுத்திவிட்டு நல்ல காற்றை பீப்பாயிலிருந்து எடுத்துக் கொள்கிறார்கள். அசுத்தகாற்றென்றும் சுத்தகாற்றென்றும் தெரிவிக்கும் யந்திரம் எவ்வளவு நுட்பமானதாயிருக்கவேண்டும்?

இனி இரண்டாவது அதிசயத்தைக்கவனிப்போம். டார்ப்பிடோ கப்பலின் முக்கிய உபயோகம் என்ன? பகைவருடைய கப்பல்களைப்பதுங்கியிருந்து உடைப்பதுதான்: ஆனால் டார்ப்பிடோ தண்ணீருக்குள் மூழ்கிவிட்டால், தண்ணீருக்குமேல் இருக்கிற பகைவரின் கப்பல்களையும் வெளியே நடைபெறும் விஷயங்களையும் டார்ப்பிடோவில் இருப்பவர்கள் எப்படி அறிய முடியும்? அறிய முடியாதென்று நாம் நினைக்கலாம் ஆனால் டார்ப்பிடோவில் இருப்பவர்கள் தண்ணீருக்குள் மூழ்கியிருந்தபடியே மேலே நடக்கும் விஷயங்களையெல்லாம் நன்றாய்ப்பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள் அவர்கள் என்ன மூக்கண்படைத்தவர்களா? ரிஷிகளா; ஞான திருஷ்டி உடையவர்களா? அல்லது மந்திரசக்தி யுடையவர்களா? என்றுசிலர் சந்தேகப்படக்கூடும். அப்படியல்ல அவர்கள் என்ன நம்மைப்போல இந்துக்களா ஞானதிருஷ்டியிலும் முக்கண்ணிலும் மந்திரசக்தியிலும் நம்பிக்கை வைப்பதற்கு? அவர்கள் யந்திர சக்தியில் நம்பிக்கையுள்ளவர்கள் ஆகையால் மேலே நடக்கும் விஷயங்களை உள்ளே யிருப்பவர்களுக்குத் தெரிவிக்கக்கூடிய சக்தியுள்ள யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் இந்த அற்புத யந்திரத்திற்கு பெரிஸ் கோப் என்றுபெயர். இந்தக் கருவி, டார்ப்பிடோ தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும்போது, நீர்மட்டத்திற்குமேல் நிற்கும்படி அமைக்கப்பட்டிருக்கும் இந்தக்கண்ணாடிக் கருவி சமுத்திரத்திற்மேல் உள்ள எல்லாப்பொருள்களின் உருவங்களையும் டார்ப்பிடோவுக்குள் இருக்கும் ஒருமேஜைமேல் காட்டுகிறது. காட்டுவதுமட்டும் அல்ல; நீர்மட்டத்திற்குமேல் காணப்படும் பொருள்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன: எவ்வளவு வேகமாக நகர்கின்றன என்பவற்றையும் தெரிவிக்கறது. இந்த அதிசயிக்கத்தக்க கருவியைக் கண்டுபிடித்த அறிவாளியின் மூளை நமது நாட்டின் வியாக்கியானம் எழுதும் நுட்பமான மூளையைவிட எவ்வளவு கூர்மையாயிருக்க வேண்டும்!

இந்த பேரிஸ்கோப் என்னும் கருவி தரையிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. தரைமேல் சண்டை நடக்கும்போது சிப்பாய்கள் டிரெஞ்சு என்னும் பள்ளங்களில் ஒழிந்துகொண்டு பகைவர்களை எதிர்ப்பது வழக்கம் பள்ளத்திலிருந்துகொண்டு தலை தூக்கிப்பார்த்தால் உடனே எதிரியின் துப்பாக்கிக்குண்டு அவன் தலையைப்பிளந்துவிடும். ஆகையால் பள்ளத்தில் இருந்து தலைதூக்கிப்பார்ப்பது அபாயமாகும். இந்த அபாயத்தை நீக்குவதற்கும் இந்த பெரிஸ்கோப என்னும் கருவி உபயோகப்படுத்தப் படுகிறது. இக்கருவியைக் கொண்டு பள்ளத்தில் இருந்தபடியே தரைமேல் நடக்கும் விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறார்கள் கடந்த ஜெர்மனி சண்டையின் போது இக்கருவி சிப்பாய்களுக்கு அதிக உபயோகமாயிருந்தது.

இனி மூன்றாவது அதிசயத்தைச் சொல்லுவோம் ஸ்பெக்ட்ராஸ்கோப் என்னும் கருவி மிகவும் அதிசயிக்கத்தக்கது இக்கருவியைக் கொண்டு நட்சத்திரங்கள் எந்தெந்த தாதுப் பொருள்களால்உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாம். அந்தந்த நட்சத்திரங்கள் என்னென்ன தாதுப் பொருள்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாம் உலகத்தில் உள்ள ஒவ்வொரு விதமான அணுக்களுக்கும் ஒவ்வொரு விதமான நிறங்கள் உண்டு என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். இரும்பு. ஈயம், கந்தகம் முதலிய உலோகங்களுக்கும் தனித்தனி நிறங்கள் உண்டு மேற்படி பொருள்களை நெருப்பில் இட்டு எரித்தால் அந்த நெருப்பில் [தீயில்] அவ்வுலோகங்களின் நிறங்களும் கலந்து காணப்படும் இன்னின்ன நிறங்கள் இன்னின்ன பொருள்களைக்குறிக்கும்என்று கண்டறிந்திருப்பதால், நெருப்புடன் காணப்படும் நிறங்களைக் கொண்டு இன்னின்ன பொருள் என்று அறிந்து கொள்ளலாம் தீயில் கலந்து எரியும் தாதுப் பொருள்களின் நிறங்களைத் தனித்தனியே பிரித்துக் காட்டுவதற்காகத்தான் மேல் கூறிய ஸ்பெக்ட்ராஸ்கோப் என்னும் கருவி உபயோகிக்கப்படுகிறது. இரவில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் ஒளி இக்கருவியின் மேல் படும்படியாக அமைத்து வைத்தால் இக்கருவி அந்த நட்சத்திர ஒளியில் கலந்துள்ள பல்வேறு நிறங்களையும் தனித்தனியே பிரித்துக்காட்டுகிறது அந்த நிறங்களைப் பார்த்து அந்த நட்சத்திரத்தில் இன்னின்ன தாதுப் பொருள்கள் இருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள் நமது சூரியனை இந்த கருவி கொண்டு பார்த்தபோது, நமது தேகத்திலும் நமது பூமியிலும் என்னென்ன தாதுப் பொருள்கள் இருக்கின்றனவோ அதே தாதுப் பொருள்கள் சூரியனில் இருப்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள் அதாவது கார்பன் பிராணவாயு, இரும்பு, கால்சியம், என்னும் உப்பு ஹைட்ரோஜின் முதலிய பொருள்கள் காணப்படுகின்றனவாம்.

இவ்வாறு மேல்நாட்டாரின் அறிவு கடலுக்குள்ளும் காற்றின் மேலும் சென்று அதைக்கடந்து அப்பாலும் சூரிய மண்டலங்களிலும் சென்றுகொண்டிருக்கிறது ஆனால், நம்மவரின் நுண்ணிய அறிவு சாரதா மசோதாவை எதிர்ப்பதிலும் தேவதாசி சட்டத்தை மறுப்பதிலும், பிராமணர்களுக்கு தானதருமம் செய்து புண்ணியம் சம்பாதிப்பதிலும் காசி ராமேஸ்வர யாத்திரை செய்துபாவங்களைப் போக்குவதிலும் செம்பு பித்தளை பொம்மைகளை சிங்காரித்து சாமி என்று பேர் வைத்து அவைகளுக்கு வசந்தோற்சவங்களைச் செய்து வைப்பதிலும் சென்று கொண்டிருக்கிறது.

[தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க]

பிராமணரல்லாத சங்கீத வித்துவான்களின் பெயர் விலாசங்கள்.

திரு. இராம சுப்பிரமணியன் அவர்களால் கொடுக்கப்பட்ட லிஸ்டுகள்

வாய்ப்பாட்டு.

திருவாளர்கள்.

1. நாயனுபிள்ளை பெரிய காஞ்சீவரம்.
2. பஞ்சாபகேசபிள்ளை மலைக் கோட்டை, திருச்சி
3. சித்தூர் சுப்பிரமணியபிள்ளை மாம்பலம் சென்னை
4. ராஜகோபால்பிள்ளைராஜவீதி மன்னார்குடி தஞ்சாவூர் ஜி.
5. செல்வரத்தினம்பிள்ளை விளங்கியம்மன் தெரு சிதம்பரம் S. I. R.
6. பொன்னையாபிள்ளை, அண்ணாமலை சர்வகலாசாலை சங்கீதஉபாத்தியாயர்சிதம்பரம் S. I. R.
7. கலியாணசுந்தரம் பிள்ளை, திருவீழிமழலை பூந்தோட்டம் S. I. R.
8. ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம், சென்னை.
9. ,, பெங்களூர் தாயி ராமகிருஷ்ணன்தெரு சென்னை
10. ராதாகிருஷ்ண பிள்ளை காளையார்கோவில் தெரு கும்பகோணம் S. I. R.
11. ஸ்ரீமதி கோமளம் சகோதரிகள் சாரங்கபாணி சந்நிதி கும்பகோணம் S. I. R.
12. ,, மீனாட்சி சுந்தரம் சகோதரிகள் சட்டையப்பர் சந்நிதி நாகப்பட்டணம் S. I. R.
13. லக்ஷிமி ரத்தனம் சகோதரிகள் 27 கிருஷ்ணன் தெரு சென்னை.
14. பிருந்தா சகோதரி, 8 பைராகிமடத்தெரு சென்னை.
15. சின்னபாப்பா பானோஜியப்பா வீதி தஞ்சாவூர்
16. சௌந்தரம் கீவளூர் S.I.R.
17. மோஹனாபாய் 42வெங்கிடாஜல செட்டி தெரு திருவல்லிக்கேணி சென்னை.
18. ஜகதாம்பாள் பெரியதெரு கும்பகோணம் S. I. R.
19. T. S. ரங்கம்மாள் திருநெல்வேலி S. I. R.
20. சௌந்தரவல்லி தெற்குவீதி திருவாரூர் S I R
21. ,, சாரதாம்பாள் சோமேசர் சன்னதி கும்பகோணம் S. I. R.

திருவாளர்கள்.

22. பத்மாவதி பெரிய குற்றாலம் குற்றாலம் S. I. R.
23. சந்தானம் டாட்டர் வடக்கு வீதி மாயவரம்.
24. குப்பு அம்மாள் பெரிய காஞ்புரம்
25. சீதாம்பாள் சின்னகடைத் தெரு திருச்சி
26. ஜானகி அம்மாள் கன்சர் கோட்டை சந்து தஞ்சாவூர்
27. அம்மாக்கண்ணு பாபநாசம்
28. லலிதாங்கி தங்கசாலைத் தெரு சென்னை.
29. ஐயா அம்மாள் 8 பைராகி மடத்தெரு சென்னை.
30. பவானியம்மாள் சகாநாயக்கன் தெரு தஞ்சாவூர்.
31. பவானியம்மாள் சௌனி செட்டித்தெரு தஞ்சாவூர்
32. பத்மாவதி அம்மாள் முத்தோஜியப்பா சந்து தஞ்சாவூர்.
33. மரகதம் கண்ணம்மாள் ஜி. டி. சென்னை.
34. சௌடய்யா ஸிஸ்டர் ஜி. டி. சென்னை.
35. அஞ்சுகத்தம்மாள் கீழவீதி பழனி.
36. அம்மாக்கண்ணு கோவை

புல்லாங்குழல்.

திருவாளர்கள்:

1. சுவாமிநாத பிள்ளை தாஸ்தாமால் சந்து; தஞ்சாவூர்.
2. ரங்கதாஸ் சேலம்
3. சுப்பையா பிள்ளைசோழபுரம் கும்பகோணம் தாலூகா
4. ராமசாமி பிள்ளை, உறையூர், திருச்சி, S I R
5. டி. செல்வக்கணபதி பிள்ளை திருப்பாம்புரம் பேரளம்SIR
6. சில்கு பாப்பா கீரனூர் பேரளம் S I R
7 ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் ஸ்ரீரங்கம்,திருச்சி S I R
8. ராஜமாணிக்கம் டாட்டர் வடக்கு வீதி திருவிடைமருதூர்.
9. கோவிந்தசாமி பிள்ளை ஆயிகுளத்துமேல் கரை கும்பகோணம்
10. சிவராம பிள்ளை டாட்டர், திருக்கோகர்னம் புதுக்கோட்டை:

பிடில்.

திருவாளர்கள்:

1. கோவிந்தசாமி பிள்ளை கும்பகோணம், S I R
2. ராஜமாணிக்கம் பிள்ளை. நாகேஸ்வரர் வடக்கு வீதி
3. மகாதேவ பிள்ளை, சித்தாய் கும்பகோணம் மூர் ஆலத்தம்பாடி S I R
4. சிவவடிவேல் பிள்ளை, சாரங்கபாணி சந்நிதி. கும்பகோணம்.
5. சுப்பிரமணிய பிள்ளை, திருவீழிமிழலை பூந்தோட்டம் S I R
6. கிருஷ்ணசுவாமி பிள்ளை, மலைக்கோட்டை, திருச்சி.
7. ரத்தினசுவாமி பிள்ளை, தொப்பிள் பிள்ளையார் சந்து தஞ்சாவூர்.
8. ராஜகோபால் நாயுடு மதுரை
9. ராமச்சந்திரம் பிள்ளை மேல 2 ம் வீதி புதுக்கோட்டை.
10. சுப்பிரமணிய பிள்ளை வரதா முத்தையப்பன்தெரு சென்னை.
11. சௌடய்யா மைசூர்.
12. தாயப்பா பெங்களூர்.
13. வெங்கிடகிருஷ்ண நாயுடு விஜயநகரம்(விசாகபட்டினம்)
44. பரமசிவம் பிள்ளை திருச்சி.
15. கோவிந்தசாமி பிள்ளை ராஜமன்னார்குடி, S I R
16. ராதா கிருஷ்ணபிள்ளை ஆலங்குடி நீடாமங்கலம். S I R
17. பாலு பிள்ளை வடக்கு வீதி மாயவரம்.
18. வெங்கடாசலம் பிள்ளை தெற்கு வீதி தஞ்சாவூர்.
19. T. சுப்பரமணியபிள்ளை பாரிஸ் வெங்கிடாசல அய்யர் தெரு

மிருதங்கம்.

திருவாளர்கள்

1. அழகநம்பி பிள்ளை, கும்பகோணம்.
2. குப்புசாமி பிள்ளை, குற்றாலம் S I R.
3. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை, புதுக்கோட்டை.
4. வேணுநாயக்கர் திருவல்லிக்கேணி, சென்னை.
5. முத்தய்யா பிள்ளை, பழனி.
6. மகாலிங்கம் பிள்ளை, பந்தமாணிக்கப்பா சந்து, தஞ்சாவூர்.
7. சிவவடிவேல் பிள்ளை. குற்றாலம் S I R.
8. பீதாம்பர தேசாயி, திருவல்லிக்கேணி, சென்னை.
9. சுப்பிரமணியபிள்ளை, பழனி.
10. ராமதாஸ் ராவ் பெத்தபெருமாள்சந்துதஞ்சாவூர்

திருவாளர்கள்

11. கிருஷ்ணபிள்ளை தொப்பின் பிள்ளையார் சந்து, தஞ்சாவூர்.
12. பைரவம்பிள்ளை தஞ்சாவூர்.
13. வேணு செட்டியார் சக்கிரபாணி சந்நிதி கும்பகோணம்.
14. தக்ஷிணாமூர்த்தி ஆச்சாரி, இடைத்தெரு, திருச்சி.
15. சாமிநாதபிள்ளை வடக்கு 2-ம் வீதி. புதுக்கோட்டை
16. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை திருத்துறைப்பூண்டி தஞ்சாவூர் ஜில்லா.
17 துரைசாமி பிள்ளை பள்ளத்தெரு, மதுரை.
18. திருவேங்கிட நாயுடு மதுரை.
19. ராஜ[illegible] நாயுடு மதுரை.
20. பக்கிரியா பிள்ளை, சாரங்கபாணிநாயுடு வடக்கு மடவிளாகம், கும்பகோணம்.
21. ஸ்ரீமதி ரெங்கநாயகி திருக்கோகர்னம், புதுக்கோட்டை.
22. ராமய்யா பிள்ளை கட்டளைத் தெரு, திருநெல்வேலி.
23. அ[illegible]பாயி நாயக்கர் மடப்புரம், திருவாரூர் S I R.
24. அப்பண்ணா ராவ் மடப்புரம் திருவாரூர், S I R.
25. கோவிந்தசாமி பிள்ளை ராஜவீதி, ராஜமன்னார்குடி.
26. கோவிந்தசாமி பிள்ளை காளிபண்டாரத் தெரு, குறநாடு, மாயவரம். S I R.
27. நடேச பிள்ளை கீழ வீதி, மாயவரம்.
28. நாகராஜ பிள்ளை மானோஜியப்பா வீதி, தஞ்சாவூர்.
29. பாலுபிள்ளை, தெற்கு ராஜ வீதி, தஞ்சாவூர்.
30. நடேச பிள்ளை விளங்கியம்மன் தெரு, சிதம்பரம்.
31. மருதமுத்து பிள்ளை பைராகி கோவில் தெரு, சென்னை.
32. சத்திவேலு பிள்ளை திருவல்லிக்கேணி, சென்னை.
33. நாகராஜ பிள்ளை முத்தோஜியப்பா சந்து, தஞ்சாவூர்.
34. ரெங்கசாமி நாயுடு மடப்புரம், திருவாரூர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்பார்க்க)

அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 ஏப்ரல் மீ 20-உ

சங்கீத மகாநாடு.

ஈரோட்டில் மே மாதம் 24, 25 முதலிய தேதிகளில் நடக்கும் 2 வது சுயமரியாதை மகாநாட்டின் ஆதரவில் வேறு பல மகாநாடுகளும் நடைபெறும் என்பது நேயர்கள் அறிந்ததாகும் அவற்றுள் சங்கீத மகாநாடு என்பதும் ஒன்றாகும்.

சங்கீத மகாநாடு கூட்டும் விஷயத்தில் நமக்கு உள்ள ஆர்வமானது சங்கீதம் என்னும் ஒரு கலையானது மிக்க மேன்மையானதென்றோ அல்லது இன்றைய நிலையில் மனித சமூகத்திற்கு அது மிக்க இன்றியமையாததென்றோ கருதியல்ல உலகத்தில் மக்களுக்குள்ள அனேகவிதமான உணர்ச்சி தோற்றங்களில் இதுவும் ஒன்றே தவிர இதற்கு எவ்விதத்திலும் ஒரு தனி முக்கியதத்துவம் கிடையாதென்பதே நமது அபிப்பிராயம். உதாரணமாக சங்கீதம் என்பது தேசத்திற்குத் தகுந்தபடியும் அங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு தகுந்தபடியும் அவரவர்களது அறிவு வளர்ச்சிக்குத் தகுந்தபடியும் இருப்பதே தவிர ஒரே சங்கீத முறையானது உலகத்திற்கெல்லாம் பொருத்தமானதென்று சொல்ல முடியாது ஒரு நாட்டு சங்கீத உணர்ச்சிக்காரனுக்கு இன்பமாய் இருப்பது மற்றொரு நாட்டு வித்வானுக்கு புரியாததாகவேயிருக்கும் மேல் நாட்டு சங்கீத இன்பம் கீழ்நாட்டான் அனுபவிக்க முடியாது அது போலவே கீழ் நாட்டு சங்கீத இன்பம் மேல் நாட்டானுக்கு இன்பமாக இருக்க முடியாது ஆனால் பொதுவில் சங்கீதம் என்னும் ஒரு கலை விஷயத்தில் உலக மக்களுக்கெல்லாம் ஒருவித போக்கிய அனுபவமிருக்கின்றதை மாத்திரம் காணலாம். ஆனாலும் அதை ஒருவர் அதிகமாக அனுபவிக்க ஆசைப்படுவார் மற்றொருவர் அதை சாதாரணமாக கருதுவார் எப்படி இருந்தாலும் உலகில் உள்ள பல கலைகளில் அதுவும் ஒன்றாயிருக்கின்றது.

நம்மைப் பொருத்தவரை நாம் இம்மகாநாட்டில் கலந்து கொள்வதானது அக்கலையில் உள்ள மேன்மையை உணர்ந்தல்லவென்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறோம் மற்றென்னவெனில் சங்கீதத் துறையிலும் நமது பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தான் சுயமரியாதைமகாநாட்டை அனுசரித்து இதைநடத்தவேண்டுமென்று கருதி நாம் அதில் கலந்து கொள்ள ஆசைப்பட்டதாகும்.

எப்படி நமது நாட்டில் மற்ற எல்லாத்துறைகளையும் பார்ப்பனர்கள் கைப்பற்றி தங்கள் ஆதிக்கத்திற்குள்ளாக்கி அத்துறைகளில் மற்ற மக்களை தலையெடுக்க ஒட்டாமல் அழுத்தி வைத்திருக்கிறார்களோ அது போலவே சங்கீதத் துறையும் முழுதும் பார்ப்பனாதிக்கமாகி அதன்மூலம் நமது பொருள்கள் கொள்ளை போவதுடன் அதைக் கொண்டிருக்கும் நமது மக்களின் சுயமரியாதையும் கொள்ளை போயிருக்கின்றது போய்க் கொண்டும் வருகிறது. உதாரணமாக நமது தமிழ்நாட்டில் சங்கீத விஷயத்தில் தேர்ச்சியுள்ள பார்ப்பனரல்லாத வித்வான்கள் அனேகர் இருக்கிறார்கள் அதிலும் சங்கீத சம்பந்தமான பல கலைகளிலும் தமிழ் நாட்டிற்கே சிறந்தவர்கள் முதன்மையானவர்கள்— இணையில்லாதவர்கள்—என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார்களே யாவார்கள் இப்படி இருந்தாலும் இவர்களது வாழ்வும் அந்தஸ்தும் பெரிதும் மிக்க சுயமரியாதை அற்ற தன்மையாகவே இருந்து வருகின்றது. பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான்கள், அதாவது வாய்ப்பாட்டு வீணை புல்லாங்குழல் பிடில் நாகசுரம், மிருதங்கம் தவுல், முதலாகிய வாத்தியங்களில் முதன்மையான பார்ப்பனரல்லாத வித்வான்கள் தங்களிலும் எவ்வளவோ கீழ்தா பார்ப்பன வித்துவான்களால் மிக்க இழிவாகவே நடத்தப்படுகிறார்கள் அது மாத்திரமல்லாமல் இதன் பயனாய் பிரபுக்கள் என்று சொல்லப்படும் பார்ப்பனரல்லாத பணக்காரர்கள் பலரும் கூட பார்ப்பனரல்லாத வித்வான்கள் என்றால் மிக்க இழிவாகவே கருதும் உணர்ச்சியைக் கொண்டு இருக்கின்றார்கள்.

உதாரணமாக சென்ற இரண்டு மூன்று வருஷத்திற்கு முன் நாட்டுக் கோட்டை நகரத்தில் ஒன்றான கானாடு காத்தானுக்கு நாம் போயிருந்தகாலத்தில்தென் இந்தியாவுக்கே முதன்மையான நாகசுர.வித்வான் திரு. பொன்னுசாமி அவாகள் ஒரு நாளைக்கு 500 ரூபா கொடுத்து ஒரு பிரபு வீட்டு விசேஷத்திற்கு வாத்தியத்திற்காக வரவழைக்கப்பட்டிருந்தார் அப்படிப்பட்ட அவர் நின்று வாசிக்கும் போது தனது வேர்வையைத் துடைத்துக் கொள்ள ஒரு சிறு வெள்ளைத்துவாலை தன் தோளின் மேல் போட்டுக் கொண்டு வாசிக்கத் துடங்கினதும் அவ்வூர் பிரபுக்கள் சிலர் "மேளக்காரன் தோளில் துண்டு போட்டுக் கொண்டு வாசிக்கலாமா" என்று குற்றம் சொல்லி வாசிப்பதைத் தடுத்தார்கள் அதற்கு அந்த வித்வான் பதில் சொல்லமாட்டால் விழித்தார் அப்போது சமீபத்தில் இருந்த நமது நண்பர் ஒருவர் அவ்வித்துவானை நோக்கி "நீங்கள் மேல்துவாலை எடுக்காதீர்கள் அவர்களுக்கு கேழ்க்கப் பிரியமில்லாவிட்டால் போய்விடட்டும் அல்லது நீங்களாவது போய்விடுங்கள்" என்று சொன்னார் இதைக் கேட்ட வீட்டுக்கார பிரபு தனது விசேஷ காலத்தில் இந்தப்படி ஒரு சம்பவம் நடந்தது வாத்தியக்காரர் போய்விட்டார் என்கின்ற கெட்ட பெயர்வருமேஎன்றுபயந்து சீக்கிரத்தில் வாசிப்பை முடித்துக் கொண்டார் இம்மாதிரியான சம்பவம் அனேக இடங்களில் இன்றும் நடக்கின்றது. மற்றும் பார்ப்பனரல்லாத பெண் வித்வான்களாயிருந்தால் உட்கார்ந்து பாடும்போது சபைக்கு ஒவ்வொரு மனிதன் வரும்போதும் எழுந்து எழுந்து கும்பிட்டு விட்டுத்தான் உட்காரவேண்டியிருக்கின்றது. ஆண் பாட்டுக்கார வித்வான்களோ பிரபுக்களிடம் பேசும்போதும் இடுப்பின் மேல் வேஷ்டியை எடுத்து சுருட்டிக் கட்டிக் கொண்டும் முழங்காலுக்கு மேல் இடுப்பு வேஷ்டியைக் கட்டிக்கொண்டும் இடக்கையை வல கட்கத்தில் வைத்து வலக் கையால் வாயைப் பொத்தி குனிந்து, "மகாராஜா" "எஜமான்" "ஸ்வாமி" "சமூகம்" என்று மேல் மரியாதை வைத்து பேசவேண்டியிருக்கின்றது. இப் பிரபுக்களும் இவ்வித்துவான்களிடம் பேசும்போது நீ, அவன், டேய் என்கின்ற ஒருமை அடிமை முறையில் பேசுவதும் வழக்கமாயிருக்கின்றது. இதே தொழிலில் இருக்கும் பார்ப்பனர்களும் தங்கள் சகோதர தொழிலாளிகள் பார்ப்பனரல்லாதவர்களாயிருந்தால் அவர்களிடமும் இப்படியேதான் நீ, அவன், அடே என்கின்ற வரிசை வைத்துத் தான் பேசுகிறார்கள். ஒரு இரண்டு மூன்று ஜாண் உயரம் உள்ள பையனாயிருக்கும் பார்ப்பனவித்துவானும்கூட எட்டரைச் சாண் இருக்கும் பார்ப்பனரல்லாத வித்துவானை ஒருமையிலேயே தான் அவன், நீ, அடே என்று பேசுகிறான். அந்தச் சிறு பையவித்துவானிடம் இந்தப் பெரிய வித்துவான்கள் பேசும்போதும் 'சுவாமிகள்' என்றே மரியாதை வைத்து பேசுகின்றார்கள். நிற்க நமது பிரபுக்கள் என்பவர்கள் பார்ப்பன வித்வான்களிடம் பேசும்போதெல்லாம் மரியாதையாகவே பேசுவதும் தாங்களாகவே முதலில் கும்பிடுவதும் இதற்கு பார்ப்பனர்கள் இடது கையை தங்கள் இடுப்பிற்கு கீழாகக் காட்டி "ஆசீர்வாதம்" என்று சொல்லுவதுமான காரியங்கள் தினமும் நடந்து வருகின்றது. ஆனால் சதுர் முதலிய கச்சேரிகளில் தாசிகளுக்குப் பின்னால் நின்றுகொண்டு அவர்களை ஆட்டுவிப்பவராயிருந்தாலும் தாளம் போடுகிறவராயிருந்தாலும் அல்லது அப்பெண்களுக்கு மாமாக்களாய் கூட இருப்பவர்களாய் இருந்தாலும் அவர்களைக் கண்டால் நமது பிரபுக்கள் கும்பிடுவதும் சுவாமிகளே என்று கூப்பிடுவதும் ஆன காரியங்கள் முக்கியமாக எல்லா கிருமாந்திரப் பிரபுக்களிடமும் இன்னமும் பார்க்கலாம். இவைகள் ஒரு புற மிருக்க பார்ப்பனப் பிரபுக்கள் தங்கள் வீட்டு விசேஷங்களுக்கும் சடங்குகளுக்கும் மேளம் வாசிப்பதற்குத் தவிர மற்றபடி சபைக் கச்சேரிகளுக்கு பாடவோ, கதைகள்செய்யவோ கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதார்களை கூப்பிடுகின்ற வழக்கமே ஒரு சிறிதும் இல்லை. அதுமாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதார் பாடுவதையோ கதை செய்வதையோ புராணம் உபன்யாசம் முதலியவை செய்வதையோ பார்ப்பனர்கள் கேள்ப்பது மத சம்பிரதாயப்படி தோஷம் என்றே கருதி இருக்கிறார்கள். ஏனெனில் "சூத்திரன் வாக்கை கேள்க்கக் கூடாதாம்" அன்றியும பார்ப்பன புக்க வாத்தியக்காரர்களில் அனேகர் பார்ப்பனரல்லாத வித்வா

ன்களுக்குப் பக்க வாத்தியம் வாசிப்பதையும் இழிவாய் கருதுகிறார்கள். பார்ப்பனரல்லாத பக்க வாத்தியக்காரர்கள் கூட ஒரு பார்ப்பனச் சிறு வித்வானுக்கு வாசிப்பதை பெருமையாய் கருதுகின்றார்களே யொழிய பார்ப்பனரல்லாத வித்வான்களுக்கு வாசிப்பதை கவுரவக்குறைவாகவே கருதுகின்றார்கள் அன்றியும் ஒரு பார்ப்பன சிறுவன் பாடினாலும் கருவிகளால் வாசித்தாலும் சுற்றிலும் பார்ப்பனர்கள் உட்கார்ந்து கொண்டு "பலே" "பலே" "பேஷ்" "பேஷ்" என்று கைதட்டுவதும் தலையை ஆட்டுவதும் மெய்மறந்ததுபோல் கண்கள் மேலே சொருகும்படி வேஷம் போடுவதும், அதை ஒன்றுக்கு இரண்டாக விளம்பரம் செய்து அவனுக்கு பிரக்யாதி சம்பாதித்துக் கொடுப்பதிலும் அதிக கவலையாய் இருக்கிறார்கள்.

ஆனால் பார்ப்பனரல்லாத வித்வான்களாயிருந்தால் அவர்கள் எவ்வளவு பெரிய வித்துவான்களாயிருந்தாலும் வேண்டுமென்றே "கட்டை சாரீரம்" என்பதும் கணக்கு போராது என்பதும் மேல் ஸ்தாயில் சுகப்படாது என்பதும் மற்றும் ஏதேதோ பொருத்தமற்றவைகளைச் சொல்லி விஷமப் பிரசாரம் செய்வது எங்கும் வழக்கமாக இருக்கிறது.

இவைகளை நாம் சுமார் 40 வருஷத்திற்கு மேல்பட்ட நமது பிரத்தியக்ஷ அனுபவத்தில் கண்டுவந்திருக்கின்றோம்.

ஆகவேநாம் சங்கீத மகாநாட்டில் கலந்துகொள்ள ஆசைப்பட்டதின் முதல் காரணம் சங்கீத ஞானத்திற்கு ஆகவோ சங்கீத கலை வளர்ச்சிக்கு ஆகவோ மாத்திரம் அல்ல என்றும் மேல்கண்ட பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்னும் உயர்வு தாழ்வு விஷம் சங்கீதத்திற்குள்ளும் புகுந்து அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு விரோதமாயிருக்கும் கொடுமையை அழிப்பதற்கே ஒழிய வேறில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதை உத்தேசித்தே சிலசங்கீத சம்மந்தமான சபைகளில் நாம் பேச நேர்ந்தபோது கூட சங்கீதத்தில் இச்சைவத்திற்கு ஆகவும் சங்கீதத்தை தொழிலாகக்கொண்டதற்கு ஆகவும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற காரணத்திற்காக இவ்வளவு கேவலமாயும் இழிவாயும் நடத்தப்படுவதாயிருந்தால் சங்கீதக்கலையே அடியோடு அழிந்துபோவதே மேல் என்றும் அதனால் யாருக்காவது ஜீவனத்திற்கு கேடுவருமானால் அப்படிப்பட்டவர்கள் இச்சங்கீதத்திற்கு "கருமாதி" செய்து விட்டு ரோட்டில் கல் உடைத்து வயிர்வளப்பதே மேல் என்றும் அத்தொழிலும் ஜீவனமும் சங்கீதத்தைவிட கவுரமும் மேன்மையுமான வேலை என்றும் சொல்லி வந்திருக்கிறோம்.

ஆகவே சமீபத்தில ஈரோட்டில் நடக்கும் சங்கீத மகாநாட்டில் மற்ற சங்கீத மகாநாடுகளைப்போல் சங்கீத சாஸ்திரம் என்பதைப் பற்றிபேசியேகாலம்போக்காமல் சக்கீதத்தை கைக்கொண்ட பார்ப்பனரல்லாத மக்களுடைய சுயமரியாதையை காபபாற்றும் விஷயத்திலும் அதிகமான கவனம் செலுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். நிற்க இன்றயதினம் தமிழ்நாட்டில் சங்கீத விஷயத்தில் வாய்பாட்டு புல்லாங்குழல், பிடில், மிருதங்கம், கஞ்சிரா, ஜலத ரங்கம், கடம், கொன்னக்கோல், நாகசுரம் முதலிய அனேக கம் துறைகளில் நிகரில்லாதவர்களும் மிக்க விற்பத்தி பெற்றவர்களுமாக சுமார் 400, 500, பேர்கள்வரையில் பார்ப்பனரல்லாதார்களில் இருந்தும் அவர்களைப்பற்றிய பெயர்கள்கூட அனேகருக்குத் தெரிய முடியாமல் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது அவர்களில் சிலரின் பெயர்களையும் திரு ராமசுப்ரமணியம் அவர்கள் கொடுத்த லிஸ்டுப்படி மற்றொருபக்கத்தில் காணலாம் மற்றப்பெயர்களும் பின்னால் வெளிவரும் இந்த சமயத்தில் நாம் இந்த வித்வான் எல்லோரையும் அவசியம் இம்மகாநாட்டுக்கு வரும்படி இதன்மூலம் அழைக்கின்றோம். அவர்களில் அனேகர் அவசியம் வரவும் கூடும் என்று எதிர்பார்க்கின்றோம். அனேக வித்வ சிரோன்மணிகள் வருவதாகவும் வந்து பாடவும் வாசிக்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு எல்லாம் நாம் மனப்பூர்த்தியான நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்வதோடு பொது ஜனங்களிலும் சங்கீதகலையிலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள மக்கள் பெருநதிரளாககூடிவந்து இம்மகாகாட்டைச் சிறப்பிக்கச் செய்து அதை கைக்கொண்ட பார்ப்பனரல்லாத மக்களுக்கு மேன்மையும் சுயமரியாதையும் ஏற்படுவதற்கு உதவியாயிருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

இரண்டாவது

சுயமரியாதை மகாநாடு

மே மாதம் 24, 25-தேதிகளில்

பம்பாய் உயர்திரு

M R ஜெயகர் M L A அவர்கள்

தலைமையில் ஈரோட்டில் நடைபெறும்.

அதன் ஆதரவில் பெண்கள் மகாநாடு, சங்கீத மகாநாடு,

மதுவிலக்கு மகாநாடு, வாலிபர் மகாநாடு, ஆகியவைகள் நடைபெறும்

திரு. R. K. ஷண்முகம் M. L. A. வரவேற்புத்தலைவர்.

ரவ்பகதூர் C. S. இரத்தினசபாபதி,

K. A. ஷேக்தாவுது சாயபு, S. ராமனுதன் காரியதரிசிகள்

மே மாதம் 24, 25, 26, 27, தேதிகளில் ஈரோட்டில் நடக்கப்போகும் சுயமரியாதை மகாநாடு முதலியவைகளுக்கு வேண்டிய காரியங்கள் துரிதமாக நடைபெற்று வருகின்றது. திரு. பம்பாய் எம். ஆர். ஜயக்கர் அவர்கள் மகாநாட்டுத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டு தனது சம்மதத்தையும் தயவுடன் தந்தியில் தெரிவித்து விட்டார். பந்தல் வேலைகள் பகுதிக்கு மேலாக முடிந்திருக்கின்றது. வாய்க்காலில் தண்ணீர் இல்லாத காலமானதால் தனி தண்ணீர் குழாய்கள் பல இடங்களில் வைக்கப்பட்டு வருகின்றது. ஒரே தடவையில் 1500 பேர்கள் உட்கார்ந்து சாப்பிடும்படியாக சாப்பாட்டு பந்தல்கள் வேலைகள் நடக்கிறது. விவசாய கைத்தொழில் கண்காக்ஷிக்கு ஒரு பெரிய மைதானம் ஒதுக்கி விடப்பட்டிருக்கின்றது. மகாநாடு கொட்டாய் காம்பவுண்டில 40 கடைகள் வரை வைக்க கொட்டாய்ள் போட்டு அறைகள் தடுக்கப்பட்டிருக்கின்றது. உயர்திருவாளர்கள் காரைக்குடி சொ. முருகப்பர் ராமசுப்பரமணியன் சிவாநந்தம் முதலியவர்கள் வந்து சங்கித மகாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கிறார்கள். தென்னாட்டு பொருக்குமணிகள் மகாநாட்டில் ஒருங்கே காணப்பட்டு சங்கீத மழை இடிமின்னலுடன் பொழிவார்கள். திருவாளர்கள் கைவல்ய சாமியார் காளியப்பன், பல்லடம் இராமசாமிபிள்ளை வெங்கிடாசலம் முதலியவர்கள் பந்தல் வேலைகளையும் கடிதப் போக்குவரத்துகளையும் கவனித்து வருகிறார்கள் திருவாளர் எஸ். ராமனுதன் கார்குடி சின்னையா ஆகியவர்கள் சாமான்கள் வாங்க ஈரோட்டிலிருந்து சென்னைக்குச் சென்றிருக்கிறார்கள் இந்த வாரம் கோயம்புத்தூரில் மாத்திரம் 2000ரூபாய்போல் மேல் கொண்டு நன்கொடைகள் கையெழுத்தாகிருக்கின்றது.

எஸ். வி. லிங்கம்.

கே. வி. அழகிரிசாமி

விளம்பர அதிகாரி.

திருச்சிசிறையில் தொழிலாளர் தலைவர்கள்

தென் இந்திய ரெயில்வே சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு திருச்சி சிறையில் தண்டனை அனுபவிக்கும் தொழிலாளர் தலைவர்களில் சிலரை மட்டும் அரசாங்கத்தார் "ஏ" வகுப்பு கைதிகளாகவும் மற்றவர்களை சாதாரண "சி" வகுப்பு கைதிகளாகவும் நடத்துவதன் சம்பந்தமாக அரசாங்கத்தாருக்கும் உயர் திரு. ஈ. வெ. ராமசாமியார் அவர்களுக்கும் பேச்சுகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் தொழிலாளர் தலைவர்களுக்கு சௌகரியம் கிடைக்குமென நம்புகின்றேன்.

என். பி. காளப்பா.

9-ம் பக்கத் தொடர்ச்சி

திருவாளர்கள்

35, நடேச பிள்ளை
பள்ளத்தெரு, மதுரை.

36, மீனாட்சிசுந்திரம் பிள்ளை
நீடாமங்கலம்.

கஞ்சிரா.

திருவாளர்கள்

1. தெட்சிணாமூர்த்தி பிள்ளை
புதுக்கோட்டை.
2. பஞ்சாப்பகேச பிள்ளை
மலைக்கோட்டை, திருச்சி.
3. முத்தையா பிள்ளை பழனி.
4. வேணு நாயக்கர்
திருவல்லிக்கேணி, சென்னை.
5. பார்த்தசாரதி
திருவல்லிக்கேணி சென்னை.
6. வேதாசலம் பிள்ளை
காஞ்சீபுரம்.
7. குருசாமி பிள்ளை
கீழ்வீதி, மாயவரம். S I R.
8. வைத்திநாத பிள்ளை
விளக்கியம்மன் தெரு
சிதம்பரம் S I R.
9. ராமய்யா பிள்ளை
கட்டளைத் தெரு
திருநெல்வேலி S I R.
10. செல்வரத்தினம் பிள்ளை
விளக்கியம்மன் தெரு,
சிதம்பரம்.

ஜலதரங்கம்

திருவாளர்கள்:

1. ரமணீய செட்டியார்
17, தாதா முத்தையப்பன் தெரு, சென்னை.
2. நாராயணசாமி பிள்ளை
உறையூர் திருச்சி.
3. கண்ணுச்சாமி பிள்ளை
திருவழுந்தூர்
மாயவரம் S I R
4. ராஜாயி அம்மாள்
இளமையாக்கினார் வீதி,
சிதம்பரம்.

கதை

திருவாளர்கள்

1. ஸ்ரீமதி எம். கனகாம்புஜம்
திருக்கோகர்னம்,
புதுக்கோட்டை.
2, மாணிக்கம் ஷை ஷை
3, விஷ்ணுபுரம் பாப்பா,
விஷ்ணுபுரம், இரவாஞ்சேரி
போஸ்டு, பூந்தோட்டம்
S I R
4. பத்மாசானிபாய் சென்னை.
5. துரைகண்ணுபாய்
கீழ வீதி மாயவரம்.
6. ஸ்ரீமதி புன்னிபாய் சென்னை
7. ஸ்ரீமதி பத்மாவதி பாய் முத்தோஜியப்பா சந்து
தஞ்சாவூர்.
8. வாலாம்பாள் எல்லையம்மன்
கோவில் தெரு தஞ்சாவூர்

திருவாளர்கள்

9. தனம் தெற்கு வீதி தஞ்சை
10. ஞானம்மாள் விளக்கியம்மன்
தெரு சிதம்பரம்
11. பங்கஜத்தம்மாள் சகோதரி
விளக்கியம்மான் தெருசிதம்பரம்
12. சுந்திரமூர்த்திசேதுவர்
கட்டளைத் தெரு
திருநெல்வேலி.
13. லட்சுமி காந்தா ஜி. டி.
சென்னை.
14. சித்திரகவி சிவராமபாகவதர்
சாமநாத குளக்கரை
தஞ்சாவூர்.
15. பட்டணம் அம்மாள் டாட்டர் தெற்கு வீதி தஞ்சாவூர்

கடம்

திரு நாராயண பிள்ளை சிக்கல்.

டோலக்

திரு வேணுசெட்டியார்
சக்கிரபாணி சன்னிதி
கும்பகோணம்.

நாகசுரம்

திருவாளர்கள்.

1. ராஜரெத்தினம் பிள்ளை
திருவாவடுதுறை.
2. வீருசாமி பிள்ளை
திருவிடைமருதூர்.
3. சின்னதம்பி பிள்ளை சகோதரர்கள், கீரனூர்.
4. சுப்பிரமணியம் சகோதரர்கள், திருவீழிமிழலை,
பூந்தோட்டம் S I R.
5. அங்கப்ப பிள்ளை
பெரம்பலூர்.
6. சுப்பிரமணிய பிள்ளை
திருவெண்காடு.
7. சே. கே. கிந்தசாமி பிள்ளை
சகோதரர்கள், மாயவரம்.
8. வைத்தியநாத பிள்ளை,
சிதம்பரம்.
9. நடேச பிள்ளை
திருச்சி.
10. பழனிசாமி பிள்ளை
புதுக்கோட்டை.
11. பஞ்சாபகேச பிள்ளை
12. சுந்தரேச பிள்ளை
லால்குடி P. O.
திருச்சி S I R.
13. வேலுபிள்ளை
ஐயம்பேட்டை,
தஞ்சாவூர்.
15. சுப்பையா பிள்ளை
பெருமாள்சந்நிதி
ஸ்ரீரங்கம்.
16. முத்துக்குமாரசாமி
பிரதர்ஸ்
திருக்குளை.

கொன்னக்கோல்

திரு. பக்கிரியா பிள்ளை. ராஜவீதி
மன்னார்குடி.

வீணை

1. ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாள்
மேலக்கோபுரவாசல் மதுரை.
2. ஸ்ரீமதி தனம்மாள்
27 ராமகிருஷ்ணன் தெரு,
சென்னை.
3. திரு. T. லெக்ஷமண பிள்ளை
திருவனந்தபுரம்.

கோயமுத்தூர் ஜில்லாவில் மது விலக்குப் பிரசாரம்.

கோயமுத்தூர் ஜில்லா மதுவிலக்குப் பிரசாரத்தில் மற்ற ஜில்லாக்களை விட மிக்க ஊக்கமாகவும் பொருப்பாகவும் வேலை செய்து வருகின்ற விஷயம் அக்ஜில்லாத வாசிகளுக்கு நன்கு தெரிந்ததாகும். இதன் பயனாய் ஈரோடு தாலூக்காவில் திங்களூர் முதலிய இடங்களில் 2, 3 கடைகள் யாரும் ஏலம் கேழ்ப்பாரின்றி மூடப்பட்டு விட்டன. இம் முயற்சி பெரிதும் திங்களூர், அப்பிச்சிமார்மடம் பட்டக்காரரான உயர்திரு ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்களின் பெரும் முயற்சியேயாகும். அடுத்த வருஷத்தில் இந்த ஜில்லாவில் ஒரு பத்து கடைகளாவது மூடப் படுவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விதம் மூடப்பட்ட கடைகளை மறுபடியும் திறக்கச் செய்வதற்கு சிலர் முயற்சிப்பதாகவும் தெரியவருகின்றது. இதற்கு அரசாங்க அதிகாரிகளோ மது இலாக்கா உத்தியோகஸ்தர்களோ காரணஸ்தர்களாயிருந்தால் மதுவிலக்குப் பிரசாரம் இன்னும் மும்முரமாய் நடத்த ஏற்பாடுகள் மறியல் முதலிய மார்க்கங்களில் செய்ய வேண்டியது அவசியமாகும். இதுவரை ஈரோடு தாலூக்காவில் இப் பிரசாரம் மும்முரமாய் நடைபெற காரணஸ்தராய் இருந்த உயர்திரு ஆண்டமுத்து கவுண்டர் அவர்களை சமீபத்தில் காலியாகும் ஜில்லா பிரசாரக் கமிட்டி அங்கத்தினர் பதவிக்கு நியமிக்கவேண்டியது சர்க்காரின் முக்கிய கடமையாகும். இச் ஜில்லாவில் உள்ள குடித்தனக்காரர்களிலாவது பிரமுகர்களிலாவது மதுவிலக்கு விஷயத்தில் இவரைப் போல் உழைத்து வருபவர்கள் யாரும் இல்லை யென்றே சொல்லலாம். எனவே அரசாங்கத்தார் கவனிப்பார்களாக.

சந்தாதாரர்க்கு அறிவிப்பு

கடிதம் எழுதுகிற சந்தா நேயர்கள் எப்பொழுதும் தவறாமல் தங்கள் சந்தா நெம்பரைக்குறித்தெழுத வேண்டும் இல்லாவிடில் லட்டர்கள் கவனிக்கத்தாமதப்படும்.

மானேஜர்.

இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

தொண்டர் படை அறிக்கை 3.

மகாநாட்டுக்கு தொண்டர்களாக சேருகிறவர்கள் (ஏற்கனவே சேர்ந்திருக்கிறவர்கள்) மகாநாட்டுக்கு வரும் சமயம் படுக்கைகள் முதலானவைகளைக்கொண்டு வரவேண்டியது.

தொண்டர்கள் வேலை செய்யும் நேரங்களில் அணிந்து கொள்ளுவதற்காக உடுப்புகள் காரியதரிசியால் தயாரிக்கப்பட்டுவருகின்றது.

தொண்டர்களுக்கு மட்டிலும் உடுப்பு இரண்டு ரூபாய் கிரயத்திற்கு கொடுக்கப்படும்.

பதிவு செய்துகொண்ட தொண்டர்கள் தங்கள் உடுப்புக்காக ரூபாய் இரண்டையும் கீழ் கண்ட விலாசத்திற்கு மணியார்டர்செய்யவேண்டப்படுகிறார்கள்.

விலாசம்:

M. S. சுப்பண்ணன்.
தொண்டர் படை காரியதரிசி,
ஈரோடு.

Wanted.

Candidates desiring to serve in Government, Railway and Canal Departments. Full particulars and Railway Fare Certificate on 2 annas Stamps; apply under registered cover to (IMPERIAL TELEGRAPH COLLEGE)

Nai Sarak. DELHI

வயதை வளர்க்கும் கல்பம்! வியாதியைப் போக்கும் அமிர்தம்!!

வஜ்ர கல்ப காபி தூள்

மதுமேகம், நீரிழிவு, நீர்சுருக்கு, பித்தநாசம், க்ஷயம் முதலிய ரோகங்களை நிவர்த்திக்கக்கூடியது.

சாதாரண காபி, தேயிலை முதலியவைகளை உபயோகிப்பதால் அதிக உஷ்ணத்தினால் தேகத்திலுள்ள ஜீவதாதுக்கள் பலஹீனப்பட்டு திரிகாலவடைவில் மேல்சொல்லிய கொடிய ரோகங்களை உண்டாக்குகிறதென்பது சகலருக்கும் தெரிந்த விஷயம். இவ்வித வியாதிகள் அணுகாமல் எப்பொழுதும் திடகாத்திரமாய் நல்ல தாது வலுவுடன் உற்சாகத்தைத் தரக்கூடிய விதமாய் நமது வஜ்ர கல்ப காபி தூள் மஹா ரிஷிகளாலும், முன்னோர்களாலும் கையாண்டுவந்த சரக்குகளைக் கொண்டு பிரசித்த பண்டிதர் ஒருவரால் தயாரிக்கப்பட்டது. சாப்பிட நல்ல குணமாயிருக்கும், கசப்பு, துவர்ப்பு, வெகுட்டல் இவை ஒன்றும் இராது. 40-நாள் டின் விலை ரூ. 1. தபால் செலவு வேறு.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி சென்னை.

இதுவும் பாஞ்சாலியின் காலமோ?

பர்மா தேசத்தில் இரங்கூனை அடுத்து இன்ஸின் என்ற ஓர் பட்டணம் உண்டு. அதில் பர்மா இரயில்வே தொழிற்சாலை ஒன்றுளது. அதில் வேலை செய்யும் தொழிலாளர்களின் மக்களுக்காக ஓர் பாடசாலை உண்டு. அதில் வட இந்தியாவில் உள்ள பஞ்சாப்பியர், நேபாளியர், வங்காளிகள், குஜராத்திகள், இந்துஸ்தானிகள் முதலியவர்களும் தென் இந்தியாவிலுள்ள தமிழ் ஜனங்களின் மக்கள்களும் வாசித்து வருகின்றனர். இதில் எல்லா மாணுக்கர்களுக்கும் உள்ள பொதுப்பாஷை ஆங்கிலம். தென்னிந்திய சிறுவர்களுக்கு தமிழ்ப் பாஷையும், மேலே சொல்லப்பட்ட வட இந்திய மக்களுக்கு உருது பாஷை இரண்டாவது பாஷையுமாக கற்பிக்கப்பட்டு வருகிறது.

இப்படியிருக்கையில் சுமார் 14 வயதுள்ள ஓர் பாஞ்சால நாட்டுப் பையன் தனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருப்பதாக, தன் உபாத்திமார்கட்கும் மற்றும் தன்பள்ளித் தோழர்களுக்கும் சீனிமுதலியவைகள் வழங்கினான். இதைக் கண்ணுற்ற நமது தென்னிந்தியச் சிறுவர்களில் சிலர் அவனைப்பார்த்து குழந்தை எங்கே பிறந்ததென வினவ, தனது சுயதேசமாகிய பாஞ்சால நாட்டில் பிறந்திருக்கிறதென உரைத்தான் மேற்படி பாஞ்சாலியச் சிறுவன். அதைக் கேட்ட நமது தமிழ்ச் சிறுவர்கள் அவனை நோக்கி 'நீ இங்கேயே சில வருஷங்களாக இருந்து படித்து வருகிறயே ஊருக்கும் போகவில்லையே பின்னும் உனக்கு சொற்பநாளே ஆகிறது. எப்படிக் குழந்தை பிறந்ததென"க் கேட்க அவன் "நான் ஊருக்குப் போகாவிட்டாலும் என் சகோதரர்கள் அங்கிருக்கிறார்கள். எங்கள் ஊரில் எங்கள் ஜாதி வழக்கம் யாதெனில் ஒரு குடும்பத்தில் நாலைந்து சகோதரர்களிருந்தால் கடைசிப் பையன் பேருக்கு ஒரு பெண்ணை கலியாணம் செய்து வைப்பது வழக்கம். அந்தப் பெண் என் குடும்பத்தில் உள்ள எல்லா சகோதரர்களுக்கும் சொந்தமாகும். அவள் இஷ்டம்போல் யாருக்காகிலும் குழந்தை பெறலாம்" என்றனன். இந்த விபரீதத்தில் ஆச்சரியமுற்ற நமது தமிழ் இளைஞர்கள் கைகொட்டி நகைக்க ஆரம்பித்தனர் இதன் கோஷ்டத்தைக் கண்ட ஆசிரியர்கள் அவர்களுக்குள் குட்டிச் சண்டை யுண்டாகாதபடி சாதுவாய் அடக்கி விட்டனர்.

இதை ஆராயுங்கால் நான் சிறு பிராயத்தில் பாடசாலையில் படிக்குங்கால் கேட்டறிந்த மகா பாரதத்தின் கதையொன்று எனக்கு ஞாபகம் வருகிறது. அதாவது பாண்டவர்களான ஐவருக்கும் "துரோபதை" என்று சொல்லப்பட்ட ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி யிருந்தும் அவள் ஐவருக்கும் அழியாப்பத்தினி என்பார்கள். மேற்படி அழியாக் கற்புள்ள பாஞ்சாலநாட்டுத் துரோபதையை தன் புருஷர்களுக்குச் சொந்தக்காரரும் துஷ்டனுமான துரியோதனன் சூதாடுவதினால் வென்று, கட்டாயத்தினால் கற்பழிக்க எத்தனித்து அவளை நிர்வாணமாக்க எண்ணி புடவையைக் கழற்ற முயற்சிக்கும்போது, அதை அவிழ்க்க அவிழ்க்க ஏராளமான எவ்வளவோ புடவைகள் இருந்ததாக கதை கூறுகிறது. நாடகங்களில் நடித்துக் காட்டுவதையும் பார்த்தும் கேட்டும் இருக்கிறோம்.

ஆனால் மேற்படி ஜாதியார் பர்மாவில் வசிக்கிறார்கள். இன்னும் அநேகர் வந்துகொண்டுமிருக்கிறார்கள். ஆனால் அந்த ஸ்திரீகளிடம் புடவை கட்டும் வழக்கமில்லை. செண்டைக் கால் தெரியாமல் கால்சிராய் போடுகிறார்கள். மேலும் பஞ்சாப் நாட்டில் புடவை கட்டும் வழக்கம் கெட்டுப்போன பெண்களுக்குத்தான் இருக்குமென்று புடவை கட்டுவதை இகழ்ந்து பேசுகிறார்கள். இப்படியிருக்க துரோபதை புடவைகட்டி யிருந்ததாகக் கதை கூறுவது மெய்யோ—பொய்யோ! ஆரியர்கள் குடும்பத்தில் உள்ள யாவருக்கும் ஒரே பெண்ணைக் கட்டுகிற வழக்கம் இருந்ததென்று தற்கால பரியந்தம் அனுபோக சாட்சியாய் இருப்பதுடன் அவர்களுக்குள் மனைவியைச் சாதாரணப் பொருளாக நினைத்து சூதாடும் தொழிலுக்கு அவளை வைத்து பந்தயம் கட்டும் வழக்கம் இருந்தே வந்திருக்கிறது என்பதை நினைக்க எவ்வளவு வெட்கமான காரியம். ஆரியர் வந்தபின்னர்தான் சூதாடும் வழக்கம் உண்டானதாகத் தெரியவருகிறது. உதாரணமாக, பாரத சரித்திரம், நள சரித்திரம். முதலியவைகள் இதற்குப் போதிய சான்றாகும்.

இப்படிப் பல சகோதரர்களுக்கு ஒரே பெண்ணைக் கலியாணம் செய்யும் வழக்கத்தைப்பற்றி, ஆங்கிலம் கற்ற பஞ்சாப்நாட்டுப் பிராமண உபாத்தியாயர் ஒருவரோடு கேட்டதில் அவர் "ஆம் அது வாஸ்தவந்தான். பெண்களுக்குத் தட்டுப்பாடாய் இருக்கும் சில வகுப்பினர் அப்படிச் செய்து வருகின்றனர்" என்பதை உண்மையாக உரைத்தனர். ஆகவே ஆரியர் தங்களுக்குள் நடந்த மற்றவர்களால் இழிவாக நாகரீகமற்றவைகளாய் எண்ணப்படுகிற விஷயங்களை மத புராணங்களாகவும் புண்ணிய சரித்திரங்களாகவும் கட்டி ஏழைத் திராவிடரை நம்பும்படி செய்து ஏமாற்றி விட்டனர். அப்படிப்பட்ட பொய்களில் அமிழ்ந்து தற்கால நாகரீக காலத்திலும் நமது ஜனங்கள் மயங்கிக் கிடப்பதால் தான் சுயமரியாதையற்று அந்நியருடைய ஆளுகையிலும் அடிமைத்தனத்திலும் தரித்திரத்திலும் அறிவீனத்திலும் மூழ்கியானை தன் பலமறியாது போல் மயங்கிக் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வெளிப்பகட்டான் பொய்க்கதைகளை விட்டுவிட்டு ஏமாற்றிறவர்களுக்குச் சிறிதும் பயப்படாது ஏழை மக்கள் பேரில் என்று இரக்கம் வைக்கிறார்களோ அன்றுதான் நமது ஜனங்கள் சுவாதீனமடைவார்களென்பது திண்ணம். இது ஓர் பரம ரகசியம். அறிவாளிகளே அறிந்து சொல்வீர்களாக. இப்படிக்கு,

சத்யம் கூறுவோன்.

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

சகோதரர்களே! நம்மவர் மூளை நுட்பமுடையதல்ல என்றும் வெள்ளையர் மூளை மட்டும் கூர்மையுடையதென்றும் நான் சொல்லவில்லை வெள்ளையரைப் போலவே பல நூதன யந்திரங்களைக் கண்டு பிடிக்கும் சக்தி நமது மூளைக்கும் இருக்கிறது ஆனால் மூளையின் சக்தியை வெள்ளையர் நல்ல வழியில் செலுத்துகிறார்கள் நாமோ நமது மூளையை மாறான வழியில் செலுத்தி கட்டுக்கதைகளை உண்மையென்று நம்பி மூடநம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். மேல் நாட்டு மூளைக்கும் கீழ் நாட்டு மூளைக்கும் வித்தியாசம் ஒன்றும் இல்லை ஆனால் அதை உபயோகிக்கும் விதத்தில் தான் வித்தியாசம் இருக்கிறது. அவன் பொருள்களை ஆராய்ந்து உண்மை இயல்பை அறிந்து அதைத் தனக்குப் பயன் படுத்திக் கொள்ள முயற்சி செய்து பலனடைகிறான் நாம பொருள்களின் உண்மையான இயற்கையை யாராய்வதில்லை ஆராய்ந்து கண்டு பிடிப்பதில்லை கண்டுபிடித்து நமக்கு உபயோகப்படும்படி செய்து கொள்வதில்லை. மேல்நாட்டு மாணவர் விஷயங்களைக் கற்க வேண்டும் என்று கற்கிறார்கள். நமது இந்திய மாணவர் பரீட்சையில் பாஸ் செய்து சர்க்கார் ஊழியத்துக்கு யோக்கியதையுள்ளவர்களானால் போதும் என்னும் நோக்கத்தோடு கற்கிறார்கள். இந்த உத்தியோக ஆசை பணக்காரப் பிள்ளைகளையும் விடுவதில்லை. சர்க்கார் குமாஸ்தாவாக அமர்ந்து பேர்பெற வேண்டும் என்னும் இந்திய மாணவன் முன்னேற்றமடைவானா, நூதன விஷயங்களை ஆராய்ந்து உலகத்திற்கு உதவி செய்ய விரும்பும் வெள்ளை மாணவன் முன்னேற்றமடைவானா? இந்தியனுக்குக் குறுகிய நோக்கம் இருப்பதால் கீழ் நோக்கிச் செல்லுகிறான். பிறநியனுக்கு உயர்ந்த மேலான நோக்கம் இருப்பதால் முன்னேற்றமடைகிறான். நாமும் குறுகிய நோக்கங்களை உதறித்தள்ளி உயர்ந்த விசாலமான நோக்கங்களில் மூளையைச் செலுத்தினால் திண்ணமாக முன்னேற்றமடையலாம்.

புத்தர் பிறந்த தினம்.

கள்ளிக்கோட்டையில்புத்தர்பிறந்தநாள் கொண்டாட்டம் மே மாதம 12 தேதி நடைபெறும் அதுசமயம்திரு. ஈ. வெ. ராமசாமியார் புத்தரும் சுயமரியாதைக் கொள்கையும் என்பது பற்றி ஒரு உபன்யாசம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார்.

இராமாயணத்தின்
ஆபாசம்.
விலை அணா 4.
'குடி அரசு' ஆபீஸ், ஈரோடு.

மேயோ கூற்று
மெய்யா—பொய்யா?
விலை அணா 4.
சி. எ. அய்யாமுத்து
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

தாது புஷ்டிக்கு
பழநி, சி. எம். சாமி,
மன்மத குளிகை
அநேக பரிசுகள்பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி இவற்றைத் தரவல்லது. பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும்.
60 குளிகைக்கு ரூ. 5. 30 குளிகை ரூ. 3
அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்பவேண்டும்.
சி. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை பழநி, S. I.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

சத்தை ஓர் உணவாகக் கூறவில்லை யாயினும், மனிதன் சாப்பிடக் கூடிய உயிர்ப் பிராணிகளின் நாமங்களைக் கூறப்பட்டிருக்கும் அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

முள்ளெலி, பெருச்சாளி, ஆமை, முயல் ஆகியவைகளை இர்துமத் நிபுணர்கள் உண்ணலாமென வைத்திருக்கின்றார்கள். நான்கு கால் மிருகங்களில் ஒட்டகம் ஒன்றுமட்டும் நீங்கலாக ஒரு பக்கத்தில் மட்டும் பல் லிருக்கக் கூடிய மிருகங்கள் எதானாலும் சாப்பிடலாம். [மனு 18—5]

மேலே கூறப்பட்ட நிபந்தனைப்படி பசுவும் அதில் சேர்ந்ததென்பதில் ஐயமில்லை ஏனெனில் பசுவுக்கு ஒரே பக்கத்தில்தான் பற்களுண்டு என்பது மனு ஸ்மிருதியில் மறைவானதன்று. மனு பசுவைச் சாப்பிடக் கூடாதென்று விலக்கியிருந்தால் ஒட்டகத்தோடு சேர்த்துப் பசுவையும் கண்டிப்பாக சாப்பிடக் கூடாதென விலக்கியிருப்பார்கள். ஆனால் முன் பின் வாசகங்களைக் கவனிப்பது கொண்டு பசுவைச் சாப்பிடக் கூடாதென விலக்கவில்லையென்று நாம் அர்த்தம் செய்துகொள்வது சரியான அத்தாட்சியாகமாட்டாது. ஆதலின் பிரமச்சாரியானவர் தம் வீட்டிற்கு திரும்பி வருவதற்காக குருவுக்கு சில காணிக்கைகள் கொடுக்கின்றார்கள். இவ் விஷயம் மனு ஸ்மிருதியில் தக்க ஆதாரமாக இருக்கிறது. அதில் எழுதியிருப்பதாவது:—

பிரமச்சாரிகள் விவாகத்திற்கு முன் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் காணிக்கைகளைச் சேகரித்து புஷ்பங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட கம்பளத்தில் உட்கார்ந்து மார்க்கக் கோட்பாட்டின் படி குருவுக்கு ஒரு பசுவை வெகுமதியாக கொடுக்கவேண்டும். [மனு 3—3] அதன் பின்வரும் ஒரு வாசகத்தில் காணப்படுவது:-இராஜாக்கள் பிரபல விருந்தினர்களுக்காக இன்பமான சாதமும் பசு மாமிசமும் செய்யப்பட்டு வந்திருக்கின்றது.

அஸ்வ மஹாபாரதம் ராமாயணம்.

அஸ்வத் தமது அரச கட்டளையில் அவர்க்கமாகக் கூறுவதாவது:-

ஆதி காலத்தில் அவனுடைய பொக்கு மடத்தில் லக்ஷக் கணக்கான உயிர்ப் பிராணிகள் உணவுக்காக அறுக்கப்பட்டு வந்திருக்கிறது, ஆனால் அவைகள் இன்னின்ன 'பிராணிகளென விவரமாகக் கூறப்படவில்லை, அவைகளின் விவரங்கள் தெரியாவிடினும் அவ்வாறு மாமிசம் சாப்பிடும் காலத்தில் அவர் ஆடுகளை மட்டும் போதுமென வைத்திருக்க மாட்டாரென நாம் ஊகித்துக் கொள்ள முடியும்.

மஹாபாரதம், ராமாயணம் இவைகளிலும் கோமேத யாகத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. [கோமேதயாகமென்பது உயிர்ப் பிராணிகளை [குர்பானி] கொலை செய்வது, ஆனால் அதில் விஷயங்கள் விரிவாகக் கூறப்படவில்லை. பசுவின் மாமிசத்தை உணவைப் போல் சாப்பிடப்பட்டு வந்ததா இல்லையாவென்ற விவரமும் கூறப்படவில்லை.

வைதீகத்தில் பசு மாமிசம்

ஈஸவி 500, 600 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட சர்க்சந்தவென்ற வைதீகப் புத்தகத்தின் ஓர் அத்தியாயத்தில் இவ் விஷயத்தை விரிவுரையாக கூறப்பட்டிருக்கிறது. அதில் ஓர் அத்தியாயத்தில் உணவு விஷயமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஓர் இடத்தில் காணப்படுவதாவது:- பசு, எருமை, பன்றி இவைகளின் மாமிசங்களை பிரதிதினந்தோறும் புசிக்கக் கூடாதெனவரையப்பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்ட விஷயங்களை நன்கு கவனிப்பதுகொண்டு தெரியவருவதாவது:-

அக் காலத்தில் ஹிந்துக்கள் பசு மாமிசம் சாப்பிட்டுவந்தார் களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் பசு மாமிசம் தக்க பல முடைய வஸ்துவானதால் பிரதி நாட்கள் தோறும் சாப்பிடலாமென அனுமதிக்கப்படவில்லை. மற்றுமோர் இடத்தில் அக்கிரந்த கர்த்தாவானவர் கூறுவதாவது:- கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்குப் பசு மாமிசம் கொடுக்க வேண்டு மென்றும் அது பிரசவ காலத்திற்கு வேண்டிய பலத்தைக் கொடுக்கிறதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மற்றும் சில வைதீகப் புத்தகங்களில் பல முறைகள் கூறப்பட்டிருக்கிறதாயினும் பசு மாமிசம் அறவே சாப்பிடக் கூடாதென எந்த வைதீகப் புத்தகத்திலும் காணப்படவில்லை. அவ்மனு விஷயாவுடைய சில வைதீகப் புத்தகத்தில் கூறப்பட்டிருப்பதாவது:- ஓர் மனிதன் யோதையாக இருந்து தெளிவு பெற்றபின் அவன் பசு இறைச்சி சாப்பிடுவதால் பெரும் அனுகூலங்களிருப்பதாக வரையப்பட்டிருக்கிறது.

பசு மாமிச உப்புக்கண்டம்

குர்ஹியாசூத்திரத்தில் பசு குர்பானியின் முறை ஓர் விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு சுடப்பட்ட பசு மாமிசம் உப்புக் கண்டம் எனக் கூறப்படுகிறது. அதற்காக வேண்டி பசுக்களில் நல்ல பசுவாகவும், கொழுத்ததாகவும் இருப்பதுடன் பாதரம் நிறமாகவும் இருக்கக் கூடாது. இவ்வாறு இந்தப் பசுவுக்கு பல நிபந்தனைகளுண்டு. அவ்வாறு குர்பனி செய்யப்படும் பசுவிற்கு எத்தனை நிபந்தனைகளிட்டிருக்கின்றார்களோ அத்தனை நிபந்தனைகளும் பொருந்திய ஓர் பசுங் கன்று இடைத்தால் வென்னீர்கொண்டு குளிப்பாட்டி அதை ரூரா [சுவாமி] வுக்கு வேண்டுதலை செய்து கட்டி வைத்து வளர்த்து வருகின்றார்கள். அந்தக் கன்றுக்குப் பற்கள் பூராவும் முளைத்து குறிப்பிட்ட தவணை வந்தவுடன் குர்பானியின் மந்திரம் கிரிவுக்கள் தெரிந்த புர்ஹத் பிராமணனை அழைத்து அவர் படிக்க வேண்டிய மந்திரங்களைப் படித்து நெருப்பில் மோடவேண்டிய வஸ்துக்களைப் போட்டு செய்யவேண்டிய கிரியைகள் பூராவையும் செய்து முடித்துவிட்டு புது நூதனமாக தயார் செய்யப்பட்ட ஓர் இடத்திற்கு அந்தப் பசுவைக் கொண்டுபோய் பொதுவான சட்டப்படி அறுத்து அதன் ஈரலை எடுத்து ஓர் தட்டில் வைத்து 12 தேவதைகளின் நாமங்களைச் சொல்லிக்கொண்டே அந்தத் தட்டை நெருப்பில் வைத்து விடுகிறார்! அதன் பிறகு வைக்கோல் புற்களை விரித்து கொஞ்சம் அரிசிப் பொங்கலையும் பசு மாமிசத்தையும் வைத்து ரூரோவுக்கு பூஜை செய்கின்றார்கள். பூர்வீக காலத்தில் அவ்வாறு குர்பானி செய்யப்பட்ட பசுவின் எலும்பு; ஜவ்வு, தோல் இவைகளை நெருப்பில் போட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு வந்த சம்பீதா ரிஷியானவர் அவ்வாறு நெருப்பில் போடப்படும் வஸ்துக்களில் பொது ஜனங்களுக்குப் பிரயோஜனம் தரக் கூடியதான தோலை நெருப்பில் போடுவதற்கு பதிலாக செருப்பாகத் தைத்து உபயோகப் படுத்திக் கொள்ளலாமென பொதுவாக உத்தரவு செய்துவிட்டார். அவ்வாறு ரூராவுக்கு பூஜை செயததன் பிறகு பிராமண பூசாரியானவர் இடது பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு நேராக எழுந்து நின்று நீதோ சில மந்திரங்களைப் படித்துக்கொண்டே அறுக்கப்பட்ட பசுவின் இரத்தத்தை அவ்விடங்களிலிருக்கும் சர்ப்பங்களுக்கு சேர்க்கை செய்து விடுகிறார். இவ்வெல்லாக் கிரியைகளும் செய்து முடித்த பிறகு கடைசியாக [சுவிஸ்த்தாக்கிர்த்] என்ற ஒரு பூஜையும் செய்யப்படுகிறது. பிறகு அப் பசுவுடைய நெஞ்சு மாமிசத்திலிருந்தும் சுடுவதற்காகக் கொஞ்சம் மாமிசத்தை எடுத்துக் கொள்ளப்படுகிறது

அதன் பிறகு மீதியாயிருக்கும் அப் பசுவின் மாமிசத்தைப் பொதுவாக எல்லோரும் சாப்பிடலாமென்று சில சூத்திரங்கள் கூறுகின்றன. சில சூத்திரங்கள் அப் பசுவை குர்பானி செய்தவர்கள் மட்டும் சாப்பிடலாமெனக் கூறுகின்றன.

இவ்வாறு ஒரு மனிதன் குர்பானி செய்துவிட்டால் அவனுக்கு வயது அதிகமாகிறதென்றும், செல்வந்தனாவானென்றும் நல்ல நிலைமையிலேயே இருப்பானென்றும் தன் மதத்தில் கௌரவமுடையவனாக இருப்பானென்றும் சந்ததிகள் அதிகமாகுமென்றும், கால் நடை மிருகங்கள் அவனுக்கு அதிகமாகுமென்றும் அவ் வேதத்தில் ஆசை காண்பிக்கப்பட்டிருக்கிறது. சகல தனவந்தர்களும் அவர்கள் வயதில் ஓர் விடுத்தமாவது இவ்வாறு குர்பானி செய்மவேண்டிஜது முக்கியமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு குர்பானி செய்யப்பட்ட பசு மாமிசம் எவ்வாறு சமைக்கப்பட்டதென்ற விஷயம் விரிவாகக் கூறப்படாதது மிகவும் வருந்தத் தக்கதே. சமைக்கப்படும் முறை விவரமாக கூறப்படாவிடினும் அறுக்கப்பட்ட பசுவின் நெஞ்சு மாமிசத்திலிருந்து சுடுவதற்காக மாமிசம் எடுப்பதே அவர்கள் சமைக்கும் முறையை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

நீதி வாக்கியங்கள்.

1. அடிமைத் தனமே படிமிசை கொடியது
ஆலயம் ஆரியர் காரியா லாயமே
இழிகுலத் தோரெனப் பழிமொழி பகரேல்
ஈனச் சாதியென் றானம் பேசேல்
உயர்குலப் பேச்சு கயவரின் சூட்சி
ஊதியம் உறிஞ்ச வேதியர் அறிஞர்
எதற்குத் தாசிகள் மதத்திற் கவசியம்?
ஏய்த்துப் பிழைப்பார் பேய்க்குண மாந்தர்
ஐக்கியம் விதைத்தார் வைக்கம் வீரர்
ஒற்றுமை மனிதருள் அற்றது மதத்தால்
ஓய்ந்த சரித்திரம் ஆய்ந்திடத் தரித்திரம்
ஔடதமொத்தார் கௌதம புத்தர்
கன்னிகை மேயோ சொன்னவை பொய்யோ?
காவியப் பெருமையை கூவிப் பயனென்?
கிரகணத் தோற்றம் அரவெனப் பிதற்றேல்
கீதையிற் கூடச் சாதிப் புரட்டேன்
குரங்கெனத் தமிழரை வரைந்தனர் புராணம்.
கூறின வாக்கை மீறுர் தக்கோர்
கூறுவர் பொய்யெலாம் தேறுதல் காலம்
கெட்ட வழக்கம் விட்டிட லழகு
கேட்டினை விளைத்தது நாட்டினிற் ஜாதி
கைத்தலம் நெருப்பென ஏய்த்தனர் பார்ப்பார்
கொன்றுயிர் வதைத்துத் தின்றிடல் பலிகாண்
கோதையர் கற்றல் பேதமை பற்று
கௌளி கத்தலிற் கவனஞ் செலுத்தேல். சிவகப்பு

(தொடரும்)

தி ,விழா.லுக்குச் செல்லவேண்டுமா?

சகோதர சகோதரிகளே!

நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை வீணே செலவு செய்து திருவிழாக்களுக்குச் செல்வதால் அடைந்த பலனென்ன? அவ்வாறு உங்களைப் போல் போகாதவர்கள் உயர் பதவியில் இருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா. அவர்கள் அப்பணத்தைக் கொண்டு சுகமே வாழ நீங்கள் அதை இத்தகைய வழிகளில் வீணே பாழாக்கி வறுமையுற்று வாடுகிறீர்கள். இவ்வாறு புண்ணியம் சம்பாதிக்க பொருள் செலவு செய்து திருவிழாக்களுக்குப்போவது குருட்டு நம்பிக்கையின் பயன் என உணர்ந்து இக்காலத்தில் எல்லா மதத்தினரும் அவ்வாறு செல்வதை விட்டதனால் செல்வர்களாகவும், அறிவாளிகளாகவும் வாழ்வதை உணருங்கள். அன்பாகளே அதைக் குறித்து அடியில் வரைந்துள்ள வற்றை சற்றே ஊன்றி ஆராயுங்கள்.

இந்து சரித்திரங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? பாமர மக்களுக்குத்தான் கோவில்கள் கட்டப்பட்டுள்ளனவென்று கூறப்பட்டிருக்கிறது. அவைகளை எடுத்துக்காட்டுகின்றோம்:—

1. அக்னிர்தேவோத்விஜா தீனாம்! முனீநாம்ஹ்ருதிதைவத ப்ரிதிமால் வபரபுத்தர் நாம (உத்தர கீதை)

ஸர்வதர்ஸமர்வினா. (இ-ள்) துவிஜர்களுக்கு அக்னியில் தெய்வம் முனிவர்களுக்கு இருதயத்தில் தெய்வம் புத்தியில்லாதவர்களுக்கு விக்கிரகத்தில் தெய்வம் சமதிருஷ்டியுடையவர்களுக்கு எங்கும்தெய்வம்.

2. தீர்த்தே தானே தவோயக்ஞே காஷ்டே பாஷாண கேபதா! ஸிவம் பஸ்யதி மூடாதமா! ஸிவோதேஹே ப்ரஸ்டிதா! (ஸ்காந்த புராணம் ஞானயோக காண்டம் நாடிச்சக்கிராத்தியாயம்)

(இ-ள்) மூடாத்மாக்கள் தீர்த்தத்திலும், தானததிலும், தலத்திலும், யாகததிலும், கட்டையிலும், கல்லிலும், சிவனிருப்பதாய் நினைக்கிறார்கள். சிவனே நமக்குள்ளே இருக்கிறார்.

3. ஸிவம் ஆத்மநி பஸ்யந்தி ப்ரதிமாஸுநயோகிந. அக்ஞானம் பாவநார்த்தாய ப்ரதிமா பரிகல்பிதா. (இரக்ஷிணிய சமய நிர்ணயம் 131, 132-ம் பக்கம்.)

(இ-ள்) யோகிகள் சிவனைத் தமக்குள்ளே காண்பார்களே யொழிய விக்கிரகங்களில் காணார்கள். அஞ்ஞானிகளுக்கு பாவனையின் பொருட்டு விக்கிரகங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் காசி காசி என்று நீ கால்தடுக்க ஓடுகிறீர்.

காசியோடி யாடினும் கறப்பு வெள்ளையாகுமோ (சிவவாக்கியர்)

"தீர்த்தமாமனாலும் அகப்பேய் தீவினைபோகாதே

ஊத்தை போனாலும் அகப்பேய் உள்வினை தீராதே" அகப்பேய்சித்தர்

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன?" (பட்டினத்தார்)

கல்லிலும் செம்பிலுமோ விருப்பானெங்கள்கண்ணுதலே (பட்டினத்தடிகள்)

சாவதான தத்துவச்சடங்கு
செய்யு மூமைகாள்
தேவர்க் கல்லுமாவரோ சிரிப்ப
தன்றி என்செய்வேன்
மூவராலுமறியொணாத
முத்தொழிற் பகாப்பொருள்
காவலாக வும்முளே கலந்திருப்ப
தண்மையே (சிவ வாக்கியா)

'சற்குருவை யறியாமலுலகிலேதான்'
சண்டாளர் கல்லுகளை
தெய்வமென்று பொய்குருக்கள்
சொன்ன புத்திதன்னைக்கேட்டு
பூசை செய்து கல்லுகளை
போற்றி செயவார்.
சொற்குருக்கள் தங்களது
செய்தி கேட்டால்
சொர்க முண்டோ நரகமல்லால்
சொல்லும்போது,
சற்குருவை யறிந்தவற்
குடனே மோக்ஷம்
சார்வதென்றே முன்னோர்கள்
சாற்றினரே [சங்கராச்சாரியர்]
பண்டுநாள் பரித்தெறிந்த
பன்மலர் களெத்தனை
பாழிலே செபித்துவிட்ட
மந்திரங்களெத்தனை
மிண்டஞ்ய்த் திரிந்தபோது

இறைத்த நீர்களெத்தனை மீளவுஞ் சிவாலயங்கள் சுற்றிவந்ததெத்தனை, அண்டர் கோனிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகள், கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே சிவவாக்கியம் இந்த ஆதாரங்கள் என்ன சொல்லுகின்றன?

அறிவுடைய மக்களே! மேலே காட்டிய ஸ்லோகங்களினாலும் செய்யுட்களினாலும் அக்காலத்திருந்தவர்கள் நம்மையெல்லாம் மூடர்என எண்ணி நமது மூடபுத்தி நீங்கா திருக்கும் பொருட்டு நமக்காக விக்கிரகங்களை உண்டாக்கினார்கள் என்பது. விக்கிரகங்களில் தெய்வமில்லை என்பதும், தெய்வம் எங்கும் நிறைந்து நம்முள்ளும் இருக்கிறதென்பதும் விளங்கவில்லையா? க்ஷேத்திரங்கள் செல்வதால் காசு செலவாகுமேயன்றி வேறு பயனில்லை என்பதும், அறிவுடையவர்கள் கண்ட கோயிலை தெய்வமென்று கையெடுப்பதில்லை என்பதும் உணர்ந்திருப்பீர்கள் ஆதலால் இதுவரையிலும் தவறி நடந்து வந்தாலும் இனியாவது உண்மை புணர்ந்து நடவுங்கள். கோவில்களில் அற்புதங்கள் நடக்கிறதென்று எண்ணி நம்பி போகாதீர்கள். தெய்வம் கனவில் வந்து கூறுது. (தெய்வத்திற்கு உருவமில்லை, சில்லரை தெய்வமில்லை என்பது இந்து மதத்தின் சாரம், விரித்தால் பெருகும்) நினைவே கனவு வேதாந்த சித்தாந்திகளும் "கன்னிமரியாள் கருதரித்த விஷயமாக யோசேப்பு கண்ட கனவு நினைவே" என முடிவு காட்டியுள்ளனா. கையிலுள்ள காசைத் தொலைத்து அதுவும் போதாது கடன்வாங்கிக் கஷ்டப்படுவதற்கா திருவிழாவுக்கு செல்ல வேண்டும்? நமக்கு வேண்டுவது கோவிலா? அல்லது கல்வியுஞ்செல்வமுமா? கோவிலை அறிவுடைய மக்கள விரும்பார்கள். கல்வியுஞ் செல்வமும் ஆகியவற்றையே விரும்புவார்கள். மேனாட்டினர் கல்வியிலுஞ் செல்வத்திலுமே மேலோங்கி வருகின்றனர் நம் இந்துமக்கள் கோவில் மூடப்பழக்க வழக்கமதத்தினாலேயே பின்னடைந்து வருகின்றனர் நம் நாட்டினர் தரித்திரத்தையும் அறியாமையுமே அடைந்து வருகின்றனர். ஆதலால் பாமரரல்லாத நாம் திருவிழாவுக்கு செல்லவேண்டியது இல்லையல்லவா? எனகுமாரபாளையம் உண்மை நாடுவோர் சங்கத்தார் வரைகின்றனர்.

மதுவிலக்குக் கண்காட்சி

திருக்கழுக்குன்றம் கனம் மந்திரியார் அவர்கள் வருகை.

செங்கல்பட்டு ஜில்லா மதுவிலக்குப் பிரசார கழகத்தின் ஆதரவில் சென்ற 9-4-30 புதன்கிழமை காலை 9 மணிக்கு திருக்கழுக்குன்றம் போர்டு பாடசாலை கட்டிடத்தில் மதுவிலக்குக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதில் குடியினால் நேரும் பலவித துன்பங்களை விளக்கும் படங்களும் அதினால் அறிவு, பொருள், தேகபலம் முதலிய நஷ்டங்கள் அடைவதைக் காட்டும் மேனாட்டு சித்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன. ஒருவேளை குடிப்பவனுடைய பணத்தைக்கொண்டு ஒருநாள் சாப்பாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் சேகரித்து காட்டப் பட்டிருந்தது. அக் கண்காட்சியை பொதுமக்கள் கண்டு பயனடையக்கூடிய வகையில் திறம்பட வைக்கப்பட்டிருந்தன.

பிரசாரகர்கள் ஒவ்வொருவரும் காட்சியின் அண்டையிலிருந்து வருபவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்கள். மதுவிலக்கு பிரசாரகர்கள் சொற்பொழிவும், இன்னிசை பாடல்களும் பாடினார்கள்.

அன்று மாலை 3-மணிக்கு வாலாஜாபாத் இந்துமத பாடசாலை மாணவர்கள் அதே இடத்தில் மதுவிலக்கு நாடகமாகிய "மதிமோகன்" என்னும் நாடகத்தைச் சுருக்கமாகவும், மிக அழகாகவும் நடித்துக் காட்டினார்கள்.

குடியை நாம் பிடித்தால் அது நம்மைச் சாகும் வரையில் பிடித்து இருக்கும் என்பது இந்த நாடகத்தில் தெளிவாக விளங்கிற்று:—

அதுசமயம் சுகாதார மந்திரி கனம் S. முத்தையா முதலியார் B.A.B.L. M.L.C., அவர்கள் ஜில்லாபோர்டு தலைவர் திவான்பகதூர் M. K. ரெட்டியார் B. A. அவர்கள், கவுன்சில் செக்ரிடெரி மாணிக்கவேல் நாயகர் B.A.B.L.M.L.C., அவர்கள் தென் ஆற்காடு ஜில்லாபோர்டு மாஜி தலைவர் சீதாராம ரெட்டியார் B.A.B.L. M.L.C., அவர்கள மதுராந்தகம் தாலூக்கா போர்டு தலைவர் நாராயணசாமி ரெட்டியார் அவர்களும் இன்னும் பிற ஜில்லாபோர்டு மெம்பர்களும்வள்ளிபுரம் ஜமீன்தார் வைத்தியநாத முதலியார் முதலியவர்களும் இன்னும் ஏராளமான பொது ஜனங்களும் பெண்களும் விஜயம் செய்திருந்தனர் என்று W. R. நடராஜன் எழுதுகிறார்.

குறிப்பு:—மதுவிலக்குப் பிரசாரத்தை கண்காக்ஷி மூலமாகவும் நாடக மூலமாகவும் பிரசாரம் செய்வது விசேஷ பலனைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. கோவையில் நடந்த மதுவிலக்குக் கண்காக்ஷியின் விபரம் சென்றவாரம் குடியரசில் வெளிவந்ததை நேயர்கள் அறிவார்கள் இதேபோல் ஏனைய ஜில்லா மதுவிலக்குக் கமிட்டியார்களும்தங்கள் பிரசாரத்தை கண்காக்ஷி நாடகம் மூலியமாக நடத்திக் காண்பித்தால் பாமர மக்கள் கூடிய விரைவில் சீர்திருத்த மடைவதோடு குடிப்பழக்கம் அடியோடு ஒழிந்து நாடு நலனுறுமென்று நம்புகிறோம். (ப. ர்.)

ஆங்கில ஆசான்

(10-ம் பதிப்பு)

60-நாளில் உபாத்தியாய ரில்லாமல் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளும் புத்தகம்.

எங்கள் (லேடி டிரேட் மார்க்) புத்தகத்தைப் பார்த்து வாங்குங்கள். 800- பக்கமுள்ள புத்தகம்.

விலை ரூ. 2.

இதுவேபுத்தகம் தேலுங்கிலும் கிடைக்கும்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத்தெரு, மதராஸ்.

முன்னேற்றம்.

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன்ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி இதன் வருடசந்தா ரூ. 5-0-0 அல்லது மலாய் நாட்டிற்கு டாலர் 3.

விலாசம்:— மானேஜர், "முன்னேற்றம்" 152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

பெங்களூரில்

சுயமரியாதைப் பிரசாரம்.

'பெங்களூரில் சுயமரியாதை இயக்கத்தின்பேரால் கடந்த 2 மாத காலமாகத் திருவனந்தபுரம் சுவாமி கிருஷ்ணனந்தர் அவர்களால் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களைப் பற்றிப் பிரசாரம் நடந்துவந்ததின் பலனாய் நூற்றுக்கணக்கான மக்கள் சுயமரியாதை உணர்ச்சி மேலிட்டு சுயமரியாதைச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து பிரசாரத்திலும் கலந்துகொண்டிருக்கிறார்கள். இத்தகைய சீர்திருத்த பிரசாரத்தைக் கண்ட சில பார்ப்பனர் வயிற்றெரிச்சல் கொண்டு சுயநல கெட்ட எண்ணம் கொண்டு மேற்படி இயக்க பிரசாரத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையாக்கக் கொள்கைகளை மாற்றிக் கூறிப் பல பார்ப்பனர் கையொப்பமிட்டுப் போலீஸ் அதிகாரிகளுக்கு ஒரு மனு கொடுத்ததாகவும் அதன்பேரில் போலீஸ் அதிகாரிகள் சுவாமி கிருஷ்ணனந்தரைக் கூப்பிட்டு"உம்முடைய பிரசாரம் மக்களுக்குள் மதச்சண்டையை விளைவிக்கக் கருதுவதாயுள்ள தென்று மனுவந்திருப்பதால் உம்முடைய பிரசாரத்தை தயவுசெய்து நிறுத்தவும். அப்படிச் செய்வதாயிருந்தால் போலீஸ் கமிஷனரிடம் லைசென்ஸ் பெற்றுப் பிரசாரம் செய்யவும்" என்று அதிகாரதோரணையில் ஒரு ஸ்டேட்மெண்டில் கையெழுத்து வாங்கியிருப்பதாகவும் அதன் பேரில் பெங்களூர் சுயமரியாதைச் சங்கத்தார் போலீஸ்கமிஷனருக்குப்பேசும் உரிமை லைசென்ஸுக்கு மனுச்செய்து கொண்டிருப்பதாகவும் சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

மாளவியா

இராஜினமா தியாகம்.

இந்திய சட்டசபை ஸ்தானம் மூன்றரை வருஷம் வகித்து அதன் வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு திரு. மாளவியா அவர்கள் ராஜினமா செய்து விட்டார். இவரது தியாகமே தியாகம்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் பொது அறிவு இல்லாதவர்களாய் ஞான சூனியர்களாய் வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாய் மட்டும் இருந்துவரும் வரை நமது நாடு முன்னேற்றமடைந்ததாக கருதமுடியாது. ஆகவே ஆண்களும் பெண்களும் வாழ்வில் சம சுதந்திரத்துடனும் சம உரிமையுடனும் பரஸ்பர ஒற்றுமையுடனும் வாழவேண்டிய சட்ட திட்டங்கள் உண்டுபண்ண வேண்டும்.

இப்பெரிய மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பாக்கியத்தை சுயமரியாதைத் தொண்டர்களுள் ஒருவனாகிய எனக்கு அளித்ததைக் குறித்து எனது நன்றியறிதலை மறுபடியும் தெரிவித்துக் கொண்டு எனது தலைமைப் பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன். சமத்துவம் ஓங்குக! சமதர்மம் நிலைக்க!!

சுயமரியாதை வெற்றிபெறுக!!!

ஜோதிடப்புரட்டு

ஐயா!

நிகழும் 1930ம் ஞு ஏப்ரல்-மீ முதல் தேதியிலிருந்து ஒருவரும் தங்கள் பெண்குழந்தைகளுக்கு 14 வயது முடியுமுன் விவாகம் செய்யக்கூடாதென்று சட்டம் ஏற்படுத்தப்பட்டு விட்டதே! ஆனால், 3, 5, 7, 9, இவ் வயதுகளில் கலியாணம் நடக்குமென்று எழுதிக்கொடுத்த ஜோதிடங்களெல்லாம் பொய்யாய்ப் போகுமன்றோ, இப்படியா, இந்து தேசத்திலுள்ள எத்தனையோ ஜோசியர்களுடைய வாக்கெல்லாம் நாசமாய்ப் போய்விட்டதே; என்னவிந்தை! என்னவிந்தை! வெட்கம்வெட்கம்' இதற்குமுன் 5, 7, 8, 9, வயதுகளில் ஜோதிடம் பார்த்து கலியாணமாகி 6, 7, 8, 9, வயதுகளில் விதவையாய்ப் போனபெண்களெல்லாம் "விதி விதி" என்று மதிமயங்கி நாசமாய்ப் போனது போக, இனிமேலாவது அப்படிப்பட்ட கொடுமை இல்லாதிருக்குமன்றோ விதிபெரிதா மதிபெரிதா என்பதற்கு இதுவே ஓர் அத்தாட்சியாகுமென்பதை எளிதில்உணர்வோமாக.

இப்படிக்கு
பொது நலப்பிரியன்.

நாகரீகமற்ற செய்கை.

பதினான்கு வயதுக்குட்பட்ட பெண்களுக்குக் கலியாணம்செய்யக்கூடாதென்று சட்டம் விதித்தது போல ஹிந்து ஆலயங்களிலுள்ள தேவர்களுக்கும் மேஜர் ஆகாத அதாவது 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்ணைக்கலியாணம் செய்து வைக்கக்கூடாதென்று ஓர் சட்டம் பிறந்தால் நலமாயிருக்குமே யாதோர் பாவமுமறியாக்குழந்தை! பெண்களை துன்மார்க்கச் செய்கைக்கு ஒப்புக் கொடுப்பதால் வரும் சாபமும் அழிவும் நமது தேசத்தின்மேலல்லவோ நிற்கும் என்பதை அறியாதிருப்பதென்ன? இப்படிப்பட்ட வெட்கம் கெட்டபொது மாதர் வழக்கத்தை தெய்வத்தின் பேரால் வைத்துக்கொண்டு பூரண சுயராஜியம் கேட்பதினாலல்லவா அன்னிய நாட்டார் நம்முடைய புத்திகளைப்பற்றி வியந்து கேவலமாய்க் கைகொட்டி நகைக்கின்றனர் என்பதை அறியாது போனதென்னவோ? கடவுளுக்கும் வயதுவந்த பெண்ணைக்கலியாணம் செய்தால் அதற்கு முன் அவளின் கற்பு கெட்டுப்போகுமென்பதன்றோ?

இபபடிக்கு
சன்மார்க்கம் விரும்புவோன்.

30,000 சந்தாதாரர்களுடையது !!

அமிர்தகுணபோதினி.

5ம் வருடம் ஆரம்பம் 5ம் வருடம் ஆரம்பம்

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும், அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி மத வித்தியாசமின்றி சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாசங்களையும் யாவரும் முன்னேற்றமடையக்கூடிய வழியையும் ... தை பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். ... காபி ஒன்று வாங்கி வாசித்துப்பார்த்தால் பிறர் சிபார்சு இல்லாமல் தாங்களே சந்தாவில சேர்வீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 64-பக்கங்களுடன் வெளிவரும். வருடசந்தா ரூ. 1. வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி காபி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்.
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதறாஸ்

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை.

டேபில் டைம்பீஸ் இனும் !



எங்கள் ரோல்டு கோல்டு "சேவல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். ஆண்டும் 5 வருஷம் உத்தரவாதம். முந்துங்கள்.

விலை ரூபாய் 6-0-0.
தபால் கூலி பிரத்தியேகம்.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலைத் தெரு, சென்னை

இனும் ! பவுண்டன் பேனு இனும் !!

ரோல்டு கோல்டு பிளேட் புது மாடல் கைக் கெடியாரங்கள்.



இதில் கண்ட எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு ப்ளேட் கைச்சங்கிலி இனுமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம்.

ரூ. 5—0—0 வ. பி. வேறு.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, சென்னை.

திருநெலலிக்காவல் ஸ்டேசன மாஸடரின் அற்புதங்கள்.

(என். பி. காளப்பா).

சென்ற மாதம் நானும் எனது ாழர் ஒருவருமாக இருவரும் ர்ந்து தஞ்சை ஜில்லாவில் ள்ள திருநெல்லிக்காவல் என் ம் ஊருக்கு போனோம். நாங் ள் திருநெல்லிக்காவல் ரயில்வே டேஷனில் இறங்கினதும், ங்களோடு ஏறக்குறைய சுமார் 0, 300 ஜனங்கள் அந்தஸ்டே னிலேயே இறங்கினார்கள். க்கால் பாகம் சுமார் 20வயதுக் ள் உள்ள பெண்களே பெரும் கமாய்இருந்தார்கள் நாங்களி வரும் இந்தக் கூட்டம் இங்கு றங்குவதற்கு காரணம் ன்ன? இங்கு ஏதாகிலும் கோ ல் உற்சவமா என அங்கு சில ரக் கேட்டோம் அவர்களில் ருவர் மிக பயபக்தியோடு அடி ல் கண்ட சங்கதியை தெரிவித் ர் அதாவது ஐயா, இந்த ஊர் யில்வே ஸ்டேசன் மாஸ்டர்ஒரு பெரிய அவதாரமாய் வந்திருக்கிறார் கடவுளுன்னு கூட சொல்லாம்ங்கோ எல்லா வியாதியும் மருந்து மாயம் இல்லமல் அவர் பார்வை பட்டவுடனே பறந்து விடுகிறது அது மாத்திரம் இல்லிங்க.தீராதக் குஷட நோய்களும் சுகமாய் போவதோடு பேய்கள் நடுங்குகிறது என்று சொன்னார்: நாங்களும் இதைக் கேட்டுவிட்டு அதை பார்க்கச் சென்றோம். அங்கு திரு. ஸ்டேசன்மாஸ்டர் வீட்டிற்கு எதிரில் 10 அல்லது 12 அடி சதுர தூரத்திற்கு மூங்கில் கம்புகளாலே கம்பவுண்ட் அடைக்கப்பட்டிருக்கிறது.

அதனுள் நல்ல வாலிபமான பெண்கள் நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டும் இருக்கிறார்கள் அவர்களைப்பார்த்தவுடன்மிக பரிதாபமாயிருந்தது. சோர்ந்த முகத்துடனும தலைவிரி கோலமாய் கொஞ்சம் பக்தியாய் இருக்கிற மாதிரியும் இருந்தாகள் இதில் முக்கியமானசங்கதி என்னவென்றால் வெகு தூரத்திலிருந்து நல்ல குடும்பத்துபெண்கள்தான். அதிகமாய் இருந்தார்கள் நிற்க,

இரவே வந்து காத்துக்கொண்டிருக்கிற மக்கள் கணக்கில்லை அவர்கள் இரவே வந்து சுகாதார குறைவான இடத்தில் புழுதியிலும் பனியிலும் படுத்து தூங்குவதுமாய் இருந்தார்கள் இப்போதும் இருக்கிறார்கள்அதோடு அங்கு வருகிற வியாதியஸ்தர்கள் அங்கு பக்கத்திலுள்ள குட்டையில் குளிப்பதும் அந்த உள்ள இரண்டு காபி கிளப்புகளில் அந்த தண்ணீரைக் கொண்டே பலகாரம் முதலியவைகள் செய்து விற்கிறதுமாய் இருக்கிறார்கள் இது ஒரு புறம் இருக்க, ஸ்டேசன் மாஸ்டர்கள் செய்கைஎன்ன என்று கவனிக்கச் சென்றோம். அவர் தன்னிடம் வருகிற ஜனங்களின் மேலே விபூதியை ஊதிவிடுவதும் வேப்பிலையை உருவி தலையில் போடுவதையும் தவிர வேறு ஒன்றும் செய்வதும் இல்லை அந்த ஒரு பெரிய பாவத்தை ஜனங்கள் பெற்றுககொண்டுடனே திரும்பிவிடுகிறார்கள் இந்த வியாதி தீர்ப்பதின் போலே தெ. இ. ர. கம்பெனிக்கு அதிக வரும்படி வருகிறதினாலே அவர்கள் இந்த ஸ்டேசன் மாஸ்டர் வேலையைப்பற்றிக் கூட கவனிப்பதில்லை மேலும் நாங்கள் இதன் உண்மையை வெளியில் சென்று விசாரித்தோம் அதாவது உள்ளூர் வியாதிஸ்தர்கள் அநேகருக்கு இவரின் கருணையும் கடாட்சமும் பலிப்பதில்லைஎன்று தெரிய வந்தது. இதை இல்லை என்று மறுத்தால்ஆதாரத்தோடு பின்னு எழுதுகிறேன் ஆகையினால் நமது மக்கள்இன்னும்மந்திரத்தில் மாங்காய் விழும் என்று நினைத்துக்கொண்டிருந்தால் ஏன் மில்லே போக்கள் இன்னும் 1000 பேர்கள் புறப்படமாட்டார்கள்.

பார்ப்பனீயமும் அர்த்தமற்ற சடங்கும் ஒழிந்த திதி

ஏரல் பாத்திர வியாபாரம் திருவாளர் பி. இ. நடராஜா அவர்கள் தனது தகப்பனார் காலஞ்சென்றதின் ஞாபகார்த்தமாக 14-4-30ல் பார்ப்பனீயமும் அர்த்தமற்ற சடங்கையும் சுயமரியாதை முறையில் திதியை நடத்தியுள்ளாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

அசல் தாம்பர பஸ்பம்.

மூன்றே வேளையில் குணம் தெரியும் குணமில்லாவிடில் பணம் வாபீஸ்

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள் சாப்பிட்டால் போதுமானது மற்ற மருந்துகளைப் போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து தருவித்து சாப்பிடாமல் நோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து

குஷ்டம், குறை நோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகபபற்றுகருங் குஷ்டம், வெண்குஷ்டம், அரிப்பு நமைச்சல், கிரந்தி, ஆராத ரணங்கள், தழிப்புண்புரை, கண்டாமாலை,பவுத்திரம் கன்னப்புத்து, யோனிப்புத்து குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், தீராதென கைவிடப்பட்ட இதர நோய்களும் அவசியம் குணமாகின்றன.

உங்கள் கவலை தீர்ந்துவிட்டது

உங்களைப்போலிருந்து கவலை ஒழிந்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்

நற்சாக்ஷி: கோலாலம்பூர் கண்டங்கர்பு ரோட்டு பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எஸ். குழந்தைசாமி பிள்ளை 31—10—1928 ல எழுதுவதை பாருங்கள்..............ஐயா தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் வளைந்திருந்த விரல்கள் நிமிர்ந்துவிட்டன. நெருப்புப் பட்டபோதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும கை விரல்களில் நெட்டியும் உண்டாகி விட்டது.

12-நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0—0

நீரழிவுக்கு

120 புடம் போட்ட கண் அடைக்கும் அப்ரேக் சிந்தூரம்

ஒரு மண்கலசத்தில் ஊசியினால் 7, 8. துவாரங்கள் போட்டு அது நிரைய தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் சொந்தூரம் கொஞ்சம் போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்தி விடும் இதைப்போலவே நீரழிவினால் ஜாஸ்திபோகும் நீரை நிறுத்தியும் நீரில் சர்க்கரையிருந்தால் மாற்றியும் நீர்பபெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்திமேகம், நீடித்த வெள்ளை இந்திரியம் நீருடன் போவது, பவுந்திரம் முதலிய வியாதிகளை அதி சீக்கிரம் குணப்படுத்துவதில் அனுபவமுள்ளது. பரிட்சித்துபார்க்க வேண்டுமானால் 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

24 நாள் சாப்பிட்டால் போதுமானது 24 நாள் மருந்து ரூ. 20—0—0 12 நாள் மருந்து ரூ. 10—0—0

அரண்மனை வைத்தியர் S T மாணிக்கம் பிள்ளை,

ஆயக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு: நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

[3-ம் பக்கம் தொடர்ச்சி]

அந்த சமயத்தில் உதவாத ஆச்சாரிய சுவாமிகளின் தவசும் பார்ப்பானுக்கு போட்ட சோறு தானதருமமும் பலன் கொடுக்கவில்லை யென்றால் பின் எந்த சமயத்தில் அவைகள் யாருக்குத்தான் உதவி செய்யும்.

பெரியவர்களை நிந்தித்து அவர்கள் சொன்ன சாஸ்திரங்களைக் குற்றம் சொல்லுகிறார்கள் சுயமரியாதைக் காரர்கள் என்று சொல்லுகிறவர்கள் சங்கராச்சாரியின் தவசும் பார்ப்பார்களுக்குக் கொடுத்த புண்ணியமும் அதன் மந்திர சக்திகளும் ஐதராலியைக் கண்டு அஞ்சினாலும் அவர் மகன் டிப்பு சுல்தான் அவர்களையும் கண்டு தெண்டம் விழுந்தவர். தாமல் மன்றோ அவர்களிடம் அடைக்கலம் புகுந்ததற்கு காரணம் சொல்லிவிட்டார்களானால் அந்த தவசும் புண்ணியமும் நோன சத்தியத்திலும் உலகோபகாரத்திலும் சென்று சனங்களுக்கு நன்மை செய்ததும் செய்யாததும் விளங்கிவிடும். அந்தத் தவசும் அதற்குச் செய்யும் தான தருமங்களின் புண்ணிய பலனும் பலன் கொடுக்காதது பிரத்தியட்சமாகவிருக்கையில் அதைப் பிரயோஜனமற்றதென்று சொல்லுவதில் குற்றமென்ன? டிப்பு சுல்தான் அவர்களின் அதிகாரம் மலையாள தேசத்திலெல்லாம் சென்று திருவனந்தபுரத்திற்கும் செல்லுகையில் அந்த ராஜாவும் ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்தார் என்பது பொய்யல்லவே? சங்கரர் பிறந்தது மலையாளம் மந்திர கர்மங்களுக்குப் பெயர்போனதும் தினமும் லெட்சக்கணக்கான பார்ப்பனர்களுக்கு அன்னதானம் ஆசார பூசைகளெல்லாம் செய்வதும் அங்கே தான் அதிகம் என்பது மெய்தானே? அப்படியிருந்தும் மலையாளம் டிப்பு சுல்தான் அவர்களால் தோற்கடிக்கப்பட்டதற்கு காரணமென்ன? சுயமரியாதைக் காரர்களை குற்றம் சொல்லுகிறவர்கள் சொல்லட்டும். வீரமிருந்த போர்க்குணமுள்ள ஜாதியார்களைக் கீழே கள்ளி தாழ்ந்தவர்களென்றும் ஒதுக்கப்பட்டவர்களென்றும் சாஸ்திரத்தால் சொல்லப்பட்டு ஜாதி வித்தியாசம், சாஸ்திரப்புரட்டு, சமயக்கொடுமை ஏற்படுத்தின சமயக்கருத்தாக்களும் அவர்களால் எழுதப்பட்ட சாஸ்திர ஏற்பாடும் அதைப் பின்பற்றின ராஜாக்களும் காரணமென்றும் அவை ஒழிந்து போக வேண்டுமென்றும் சுயமரியாதைக்காரர்கள் சொன்னால் அவை எப்படி குற்றமாகும்? சங்கராச்சாரியாரின் தபசாலும், குரு கடாட்சத்தாலும், மந்திரகர்மங்களின் விசேடத்தாலும், பார்ப்பானுக்கே கொடுத்த தானதருமங்களின் புண்ணியத்தாலும், சாரதா பீடப் பூசையாலும் காப்பாற்றப்படாத மைசூர் ராஜ்யம் சீரழிந்து சில்லரைப் பாளையக்காரர்கள் கொள்ளையடித்த கிராமங்களின் குடிகளுடைய கஷ்டங்களைக் கேட்கத் தகுதியுடையவர்களில்லாமல் பெண்களையும் பொருளையும் இழந்து இருந்த சமயம் டிப்பு சுல்தானை ஜெயித்து ஒழுங்கும் சட்டமும் உண்டு பண்ணி பாளையக்காரர்களையடக்கி சனங்களிடத்தில் சாதாரணமாகப் பழகி அவர்களுக்கு நம்பிக்கையை உண்டு பண்ணி இந்துக்களையும் முகமதியர்களையும் உத்தியோகத்திலமர்த்தி ராஜாங்கத்தில் அவர்களைப் பழக்கி பழய ராஜ வம்சத்திற்கே மைசூரை அளித்தது ஆங்கிலேய அரசாட்சியானது. அவர்கள் தபசும் அவர்கள் மந்திர கர்மங்களும் எவ்வளவு மகத்துவமுடையது பார்த்தீர்களா? இந்த மகத்துவத்திற்குக் காரணமென்ன?

நாம் எந்த சமூகத்தைத் தீண்டினால் நமக்குத் தீட்டுப் பட்டு நமது சமயமழிந்து நம் தெய்வங்களின் சான்னித்தியம் கெட்டுப் போய் விடுமென்று சொல்லுகிறோமோ அந்த தாழ்த்தப்பட்ட சமூகங்களே ஆங்கிலேய அரசாட்சிக்குப் பக்கத்துணையாகவிருந்து ஆங்கிலேயர்களை ஆகாரங்களினால் உபசரித்து வந்தவர்கள் என்பதை மறக்க முடியுமோ? அப்படியிருக்கையில் அவர்களால் நாம் தீட்டுப்பட்டுப் போவதும் நமது சமயம் அழிந்து போகுமென்பதும் தெய்வத்தின் சான்னிதியம் குறைந்து போகுமென்பதும் அறியாமை நம்மை நாமே கெடுத்துக் கொண்டதும் கெடுத்துக் கொள்ளுவதுமான அசூயை குணமுமென்று சொன்னால் சுயமரியாதைக் காரர்கள் எப்படிக் குற்றமாகும். மைசூர் மகாராஜா இழந்து போன ராஜ்ஜிய மகுடத்தை அவர் தலையில் ஏற்றுகையில் அதைச் சுற்றி ஆடம்பரத்துடனும் உபசரிக்கப்பட்ட மரியாதையுடனும் சூழ்ந்திருந்த ஆங்கிலேயர்களுக்கும் ஆங்கிலேய ராஜாங்கத்தின் சன்னத்து ஒப்பந்தங்களைக் கொடுத்து ராஜ்ஜியத்தை ஒப்புவித்த ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் ஆகாரங்களினால் திருப்தி செய்து ஆடையால் அலங்கரித்து சத்தி பண்ணி அனுப்பினவர்கள் நாம சொல்லும் தீண்டப்படாத ஜாதியார்களேயல்லாமல் சங்கராச்சாரியாரின் தவசும் தீர்த்தப்பிரசாதமுமல்லவே. தவசின் சான்னித்தியம் எதற்கு இருக்கிறதென்பதை கவனித்துப்பாருங்கள்.

நமது ராஜ்ஜியத்தில் கிருஸ்தவ குருக்களான பாதிரிகளும் வந்து தவசு செய்கிறார்கள். அவர்கள் மற்றவர்களை தங்கள் மதத்தில் சேர்த்துப் பணம்கொடுக்கும் தங்கள் சிஷ்யர்களுக்கு மதவிர்த்தியின் கணக்கைக் காட்டுகிறார்கள். கீழ்ப்படிப்பிலிருந்து மேல்படிப்புவரையிலும் பள்ளி வைத்திருக்கிறார்கள். தாங்களே உபாத்தியாயர்களாகவு மிருக்கிறார்கள். சிறிது பணம் வாங்கியும் வாங்காமலும் சாப்பாடு போடுகிறார்கள். சில சில இடத்தில் கைத்தொழிலும் கற்றுக்கொடுக்கிறார்கள். குருடர், ஊமைகளுக்கும் பள்ளி வைத்திருக்கிறார்கள். தாய் தந்தையில்லாத குழந்தைகளை வளர்த்து படிப்பு கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்களுக்கும் பலவிடத்தில் பாடசாலை வைத்திருக்கிறார்கள். பல இடத்தில் ஆஸ்பத்திரி வைத்திருக்கிறார்கள். நமது நாட்டில் பலரைத் துன்புறுத்தும் க்ஷயரோகத்திற்கு மதனபள்ளியில் வைத்திருக்கும் ஆஸ்பத்திரியும் அவர்களுடையதே. சென்னையிலும் பெங்களூரிலும் தீராத கண்வியாதிகளைத் தீர்ப்பதாகப் பிரஸ்தாபத்திலிருக்கும் ராமனாதபுரம் திருப்பத்தூர் தாலூகா கண்ணாஸ்பத்திரியும் அவர்களுடையதே. ஈரோட்டிலிருக்கும் பெண்கள் ஆஸ்பத்திரியும் அவர்களுடையதுதான். சங்கராச்சாரியை குருபீடமாகவுடைய மைசூர் மலைவாசிகளை ஈரோட்டிற்கு 45 மைலில் தூரத்திலுள்ள குண்டரி மலையில் ஒன்று சேர்த்து கிருஸ்த மதத்தில் சேர்த்து வீடு கட்டிக்கொடுத்து உழுது பயிர் செய்வதற்கு வேண்டிய சாதனங்களையும் கொடுத்து பூமிகளைப் பட்டா செய்து பள்ளியும் ஆஸ்பத்திரியும் வைத்து அவர்களை வெட்டி வேலை வாங்கி உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்த காட்டிலாகாத் தொல்லையிலிருந்து நீக்கி நீங்களும் மனிதர்கள் தான் என்று காட்டிக்கொடுத்துக் கொண்டிருப்பவர்களும் அவர்களே. இனியும் சொல்லுவதானால் சென்னை திருச்சி முதலிய உயர்ந்த பள்ளியில் படித்து உத்தியோகம் பெற்று ஆடம்பரமாகக் காலம் வாழ்க்கையை நடத்திக்கொண்டு ஆச்சாரிய சுவாமிகளின் சிஷ்யர்களென்று சனாதன தருமத்தை வந்திருப்பவர்களும் சொல்லுகிறவர்களுக்கும் சுயராஜ்யம் வேண்டுமென்கிற சிறிது உணர்ச்சி வந்திருக்கிறவர்களுக்கும் அந்த கிருஸ்துவ குருக்கள் கல்வியின் உதவியே காரணம் அல்லவா? இவைகளெல்லாம் தவசை மதப்பிரசாரத்திற்குச் செய்தார்களென்று சொன்னாலும் அநாதைப் பிள்ளைகளை வளர்த்த படிப்பை விர்த்தி பண்ணி நோயாளிக்கு வைத்தியசாலையும் உதவியும் ஏற்படுத்தி மலையாளத்தில் தாழ்ந்த ஜாதி யென்கிற பெண்கள் இடுப்பிற்குமேல் துணி அணியப்படாதென்று சங்கராச்சாரியின் தவசின் அக்கினி சுவாலையின் கொடுமையைத் தணிக்க உதவி புரிந்து அநேகம் பேரில் பல தலைமுறையாக ஒட்டிக் கொண்டிருந்த தீட்டை அரை அவுன்ஸ் தண்ணியில் ஐந்து நிமிஷத்தில் கழுவி சுத்தப்படுத்தி உலகத்து மனித கூட்டங்களோடு நீங்களும் போய் வாழுங்கள் என்று செய்தது வரையிலும் அவர்கள் தபசு செய்திருப்பதை தெய்வலோகம் போய் பார்க்கவேண்டியதில்லையே இந்த பூலோகத்திலேயே பிரத்தியட்சமாக விருக்கிறதே கிருஸ்தவ ஆச்சாரிகள் செய்துவரும் ஏற்பாட்டை அது தான் உலகோபகாரமான தபசென்றால் பொருந்தும். நமது சங்கராச்சாரி சுவாமிகள் செய்யும் தவசு உலகத்திற்கு எந்த விதத்தில் உபகாரிக்கிறதென்றும் எப்படி உலகத்திற்கு க்ஷேமம் செய்கிறதென்றும் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் எங்களுக்கு சொல்லிக் கொடுங்கள்.

இந்த உலகத்தை விட்டு பரலோகத்திற்கு வேண்டிய ஆத்மார்த்த காரியங்களுக்கு ஆச்சாரி சுவாமிகளின் தவசு உபகாரம் செய்கிறது என்பீர்களோ அதுவுமில்லையே. ஆத்மாவைப்பற்றிச் சிரவணம் செய்தற்கு மற்றவர்களுக்கு சாஸ்திரமிடம் கொடுக்கவில்லையே மற்றவர்களெல்லாம் பார்ப்பார்களுக்கு ஊழியம் செய்வதுதானே ஆத்மார்த்தம். அதைப் பற்றி இங்கு விரித்துச் சொல்ல விபரத்தை முடிக்கும் சமயமாகி விட்டதால் நிறுத்த வேண்டியதாயிற்று. பக்கமிருந்து பிரசாதம் வாங்க ஆசை கொண்ட அய்யம்பாளையம் மிராஸ்தார் தாண்டவராய பிள்ளையானாலும் சுவாமிகளுக்குப் பிச்சைசெய்து வைத்து சம்பத்தையடையலாமென்று நினைத்த சோமசுந்தரம் செட்டியார் அவர்களானாலும் மற்றுமுள்ள எந்தப் பிரபுக்களானாலும் பணத்தை அள்ளிச் செலவு செய்தாலும் பாதத்தில் காணிக்கை கொட்டினாலும் பக்திமேலிட்டாலும் வெள்ளிக் குப்பை பீதாம்பரங்கண்ட கட்டு முட்டு சாமான்கள் சர்வ அதிகாரி தபவிற்று வேண்டிய உபசாரணை இத்தனையும் செய்தாலும் ஒரு பார்ப்பனை நடுவிலே வைத்துக்கொண்டுதானே சங்கராச்சாரி தபசு பேசும். அப்படியல்லவிட்டால் தபசு கலைந்து போகுமே. அவ்விதமிருக்கையில் ஆத்மார்த்தத்திற்கு என்ன தான் தபசு செய்திருக்கும்.

SIVARAMA VILASPRESS, ERODE

திரு. ஈ. வெ. ராமசாமிப்பெரியாரின் உருவப்படம் போட்ட டிம்மி 1/8 சைஸ் லெட்டர் பேப்பர் 100 கொண்ட புக் ஒன்றுக்கு.

உள்நாட்டிற்கு ரூ. 1—8—0

வெளிநாட்டிற்கு ரூ. 2—8—0

முன்பணம் தேவை, தபால்செலவு இரும்.

விலாசம்:— சிவராமவிலாஸ் பிரஸ் ஈரோடு S. I

"பெத்தாபுரம் சில்குபுடவை"

(GOLD WORKS)

சரிகை வேலை

இச்சேலை புதியதாகதயாரிக்கப்பட்டது. இதுவரை இவ்வித சேலை கிடையாது. இதனுடைய அழகும் சரிகையால் பூ. கொடிகள், பார்டா வேலைகளைப் பார்த்தவுடனே மனதிற்கு உற்சாகத்தைத்தந்து ஒரேதடவையில் 4, 5, சேலைகள் வாங்கலாமென மனத்திடம் கொடுக்கும் இதில் பல வித கலர்கள் உண்டு. எந்தக்கலரில் தேவையானாலும் 16-முழம் நீளம் 3-முழ அகலம் சேலை 1க்கு ரூ. 5 12 0

சிகப்பு அல்லிஜான் கொட்டடி	5-12
பனரில் கருப்பு வாழைப்பூ	6-8-0
சகுந்தலா சன்ன வாழைப்பூ	6-8-0
ஹோம்ரூல் பெரியபட்டு முந்தாணி	8-4-0
கோஹர்ஜான் புடவைகள்	7-8-0

அசோகா & கோ,

வேப்பேரி, மதராஸ்.

இருமல் இளைப்பு தீர்ந்துவிட்டது

பழனி ஆர். எம். கே. தாளக பற்பம் சாப்பிடுங்கள்

இருமலுக்கு கைகண்ட மருந்து

எவ்வளவு நாட்பட்ட காசம், க்ஷயம், ஈளை, இருமல் இளைப்பு கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இருந்தாலும் சரி இதில் அவசியம் தீரும்

பித்த நீர் சிரசுக் கேறி கபாலம் கொதித்தே 8 வித பீனிசரோகம் வருகிறது பீனிசரோகம் முத்தியேகாசம், 8 ம் க்ஷயம் 8 ம் இருமல் 16 ம் இளைப்பும் வருகிறது.

நீங்கள் இருமலினால் என்ன கஷ்டப்பட்டாலுஞ்சரி எத்தனையோ மருந்துகள் சாப்பிட்டு இருமல் தீராதிருந்தாலுஞ்சரி உங்கள் இருமலை 6-நாளில் கண்டிப்பாய் நிறுத்திவிடும்; அது எத்தனை வருஷத்திய ரோகமானாலுஞ்சரி பறந்துவிடும்; சீதள மழை பனிகாலங்களில் வரும் ஈளை, இருமல், இரைப்பு, மந்தாரகாசம், ரத்தகாசம், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, அதனால் மார்புவலி, விலாவலி, முள்ளந்தண்வேலி, சிறுப்பீனிசம், மூக்கில் ஜலம் ஒழுகுதல், தும்மல், வயறு உப்பிசம் தலைவலி, காதுகுடைதல், ஜுரம், மூச்சுதிணறுதல், நெஞ்சில் தொண்டையில் கர்மூர் என்ற சப்தம், பூனைபோல் கத்துதல் கூவுதல் நுரையீரல், தாபனம் முதலியவை இதில் அவசியம் தீரும் அநுபவத்தில் கைகண்ட மகா அருமையான மருந்து.

20 நாள் தாளக பற்பம் அனுபானம் தாளிசபத்திரி சூரணத்துடன் விலை ரூ. 25.

ஏழைகளுக்கு ரூ. 12—8—0

சர்டிபிகேட்

நான் பட்ட கஷ்டத்திற்கு அளவே இல்லை

அன்புமறவாத அய்யா ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, டாக்டர் அவர்களுக்கு சிங்கப்பூர் ஹாஜிலேயின் 48. செ. தொப்பிக்கடை செ. அப்துல் ஹமீது எழுதுவது:—

26—1—27 ல் தாங்கள் அனுப்பிய தாளக பஸ்பம் 6 நாள் சாப்பிட்டு 7 வது நாள் தலைமுழுக இருமலும், கஷ்ட சுவாசமும் நிவர்த்தியாய் விட்டது. இரண்டு வருஷம் நான்பட்ட கஷ்டத்துக்கு அளவே இல்லை. தங்களுடைய தாளக பஸ்பத்தால் என் வியாதி சொஸ்தமானபடியால் என் மனம் ஆனந்தமடைகிறது. இந்த தாக்கல் எழுத வெகுநாள் சென்றுவிட்டதைபற்றி மனவருத்தப்படவேண்டாம். என் சிநேகிதர் ஒருவருக்கு இரண்டு வருஷமாய் இருமலும் கஷ்ட சுவாசமும் இருப்பதால் 20 நாள் சாப்பிடக்கூடிய தாளக பஸ்பம் வி. பி. யில் அனுப்பக்கோருகிறேன்.

(Sd.) செ. அப்துல் ஹமீது, சிங்கப்பூர். 6—12—28.

20-வருஷத்திய இருமல் இளைப்பு சுகம்

எனது தகப்பனாருக்கு இருமல், இளைப்பு 20 வருஷமாயிருந்தது. தங்கள் தாம்பர பஸ்பமும்; தாளக பஸ்பமும் சாப்பிட்டு பூரா சொஸ்தமடைந்துவிட்டது. எங்களூரில் அழுகிக்கிடந்த குஷ்டரோகியும், தங்கள் தாம்பர பஸ்பம் சாப்பிட்டு பூரா சொஸ்தமடைந்ததையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஆகையால் என் வியாதிக்கும் மருந்து வாங்கிச் சாப்பிட நேரில் வந்தேன்.

22—12—28

ந. நா. இ. முகம்மது காசிம், புதூர், இளையாங்குடி P. O.

வைத்திய ஆசிரியர்:

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

"தந்தி விலாசம்: வேலுசாமி" பழனி — சித்த வைத்தியசாலை, பழனி, S I Ry

குடி அரசு புத்தகாலயம்.

மேயோ கூற்று மெய்யா பொய்யா	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம்	0—4—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திருக்குறள் 1330 குறளுக்கு உரையுடன் ...	0—8—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு ...	0—2—0

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்
"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்
விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை

நீம்ஷிங்காரில் துனமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அதிசீவ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கண்டசளாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்துமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தைச்சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா .4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0 6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.

F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8—0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

அனுமதிக்கப்பட்ட மூலதனம் ...	ரூ. 6,00,00,000.
பதிவு செய்யப்பெற்ற ,, ...	ரூ. 3,56,05,275,
வசூலான ,, ...	ரூ. 71,21,055.

இதைப்பற்றி 1929 ஜுன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

தமிழரசு.

ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்.)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தன்க்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

வருட சந்தா	உள்நாடு	ரூ. 3—0—0
	வெளிநாடு	ரூ. 4—0—0

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.
உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

அடுத்த ஜென்மம் என்பது
முடிச்சுமாறிகள் பேச்சு.

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.